பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 12 வியாழக்கிழமை (29.10.2009)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 337

## யுத்தக் குற்றங்கள் குறித்த விசாரணை;

# இலங்கையின் வாக்குறுதியை சர்வதேசம் நம்பவே கூடாது

### மறைக்கும் முயற்சி என்கிறது மனித உரிமைக் காப்பகம்

கொழும்பு, ஒக். 29

அமெரிக்காவின் யுத்தக்குற்ற அறிக்கை குறித்து விசாரணைகளை மேற்கொள்ளப்போவதாக இலங்கை அரசு தெரிவிப்பதை சர்வதேச சமூகம் நம்பக்கூடாது என சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

யுத்தத்தின்போது பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை மறைப்பதற்கான - சர்வதேச சமூகம் மறக்கச் செய்வதற்கான - அவகாசத்தைப் பெறும் முயற்சியே இது என்றும் அது தெரிவித்துள்ளது.

அரசின் உத்தேசக்குழு சுயாதீனமற்றது என்பதாலும் கடந்தகால விசாரணைகள் தோல்வியடைந்துள்ளமையாலும் அரசின் இந்த விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை வலியுறுத்த வேண்டும் என்றும் மனித உரிமைக் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கு அரசு ஒன்பது ஜனாதிபதி ஆணைக் குழுக்களையும் (20ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான ஆங்கிலம் -I,II, முயற்சியாண்மைக் கல்வி பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான வரலாறு -II ஆகிய பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்.

### மிருசுவிலில் உள்ளோர் மீளக்குடியமர்த்தப்படுவர்

யாழ்ப்பாணம், ஒக்.29

மிருசுவில் மற்றும் பனை ஆராய்ச்சி நிலைய இடைத்தங்கல் நிலையங்களில் தங்கியுள்ள மக்களில் ஒரு தொகுதியினர் அவர்களது சொந்த இடங்களில் இன்று மீளக்குடியமர்த்தப்படுவர்.

இதேவேளை இன்று அதிகாலையில் கோப்பாயைச் (20ஆம் பக்கம் பார்க்க)

### 2,088 பேர் நேற்று யாழ். வந்தனர்

யாழ்ப்பாணம், ஒக்.29

வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 641 குடும்பங்களைச் சேர்ந்த 2,088 பேர் நேற்று சாவகச்சேரிக்கு அழைத்து வரப்பட்டனர்.

சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் தங்கவைக்கப்பட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## படகில் வந்த 78 இலங்கையர்களையும் பலவந்தமாக ஆஸி. திருப்பி அனுப்பும்

### அந் நாட்டுப் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.29

சட்டவிரோதமான முறையில் படகு ஒன்றில் ஆவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முயன்ற சமயம் அந்த நாட்டுக் கடற்படையினரால் இடை மறித்துக் கைது செய்யப்பட்டு சுங்க கப்பலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 78 இலங்கையர்களையும் பலவந்தமாக இந்தோனேஷியாவில் இறக்கவேண்டிய நிலைமை ஏற்படலாம் என்று அந்த நாட்டின் பிரதமர் ஹெவின் ரூட் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் ஓசியானிக் வைகிங் என்ற சுங்க கப்பலில் கடந்த 10 நாள்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள 78 இலங்கையர்களும் அதிலிருந்து இறங்க மறுத்து வருகின்றனர்.

அவர்கள் தங்களை விசாரணை செய்வதற்கும் வைத்தியப் பரிசோதனை செய்வதற்கும் அனுமதிக்க மறுக்கின்றனர் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதனைத் தொடர்ந்து இவர்களைக் குறிப்பிட்ட கப்பலிலிருந்து இறக்குவதற்கான வழிமுறைகள் பற்றி இந்தோனேஷிய - அவுஸ்திரேலிய அதிகாரிகள் பேச்சுகளை மேற்கொள்ளவுள்ளனர் என அவுஸ்திரேலியப் (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய இராணுவ அதிகாரிகள் நேற்று பாதுகாப்புச் செயலருடன் சந்திப்பு

கொழும்பு, ஒக். 29

கொழும்புக்கு விஜயம் செய்துள்ள உயர் கட்டளை கற்கைநெறியை பயிலும் இந்திய இராணுவ அதிகாரிகள் குழு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்து தற்போதைய நிலைமைகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது

பிரிகேடியர் மொனி சன்டி தலைமையிலான 14 அதிகாரிகளை உள்ளடக்கிய இந்த குழுவில் இந்தியாவின் இராணுவ மற்றும் விமானப்படை உயர் (20ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஆரம்ப வரவேற்பு நிகழ்வைப் புறக்கணித்தனர்

யாழ்ப்பாணம், ஒக். 29

'யாழ்ப்பாணம் மாநகரசபையின் முதலாவது அமர்வுக்கு முன்னதாக நேற்று நடைபெற்ற ஆரம்ப வரவேற்பு வைபவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பான உறுப்பினர்கள் 9 பேரும் புறக்கணித்தனர்; நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை.

நல்லூர் கந்தசுவாமி கோயிலிருந்து யாழ். மாநகரசபை வளாகம் வரை கோலாகலமாக நடைபெற்ற வரவேற்பு நிகழ்வை இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் சேர்ந்த எட்டு உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவருமாக புறக்கணித்தனர். (20ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மாநகர சபையின் முதலாவது அமர்வும் வரவேற்பு நிகழ்வும் சிறப்புற நடைபெற்றன

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ்ப்பாணம் மாநகரசபையின் முதலாவது கூட்டமும், அதற்கான ஆரம்ப வரவேற்பு நிகழ்வும் நேற்று சிறப்பாக நடைபெற்றன. ஆரம்ப நிகழ்வு பிற்பகல் 3.30 மணிக்கு தொடங்கியது. சபையின் முதலாவது அமர்வு மாலை 6.30 மணியளவில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் அவரின் புதிய அலுவலகத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.

ஆரம்ப வரவேற்பு வைபவத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். அரச அதிபர் கே.கணேஷ், (20ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.மாநகர சபையின் நேற்றைய முதல் அமர்வின் போது எடுக்கப்பட்ட படங்கள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாநகர சபையின் 25 ஆவது முதல்வர் தலைமையில் வைபவரீதியாக இடம்பெற்ற முதலாவது அமர்வின் முன்னதாக இடம்பெற்ற மாநகரசபை உறுப்பினர்களுக்கான ஆரம்ப வரவேற்பு நிகழ்வைப் புறக்கணித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார் உறுப்பினர்கள் மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவின் முன்றலில் கூடியிருந்த போது எடுக்கப்பட்ட படம்.
*(படம்: லக்ஸ்மன், உமா)*

# பல்கலைக்கழக மாணவர்கள் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

பல்கலைக்கழகங்கள் அரசினால் தனியார் மயப்படுத்தப்படுகின்றமையை ஆட்சேபித்தும் கைது செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர் அமைப்புகளின் தலைவர்களை விடுதலை செய்யக் கோரியும் கொழும்பில் நேற்று பல்கலைக்கழக மாணவர்கள் சுமார் 3 ஆயிரம் பேர் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர்.

கொள்ளுப்பிட்டிப் பகுதியில் இருந்து அலரி மாளிகையை நோக்கி ஊர்வலமாகச் செல்ல முயன்ற மாணவர்களைக் கொள்ளுப்பிட்டிச் சந்தியில் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அங்கு மாணவர்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. கலகம் அடக்கும் பொலிஸாரும் பெருமளவில் அப்பகுதியில் குவிக்கப்பட்டிருந்தனர்.

கொள்ளுப்பிட்டிச் சந்தியில் மாணவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவியை எரித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

# மலேஷியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 66 இலங்கையர்கள் விடுவிக்கப்பட்டனர்

கொழும்பு, ஒக். 29

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டின்பேரில் மலேஷிய அரசினால் தடுத்துவைக்கப்பட்டிருந்த 105 இலங்கை அகதிகளில் 66 பேர் நேற்று புதன்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

ஏனைய இலங்கையர்களும் வெகுவிரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று மலேஷிய அரசு அறிவித்துள்ளது.

விடுதலை செய்யப்பட்டவர்களில் 17 பெண்கள் மற்றும் சிறுவர்களும் அடங்குவர். விடுதலை செய்யப்பட்ட 66 பேரும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதராலயப் பிரதி நிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த இலங்கையர்கள் மலேஷியாவின் பொன்ரெய்ன் மாவட்டத்தின் பெகன் நெனஸ் பிரதேசத்தில் உள்ள 'குடிவரவு சட்டத்தை மீறுவோருக்கான தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். (அ-சி)

# தீவுப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள விவசாயிகளுக்கு உபகரணங்கள்

சண்டிலிப்பாய், ஒக்.29

அண்மையில் தீவுப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள விவசாயிகளினது நலன் கருதியும் உணவு உற் பத்தியை அதிகரிக்கும் நோக்குடனும் அப்பகுதியில் இயங்கும் விவசாய சம்மேளனங்களுக்கு 10 நீர் இறைக் கும் இயந்திரங்களும், 10 தெளிகருவி களும் அதற்கான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

உலக உணவு விவசாய நிறு வனத்தின் அனுசரணையுடன் விவசாயத் திணைக்களம் போரினால் பாதிக்கப்பட்டு மீள் குடியேற்றப்பட்ட விவசாயிகளின் பாவனைக்கு இவற்றை வழங்கியுள்ளது.

தீவுப் பகுதியில் இயங்கிவரும் 8 விவசாய சம்மேளனங்களுக்கு வழங் கப்பட்டுள்ள இந்த நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் விவசாயிகள் அதிக பலனை அடைவர் என எதிர்பார்க்கப் படுகின்றது. இயந்திரத்தைப் பராமரிக்கும் செலவாகக் குறைந்த கட்டணத்தில் இந்த இயந்திரம் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்படும். இதன் மூலம் விவசாயிகள் தங்கள் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் உணவு உற்பத்தியையும் அதிகரிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(50-115)


## சிவாச்சார்ய அபிஷேக அழைப்பு
### குருப்பட்டம் வழங்குதல்

நிகழும் மங்களகரமான விரோதி வருஷம் ஐப்பசி மாதம் 13ம் திகதி (30.10.2009) வெள்ளிக்கிழமை பூர்வ பட்ச துவாசசித்திதியும் பூரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 7.35 மணிமுதல் 9.35 மணி வரையுள்ள சுபலக்கின முகூர்த்த வேளையில் எமது துவிதிய புத்திரன்

**சிரஞ்சிவி பாலஸ்ரீஸ்கந்தராஜ சர்மாவிற்கு**

சிவாச்சார்ய அபிஷேகம் யாழ் கந்தர்மடம் செட்டியந்தாழ்வு ஸ்ரீஞான வைரவ தேவஸ்தானத்தில் நடைபெற இருப்பதால் இத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்
சிவஸ்ரீ நாகேந்திர பாலசுப்பிரமணியக் குருக்கள் கௌரீஸ்வரி தம்பதிகள்

## வாழ்த்து

பாலராஜா - லதா தம்பதிகளின் செல்வப்புதல்வி

**செல்வி நிவோஜா**

அவர்களின் பூப்புனித நீராட்டு விழா இன்று (29.10.2009) வியாழக்கிழமை வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வு சிறப்புற வாழ்த்துவோர்.

(90413)

999/A, K. K. S வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

திரு. திருமதி. கிருபாகரன் (அண்ணா, அண்ணி), மருமகள், கிருத்திகா

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**சச்சிதானந்தம் ஸ்ரீராமச்சந்திரன் (SLPS -1)**
(அதிபர், யா/ஞானசாரியார் கல்லூரி - கரவெட்டி)



எமது கல்லூரியில் பிரதியதிபராக, அதிபராக 15 ஆண்டுகளுக்கு மேல் அரும்பணியாற்றி இன்று அதிபர் தரம் 1 இற்குப் பதவி உயர்வு பெற்றமையை பாராட்டி வாழ்த்துகின்றோம். ஆளுமை, ஆற்றல், ஆதர்ஷ்ய உழைப்புடன் விஞ்ஞான ஆசிரியராய் வித்துவம்தந்து அதிபராய் ஞானாசாரியாரில் என்றும் ஞானச் சுடரேற்றும் வளர்நிதியே. ஸ்ரீராமச்சந்திரனே! அதிபராய் முதலாம் தரம் பெற்றீர்; அயராத உழைப்பால் அரும்பணியாற்றி என்றும் தளராத மனதுடன் கல்விச் சேவை புரிவீர்; ஞானாசாரியாரதனை தரமுடன் காப்பீர்; வாழ்க வாழ்க வளமுடன் என்றென்றும்...

(சி/561924) கல்லூரிச் சமூகம்,
யா / ஞானாசாரியார் கல்லூரி, கரவெட்டி.


# இரத்தினபுரியில் யுவதிக்கு பன்றிக்காய்ச்சல் தொற்று

கொழும்பு, ஒக். 29

பன்றிக்காய்ச்சல் தொற்று நோய்க்கு இலக்காகிய யுவதி ஒருவர் இரத்தினபுரி மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளார் என்று சப்பிரகமுவ மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் கபில கன்னங்கரா தெரிவித்துள்ளார்.

கடந்த 3 நாள்களுக்கு முன்னர் குறித்த இளம் யுவதி சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இதன்போது அவர் இரத்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது பன்றிக்காய்ச்சல் தொற்றுக்கு இலக்காகியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதனையடுத்து பன்றிக்காய்ச்சலுக்கு இலக்கான அந்தப் பெண் ஏனைய நோயாளிகளிடமிருந்து தனியாக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுவருகிறார் என்றும் அவர் கூறினார்.

மேலும் பன்றிக்காய்ச்சல் தொற்றுப் பரவியுள்ள இரத்தினபுரிப் பகுதியில் நோயைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் பணிப்பாளர் மேலும் கூறினார்.

# மரண அறிவித்தல்கள்

## கனகராசா (கார்த்திகேசு) யோகேந்திரா (ஜேர்மனி)



கீரிமலையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகராசா யோகேந்திரா 25.10.2009 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் கோகிலா தேவியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும் கிறிஸ்ரிகா, புருஷோத்மன், நிதர்சன், நர்மதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகமகேந்திரா (திருகோணமலை), க.இராசேந்திரா (இணுவில்), திருமதி புவனேந்திரா - சோமசுந்தரம் (அளவெட்டி), க.விஜேந்திரா (வவுனியா), க.பாலேந்திரா (ஜேர்மனி), க.ரவீந்திரா (லண்டன்), திருமதி சிவனேந்திரா - சக்திவேல் (சிங்கப்பூர்), திருமதி தவேந்திரா - கனகசபை (சிங்கப்பூர்), திருமதி ஞானேந்திரா-பாலகுமார் (இந்தியா), க.கஜேந்திரா (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தாயகத்திலிருந்து - திருமதி நல்லம்மா கனகராசா (தாய்) 0213213471
க.கனகமகேந்திரா (அதிபர், திருகோணமலை) 0262227414
க.இராசேந்திரா (இணுவில்) 0217900000
திருமதி புவனேந்திரா சோமசுந்தரம் (அளவெட்டி)
க.விஜேந்திரா (வவுனியா)
} சகோதரர்கள்
(90350)

## வேதநாயகம் துரைரெத்தினம்
(மகேஸ்வரி வித்தியாசாலை முன்னாள் உப அதிபர், திருநெல்வேலி றோ. க. த. பாடசாலை இளைப்பாறிய அதிபர்)



முதலியார் லேன், நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர் வேதநாயகம் துரைரெத்தினம் நேற்று (28.10.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - எலிசபெத் தம்பதிகளின் அன்பு மகனும், திரேசம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரெலா ஜெயமலர் (பிரான்ஸ்), ஸ்ரேலா ஜீவமலர் (ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற கிறிஸ்ரி கருணாகரன், கிறிஸ்ரி பாஸ்கரன், கிறிஸ்ரி கிருபாகரன் (பிரான்ஸ்), கிறிஸ்ரி அருணாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிறிஸ்ரி லூஜிஸ் (பிரான்ஸ்),ஜோசேப் விக்னராஜா, அலெக்சாண்டர் (தபால் நிலையம் யாழ்ப்பாணம்), றெஜினி, தயாளினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரோசன், நிக்ஸன், சுஜீவா, றெக்னோ, றெனால்ட், ஜோயேல், எலோடி, டானி, சலோமி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிககப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நல்லூர் தெற்கு,*
*முதலியார் லேன்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

## திருமதி சிவானந்தசுந்தரம் தெய்வாம்பிகை
(மணி - ஆசைஆச்சி)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், அல்வாய், கொழும்பு ஆகியவற்றை வதிவிடமாகவும் தற்போது ஓமானில் வசித்து வந்தவருமான திருமதி சிவானந்தசுந்தரம் தெய்வாம்பிகை (மணி) நேற்று (28.10.2009) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவானந்தசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தையல்முத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - வள்ளியம்மை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான திருமதி அப்புத்துரை திலகவதியார், சிவசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் குகாம்பிகை (ரமணி - கொழும்பு), சிவகணேசன் (ரமணன் - ஓமான்), சிவசங்கரன் (ராகவன் - ஓமான்), அம்பிகை (ரஜனி - ஜேர்மன்), ராதாம்பிகை (ராதா - கனடா), நவாம்பிகை (ராஜி - டென்மார்க்), காலஞ்சென்ற சந்திரவதனா (ஜீவா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ஆனந்தகுமார் (BOND Master), முத்துமயில்வாகனம், தனபாலசிங்கம், ஸ்ரீநந்தலோஜன், சந்திராதேவி, ஜெயராணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சாந்தகுமாரி, சதானந்தவேல், நிர்மலாதேவி, நித்தியானந்தமனுநீதி, கிருபானந்தமனுநீதி, நளாயினி ஆகியோரின் பாசமிகு சிறியதாயும் கோபாலராஜன், வைதேகி, மகிந்தன், அபிராமி, ரிஷிபி, புருசோத், சிவராகுலன், வைஷ்ணவி, ரிஷேக், ராகவி, பிரதிகா, மதுஷன், ரமணிதரன், சுவாபி, நிருஷன், கேஷினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஓமானில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நிர்மலாதேவி 0217210720
சுழிபுரம் மத்தி
சி.சிவகணேசன் (மகன் - ஓமான்)
0096824811604/ 0096895265531
சி.சிவசங்கரன் (மகன் - ஓமான்)
0096899317836

தகவல்:
திருமதி கு.ஆனந்தகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## யுத்த வெற்றிக்கான உரிமைக்கு போட்டி போடும் தரப்புகள்!

பொது எதிரிகளான புலிகள் மீதும் அவர்களை ஆதரித்து நின்ற அச்சமூகத்தின் மீதும் மிகக் கொடூரமாக அடக்கு முறையை ஏவிவிடுவதில் ஒன்றுபட்ட தெற்கின் 'தேசப் பற்றாளர்கள்' இப்போது கன்னை பிரிந்து அதிகாரத்துக்காக அடிபடத் தயாராகி விட்டார்கள்.

இப்போதைய முறுகல் தீவிரமடையுமானால், கடந்த மே மாதத்தில் யுத்தம் உச்சக்கட்டத்தில் இருந்தவரை அரங்கேறிய பெருங் கொடூரங்கள் பற்றிய உண்மைகள் மெல்ல மெல்ல வெளிச்சத்துக்கு வரும் என நம்பலாம். கூட்டுச் சேர்ந்து குரூரம் புரிந்தவர்கள் அணி பிரிந்தால், புதையுண்ட இரகசியங்கள் அம்பலத்துக்கு வரத் தொடங்கும் என்று நம்புவதில் தப்பில்லையல்லவா?

விடுதலைப் புலிகளுக்கு மேலான இராணுவ வெற்றியில் அரசியல் குளிர்காய எத்தனித்த ஜனாதிபதி மஹிந்தருக்கு, அந்த வெற்றி மீதான விவகாரத்தில் உரிமையில் பங்கு கோருபவர்களே ஜனாதிபதியின் அரசியல் செல்வாக்கிலும் பங்கு கேட்பவர்களாகப் போட்டி போடத் தயாராகி விட்டனர்.

இது தென்னிலங்கை அரசியலில் புதிய திருப்பம் தான். தெற்கில் தேர்தல் சூடு பிடிக்கத் தொடங்கிய சமயத்தில் இதுவும் சேர்ந்து அரசியல் கலகலப்பை உண்டுபண்ணி நிற்பது புதிய போக்குத்தான்.

அரசியலுக்கு வருவார், வரமாட்டார் என்று இரு பக்கங்களாலும் பேசப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதியும், முப்படைகளின் தற்போதைய சிரேஷ்ட அதிகாரியுமான ஜெனரல் சரத் பொன்சேகா தாம் அரசியலுக்குள் நுழைவது பெரும்பாலும் உறுதி என்பதைக் கோடிகாட்டி விட்டார்.

அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் ஜெனரல் பொன்சேகா அங்கு பௌத்த விகாரை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில் ஆற்றிய உரையும் -

அங்கிருந்தபடி, தாய்லாந்தில் தங்கி நின்ற எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசியில் அவர் நீண்ட நேரம் உரையாடினார் என்று வெளியான செய்தியும் -

ஜெனரல் சரத் பொன்சேகா அரசியலுக்கு நுழைவாரா என்று கேள்வி எழுப்பி வந்தோரின் சந்தேகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டன.

*''இப்போது யுத்தம் முடிந்துவிட்டது. தமிழ் மக்கள் வாழ்வதற்கான சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். மீண்டும் ஒரு பிரபாகரன் உருவாகக் கூடிய சூழலை ஏற்படுத்தும் நிலைமைக்கு நாம் பங்களிக்கக் கூடாது. நாடு பிழையான பாதையில் செல்லவும் நாம் அனுமதிக்க முடியாது. அப்படி நடக்குமானால் எனது சீருடையைக் களைந்துவிட்டு, அந்த நிலைமையைச் சரிப்படுத்த நான் தயார்.!''*

- இப்படி மேற்படி நிகழ்வில் பங்குகொண்ட அமெரிக்க வாழ் இலங்கைச் சமூகத்தின் பலத்த கரகோஷத்துக்கு மத்தியில் அறிவித்திருக்கிறார் ஜெனரல் பொன்சேகா.

இதை, தென்னிலங்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரக் கட்டமைப்பில் தற்போது வரை திடீரென ஓரங்கட்டப்பட்ட ஜெனரல் பொன்சேகா, ஜனாதிபதியின் அரசியல் தலைமைத்துவத்துக்கு எதிராக - மாற்றாக - தமது தனிப்பட்ட அரசியல் வாழ்வைத் தொடக்குவதற்குத் தயாராகிவிட்டார் என்பதற்குக் கட்டியம் கூறும் அறிவிப்பாகக் கருதமுடியும்.

இதில், முக்கியம் என்னவென்றால் இதுவரை, எதிர்க்கட்சித் தரப்புகளிலிருந்து ஆள்களைப் பிரித்துத் தன்பக்கம் இழுத்து, அதன் மூலம் எதிர்க்கட்சிகளைப் பலவீனப்படுத்துவதுடன் தமது அரசுத் தலைமையைப் பலப்படுத்தி வந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு, அடுத்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் வரப் போகின்றது என்றதும் நிலைமை மாறிப்போயிருப்பதுதான்.

இப்போதுவரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரக் கட்டமைப்பில் உயர் பதவியிலும், அந்தஸ்திலும் இருந்து காரியமாற்றி, அதன்மூலம் செல்வாக்குப் பெற்ற ஒருவரை - புலிகளைத் தோற்கடித்த இராணுவத் தளபதி எனத் தென்னிலங்கையால் மெச்சப்படும் பிரமுகரை - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வலது கையாக இதுவரை பணியாற்றிய ஒரு மூத்த படை அதிகாரியை - அவருக்கு எதிரான துரும்புச்சீட்டாக எதிரணிகள் தூக்கிப் போடும் காய் நகர்த்தலை முன்னெடுத்திருப்பதுதான் முக்கிய திருப்பம்.

சிறுபான்மையினரான தமிழர்களை ஓரங்கட்டுவதன் மூலம் தென்னிலங்கையில் பேரினவாதிகளான சிங்களவர்களிடம் ஆதரவையும், செல்வாக்கையும் தக்கவைத்து அதன்மூலம் தமது அரசியலை வெற்றிகரமாக நடத்தலாம் என்ற ஒரே நம்பிக்கையில் தனது கடையை விரித்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, அதே வழியில் வந்து 'செக் - மேட்' போட்டு, தடுத்து நிறுத்தவே, முன்னாள் இராணுவத் தளபதியை முன்னால் கொண்டுவந்து தள்ளியிருக்கின்றன தென்னிலங்கைத் தரப்புகள்.

இந்தச் சவாலைச் சந்திப்பதற்காக - சமாளிப்பதற்காக - 'பழைய குருடி கதவைத் திறவடி!' என்ற பாணியில் தமிழர்கள் பக்கமும் தமது ஆதரவுக் கரங்களைத் திருப்ப வேண்டிய இக்கட்டுக்குள் வந்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

தென்னிலங்கை அரசியல் தலைமைகளிடையே இப்போது உருவாகியுள்ள போட்டாபோட்டி முறுகல் நிலை, இதுவரை தாம் உதாசீனம் செய்து, புறக்கணித்து, ஒதுக்கிய தமிழர்கள்பால் வேறு வழியின்றிக் கை நீட்ட வேண்டிய கட்டாயத்தை அவற்றுக்கு உருவாக்கி நிற்கின்றது. இதுதான் காலத்தின் கோலம் என்பதா?

## நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் நடமாடும் சேவை அடுத்த மாதம் வடமராட்சியில்

யாழ்ப்பாணம், ஒக்.29

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் செயற்படும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கான செயற்திட்டம் யாழ்ப்பாணத்தில் நடமாடும் சேவை ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் இந்த நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கான நடமாடும் சேவையை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி பிரதேச செயலகத்திற்கான நடமாடும் சேவையை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் சேவையில் பல்வேறுபட்ட சட்ட மற்றும் நிர்வாக ரீதியான பிரச்சினைகளுக்கான தீர்வினை பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள காணிப்பிரச்சினை, இன்னும் தீர்க்கப்படாமல் காணப்படும் நட்ட ஈடு, நிவாரணம், வீடமைப்பு போன்ற பிரச்சினைக்களுக்கான ஆலோசனைகள் வழங்கப்படுவதோடு சுனாமியால் ஆவணங்களை இழந்த மக்களுக்கு தேசிய அடையாள அட்டை, வயது முதிர்ந்தோர் அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரம் என்பனவற்றுடன் பதிவுத்திருமணங்களை மேற்கொண்டுஅது தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மேலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பான முறைப்பாடுகளையும், இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான முறைப்பாடுகளும் பெற்றுக்கொள்ளப்பட்டு அது தொடர்பான உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும் சுனாமி விஷேட மத்தியஸ்த சபையினால் தீர்த்துக்கொள்ளப்படக்கூடிய பிணக்குகளையும் இங்கு ஆற்றுப்படுத்த முடியும்.

இந்த நடமாடும் சேவையில் நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சேவைகளை வழங்குவதற்காக பின்வரும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் இணைந்து செயற்படவுள்ளன.

* மகளிர் மற்றும் சமூக சேவைகள் அமைச்சு.
* நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு.
* இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு.
* இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.
* மாகாண காணிகள் ஆணைக்குழு.
* பொதுச்சேவைகள் ஆணைக்குழு
* தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை.
* சுனாமி விசேஷ மத்தியஸ்தசபை.
* மீன்பிடித்திணைக்களம்.
* பதிவாளர் நாயகம் திணைக்களம்.
* மாவட்டச் செயலகம்
* பிரதேச செயலகம்.

## விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கு

யாழ்ப்பாணம், ஒக்.29

யாழ்.மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு சீட்கோ (SEEDCO) நிறுவனம் ஊடாக விதை உருளைக்கிழங்கு வழங்கப்படுகிறது.

எனவே முற்பதிவு செய்தவர்கள் உடன் திருநெல்வேலியில் உள்ள 'சீட்கோ' நிறுவனத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளன தலைவர் இ.முதலியார் அறிவித்துள்ளார். (50-302)

## குடாநாட்டில் இரண்டொரு தினங்கள் மழை தொடரும் என்கிறது வானிலை அவதான நிலையம்

நல்லூர், ஒக்.29

குடாநாட்டில் இரண்டொரு தினங்கள் மழை தொடரும். எனினும் வடக்கு-கிழக்குப் பகுதியில் உலர் காற்று வீசுவதால் தொடர்ச்சியாக மழை பெய்யக்கூடிய சாத்தியங்கள் குறைவாகவே உள்ளன என திருநெல்வேலி வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முதல் நேற்று புதன்கிழமை காலை 8.30 மணிவரை 10.2 மில்லி மீற்றர் மழை பெய் துள்ளதாகவும் இந்த மழை இரண்டு தினங்கள் வரை தொடரலாம் எனவும் அவர் கூறினார்.

இந்த மாதத்தில் 240 மில்லி மீற்றர் மழை கிடைக்க வேண்டும். ஆயினும் 16.9 மில்லி மீற்றர்தான் கிடைத்தது எனவும் தெரிவித்த அவர் அடுத்த சிலநாள்களில் கிடைக்கக்கூடிய மழையின் தன்மையைப் பொறுத்தே விவசாய நிலைமைகள் பற்றிக் கூற முடியும் எனவும் தெரிவித்தார்.

ஒக்ரோபரில் மழை குறைந்த நிலை 1984இலும், 1974இலும் காணப்பட்டதாகவும், 1974 ஒக்ரோபரில் 55.5 மில்லி மீற்றரும் 1984 ஒக்ரோபரில் 36.9 மில்லிமீற்றர் மட்டுமே மழை பெய்ததாகவும் இம் மாதத்திலும் அது போன்றஒருநிலையே காணப்படுவதாகவும் கடந்தகாலப் பதிவுகளைப் பார்க்கும்போது இம் முறை மழை பிந்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (50-111)

## மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட 2 ஆயிரத்து 348 பேர் நேற்று யாழ்.வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், ஒக்.29

வவுனியா முகாம்களில் தங்கியிருந்த மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட இரண்டாயிரத்து 348 பேர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 2 ஆயிரம் பேரும் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்ட 100 மாணவர்களும், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மாரும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் அடங்கிய 248பேருமே இவ்வாறு அழைத்து வரப்பட்டனர்.

யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்ட 100 மாணவர்கள் அக்கல்லூரியின் அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுப் பாடசாலை விடுதியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்தவர்கள் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலிலும், தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் சாவகச்சேரி சிவன்கோயில் கலாசார மண்டபத்திலும் தங்கவைக்கப்பட்டு அவர்களின் சொந்த இடங் களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (50-6-14)

## கோப்பாய் நலன்புரி நிலையத்திலிருந்து 328 பேர் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஒக்.29

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து கோப்பாய் நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்களில் ஒரு தொகுதியினர் நேற்று விடுவிக்கப்பட்டனர். 136 குடும்பங்களைச் சேர்ந்த 328 பேரே இவ்வாறு விடுவிக்கப்பட்டனர்.

இம்மக்களை விடுவிக்கும் நிகழ்வு நேற்றுக்காலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் கிராம சேவகர் எஸ்.செல்வச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் திருமதி மலர் சின்னையா ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த முகாமில் 405 பேர் தங்கவைக்கப்பட்டிருந்தனர். இவர்களுள் மூவர் வேறு முகாமுக்கு மாற்றப்பட்டதுடன் உறவினர்களால் பொறுப்பேற்கப்பட்ட 136 குடும்பங்களைச் சேர்ந்த 328 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். உறவினர்கள் இல்லாத ஏனைய 74 பேரையும் ஒரு மாதகாலத்துக்குள் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அரச அதிபரும் உறுதியளித் துள்ளனர்.

விடுவிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடித் தேவைகளுக்காக 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டதுடன் 20 ஆயிரம் ரூபா அவர்களின் பெயரில் வங்கியில் வைப்புச் செய்யப்படும் என்றும், அவர்களுக்கு ஆறு மாத காலத்துக்கு உலருணவு வழங்கப்படும் என்றும் அவர்களின் வாழ்வாதாரத்துக்குத் தேவையான நடவடிக்கைகள் யாவும் மேற்கொள்ளப்படும் என்றும் அங்கு உரையாற்றிய சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அரச அதிபர் கே.கணேஸும் தெரிவித்தனர்.

இதேவேளை முகாமில் தங்கியுள்ள உறவினர்கள் இல்லாதோர் தம்மை விடுதலை செய்யவேண்டும் என்றும், தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவுகளை விடுவிப்பதற்கும் பார்வையிடுவதற்கும் வசதிகள் செய்து தருமாறும் மக்கள் அமைச்சரிடம் கோரிக்கைவிடுத்தனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பாதுகாப்பாகவும் நலமாகவும் உள்ளனர் எனக் கூறிய அமைச்சர் அனைவரையும் ஒருமாத காலத்தினுள் விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். (50-6-14-224)

### நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 13 | 30.10.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | துவாதசி |
| | பி.இ. 01.32 வரை |
| நட்சத்திரம்: | பூரட்டாதி |
| | மாலை 06.02 வரை |
| சுபநேரம்: | 06.03 - 07.33 வரை |
| ராகுகாலம்: | 10.33 - 12.03 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பீடத்தின் 30 ஆம் அணியைச் சேர்ந்த மாணவன்

**விக்னராஜா கௌரிபாலன்**

அவர்கள் அகால மரணமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(90413)

பிரிவால் துயருறும்

28ஆம் அணி மாணவர்கள், யாழ்.மருத்துவபீடம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பீடத்தின் 30 ஆம் அணியைச் சேர்ந்த மாணவன்

**விக்னராஜா கௌரிபாலன்**

அவர்களின் திடீர் மறைவையிட்டு ஆழ்ந்த கவலையடைகிறோம். அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(90412)

மருத்துவ மாணவர் ஒன்றியம்

மருத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

## வலயக் கல்வி அலுவலகம் - தென்மராட்சி
## கேள்வி அறிவித்தல் - 2009

1. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு உலக வங்கியிடமிருந்து கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கென செலவுக்கான மானியத்தினைப் பெற்றுள்ளது. அதன் ஒரு பகுதியை 'கற்கைத் தாரகை' (Learning Star), 'அறிவுக் கோபுரம்' (Tower of Knowledge) ஆகிய கட்டுமான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கான நிர்மாண வேலை ஒப்பந்தத்திற்கான கொடுப்பனவுகளுக்காகப் பெற்றுள்ளது. அந்நிதி ஒதுக்கீட்டில் இருந்து பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
2. ஒப்பந்தக்காரர் இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகம் உள்ளவராகவும் பதிவுப் புத்தகம் 2009 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
3. கேள்விப் பத்திரங்கள் 2009.10.29ஆம் திகதி தொடக்கம் 2009.11.04 ஆம் திகதி பி.ப 2 மணிவரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் எம்மால் 2009.11.05 ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினமே எமது அலுவலகத்தில் மு.ப 11 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும்.
4. கேள்விப் பத்திரங்களுக்கான மீளளிக்கக்கூடிய மற்றும் மீளளிக்க முடியாத வைப்புப் பணத்தை தென்மராட்சிக் கல்விவலயக் கணக்குப் பகுதியில் செலுத்துவதன் பேரில் கேள்விப் பத்திரப் படிவங்களை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக் கொள்ளவும்.

| இல | பாடசாலையின் பெயரும், வேலை விவரமும் | மீளளிக்க முடியாத வைப்புப் பணம் | மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 1 | யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி நூலகக் கட்டட மிகுதி வேலை | 250.00 | 2,300.00 | M 7 |

5. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கைப் பத்திரங்களில் ஒன்றை மூலப்பிரதியாகவும் மற்றையதை பிரதியாகவும் கொள்ள வேண்டும்.
6. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும், கேள்விப் பத்திர இணைப் பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையில் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரரின் முத்திரை இடப்பட்டு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்னர் இடப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அன்றைய தினம் எமது அலுவலகத்தில் மு.ப 11 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும்.
8. கேள்விப் பத்திரம் பெற வரும் ஒப்பந்தக்காரர், பாடசாலை வேலைகள் பகுதி பொறியியலாளரின் கேள்விப் பத்திரம் பெறுவதற்கான அனுமதிக் கடிதத்துடன் வருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக்கல்வி அலுவலகம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.

(A/சி)

திரு. கு. [illegible]
வலயக் கல்விப் [illegible],
தென்மராட்சி.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.29

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் ச.ஸ்ரீராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.புஸ்பலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (50-6)

## காரைநகர் அரசினர் வைத்திய சாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி நியமனம்

காரைநகர் அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த சேகு இப்ராகிம் மர்சூத் என்பவரே நிரந்தர வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையும் தற்போது அதிகரித்து வருகின்றது. தினமும் 250 இற்கு மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கடந்த மாதம் 2450 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை - சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறப்படுகின்றது. (50-250)

## தவறிவிட்டது

மந்துவில் வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த இராமச்சந்திரன் சிவவதனி என்பவருடைய அடையாள அட்டை (646454158V) அரியாலைக்கும் கைதடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் காணும் முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

டயானா சலூன், கைதடிச்சந்தி, கைதடி
அல்லது 0776649145, 0772955097

## தொல்புரத்தில் துப்புரவு செய்த வீதிகளில் கழிவுகளை கொட்டும் விஷமிகள்

சுழிபுரம், ஒக்.29

தொல்புரம் கிராமத்தில் வீதிகளை துப்புரவு செய்து சீராக்கும் வேலைகள் நடைபெற்று வரும் வேளையில் சில விஷமிகளால் கழிவுப் பொருள்களை இரவோடு இரவாக துப்புரவு செய்த இடங்களில் கொட்டி அசிங்கப் படுத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் முதியோர் இல்லத்திற்கு அருகாமையாக உள்ள வீதிகள், ஒழுங்கைகளில் இடம்பெற்றுள்ளது.

சுழிபுரம் பிரதேச சபையினர் உரப்பைகளில் கட்டி ஒரு பொது இடத்தில் வைத்தால் சபை உழவு இயந்திரத்தில் ஏற்றி கழிவுப் பொருள்களை எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டும் என தெரிவித்துள்ளனர்.

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வராசன சமூக நிலையத்தினர் கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்த சபையினருக்கு வேண்டிய உதவிகளை செய்து வருகின்றனர்.

நிலைய அங்கத்தவர் தத்தம் வளவுகளிலுள்ள கழிவுப் பொருள்களை பொதி செய்து ஒரு பொது இடத்தில் வைத்து வீதி சுத்திகரிப்பு ஊழியர்கள் மூலமாக அப்புறப்படுத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

கழிவுப் பொருள்களை வீதிகளில் கொட்டி வழிப் போக்கர் மற்றும் மக்களுக்கு இடையூறு செய்ய வேண் [illegible] நிர்வாகத்தின் வேண்டியுள்ளனர். (1-28)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் நிதி உதவியாளராகக் கடமையாற்றும் வீரகத்திப்பிள்ளை கணேசலிங்கம் அவர்களின் அன்பு தகப்பனார்

**அமரர் சின்னத்தம்பி வீரகத்திப்பிள்ளை**

அவர்கள் 2009.10.28ஆம் திகதி அன்று காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், தெல்லிப்பழை. (90409)

பிரதேச செயலாளரும், சகல நலன்புரிச் சங்க அங்கத்தவர்களும்.

## கண்ணீர் அஞ்சலி



**விக்னராஜா கௌரிபாலன்**

நல்லதொரு நண்பனாய்
நம் பயணத்தில் இணைந்தவனே...!
நம்ப முடியவில்லை உன் பிரிவை,
நெஞ்சம் கனத்து - உன்
நினைவுகளை மீட்டுருக,
கண்கள் பனித்துக் குளமாக - உந்தன்
உடலம் முன் நிற்கின்றோம்...
ஏன் பிரிந்தாய் எமை எல்லாம்.....?
பல் திறமை கொண்டவன் நீ
கல்மனமாய் நமை பிரிந்து
கனதூரம் ஏன் சென்றாய் கௌரி?

(90411)

30ஆம் அணி

மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா வேலாயுதபிள்ளை

சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வேலாயுதபிள்ளை 25.10.2009 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - கந்தையா தம்பதியினரின் புதல்வனும் பூமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஆனந்தகுமார் மற்றும் வசந்தகுமாரி, மதனகுமார் (நிகொட்), ஞானகுமார், றமேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாவகச்சேரி வடக்கு,*
*மீசாலை.* (90414)

தகவல்: வே.மதனகுமார் (மகன் - K.V.மதனா).

### திருமதி செல்லமுத்து வீரசிங்கம்



இல.19, றக்கா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லமுத்து வீரசிங்கம் நேற்று (28.10.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மயிலு தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் நிர்மலா (மாலா), றமிலா, றஞ்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மரியநேசன், யோகராசா, ஞானமணியி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் றொஜாலினி, சாருஜன், நிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.10.2009) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித திரேசா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் புனித கெஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.19, றக்கா வீதி, சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.* (90416)

தகவல்: மரியநேசன் (மருமகன்), யோகராசா (மருமகன்).

### விக்னராஜா கௌரிபாலன்
(யாழ்.மருத்துவபீட 2 ஆம் வருட மாணவன்)



ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட விக்னராஜா கௌரிபாலன் நேற்று (28.10.2009) புதன்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் விக்னராஜா - இராசநாயகி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் கௌசலா, கார்த்திகைபாலன் (1ஆம் வருடம், கலைப் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), சியாமளா, சிவபாலன், திருக்குமரன், திருவரங்கன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நித்தியானந்தன், கணேசமூர்த்தி, செல்லையா, இலங்கைநாயகி (மருந்தாளர்,யாழ்.மாநகரசபை) ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் மங்கையர்க்கரசி, சந்திரலிங்கம் (பிரதேசசபை, மல்லாகம்) ஆகியோரின் அன்பு மருமகனும் நடராஜா, நாகம்மா, ராமசாமி, சுந்தராம்பிகை ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2009) வியாழக்கிழமை நண்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*17/7, ஐயனார் கோயில் வீதி,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.* (90361)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ-9 வீதியூடாக நோயாளர் அம்புலன்ஸ் சேவை அமைச்சர் டக்ளஸ் நேற்று ஆரம்பித்து வைத்தார்

யாழ்ப்பாணம்,ஒக்.29

ஏ-9 தரைப்பாதையூடாக அம்புலன்ஸ் மூலம் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு நோயாளர்களை அனுப்பி வைக்கும் செயற்பாடுகள் நேற்றுப் புதன்கிழமை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வைபவ ரீதியா ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஏ-9 தரைப்பாதையூடாக மட்டுப்படுத்தப்பட்ட வகையில் தற்போது பயணிகள் போக்குவரத்து உட்பட ஏனைய சில போக்குவரத்து நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் தற்போது அம்புலன்ஸ் மூலம் நோயாளர்களை யாழ்.குடாநாட்டிலிருந்து பிற மாவட்டங்களுக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பிவைக்கும் நடவடிக்கையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பெருமுயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கதாகும்.



இந்த நிலையில் நேற்று சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவைக்குரிய அம்புலன்ஸ் வாகனம் மூலம் நேற்றைய தினம் இ.சீவரத்தினம் என்ற நோ[illegible] மேலதிக சிகிச்சைக்காக கொ[illegible] மருத்துவமனைக்கு அ[illegible]டுள்ளார்.

ஏ-[illegible]ாக இந்த அம்புலன்ஸ் சேவை[illegible]துவதற்கு சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் [illegible]வுக்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50)

# சொந்த இடத்தில் குடியமர்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு கோரிக்கை

## கோப்பாய் கிருஷ்ணன் கோயிலடி முகாம் மக்கள் முன்வைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.29

சொந்த இடங்களில் மீளவும் குடியமர அனுமதி பெற்றுத்தர வேண்டும் என்று கோப்பாய் கிருஷ்ணன் கோயிலடி நலன் புரி முகாமைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஈ.பி.டி.பி.யின் தேசிய அமைப்பாளர் ப.சீவரத்தினம், நல்லூர் தொகுதி அமைப்பாளர் பாரதி ஆகியோர் இந்த மக்களுடன் அண்மையில் கலந்துரையாடிய போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அந்த மக்கள் முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு:

நலன்புரி நிலையங்களில் வாழுகின்ற மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்பாடு அடையச் செய்ய வேண்டும்.

தற்போது தாம் வாழும் வீடுகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்பனபோன்ற கோரிக்கைகளே முன் வைக்கப்பட்டன.

சிவராசா தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், ப.சீவரத்தினம் உரையாற்றுகையில்:

எதிர்காலத்தில் ஈ.பி.டி.பி. கட்சியைப் பலப்படுத்துவதனூடாக சகல மக்களினது பிரச்சினைகளையும் சுமுகமாகத் தீர்க்க முடியும் - என்றார். (204-45)

# நல்லூர்ப் பிரதேச சிறுவர் தின விழா

நல்லூர், ஒக்.29

நல்லூர்ப் பிரதேச செயலகமும் பிரதேச சிறுவர் சபையும் இணைந்து நடத்தும் சர்வதேச சிறுவர்தின விழா எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறும்.

நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் மு.ப. 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி கே.ரி.சிவபாதம், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.மோகனேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்கிறார்கள்.

சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும் (50-111)

# அருகில் இருந்த பெண்ணிடம் குசலம் விசாரித்தவர் அவரின் கையிலிருந்த 50ஆயிரம் ரூபாவை அபகரித்தார்

கோப்பாய், ஒக்.29

மினிபஸ்ஸில் பயணம் செய்த பெண்ணின் கைப்பையிலிருந்த 50ஆயிரம் ரூபா பணம் தந்திரமாகக் களவாடப்பட்ட சம்பவம் யாழ்.அச்சுவேலி சேவையில் ஈடுபடும் மினி பஸ்ஸில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றுள்ளது.

பிரஸ்தாப பெண் வங்கியில் இருந்து 50 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்து வந்ததாகவும் வீடு திரும்புவதற்காகக் குறித்த பஸ்ஸில் பயணம் செய்தபோது அருகில் இருந்த பெண் பேச்சுக்கொடுத்து நட்புறவானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வேளையில் பஸ் நடத்துநர் இருபாலைப் பகுதியில் பஸ் கட்டணத்தைக் கேட்டபோது, பணத்தை எடுப்பதற்காக கைப்பையைப் பார்த்தபோது அது திறந்த நிலையில் பணமற்றுக் காணப்பட்டதையடுத்து பெண் கூக்குரலிட்டார்.

பஸ் நடத்துநர் உடனடியாக பஸ்ஸின் கதவை மூடி இருபாலைப் பகுதிப் படையினரிடம் சம்பவத்தை முறையிட்டதைத் தொடர்ந்து படையினர் பயணிகளைச் சோதனையிட்டனர்.

அவ்வேளையில் பெண்ணிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டுவந்த பெண்ணிடம் அப்பணம் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து மேலதிக விசாரணைக்காக கோப்பாய்ப் பொலிஸாரிடம் படையினர் பெண்ணைக் கையளித்துள்ளனர். (1-72)

# யாழ்.மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்; சில தினங்களில் வழங்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்.மாவட்டத்தில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களுக்கு இன்னும் சில தினங்களில் நிரந்தர நியமனம் வழங்கப்படவிருக்கின்றது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத்தகவலைத் தெரிவித்தார்.

தீவக வலயத் தொண்டர் ஆசிரியர்களுக்கும் அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று ஊர்காவற்றுறையில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் அமைச்சருடன் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் கலந்துகொண்டார்.

இங்கு உரை நிகழ்த்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா - கடந்த காலங்களில் தொண்டர் அடிப்படையில், மிகவும் கஷ்டமான நிலையில் பெரும் அர்ப்பணிப்புகளுடன் ஆசிரியப் பணியில் ஈடுபட்டு வந்துள்ள யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான ஆசிரிய நியமனங்கள் இன்னும் சில தினங்களில் வழங்கப்படவுள்ளன. அவர்களை இந்நியமனங்களைப் பெற்று இப்பகுதி மாணவர்களது கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு அக்கறையுடன் உழைக்க முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

நியமனங்கள் வழங்கப்படவுள்ள தொண்டர் ஆசிரியர்களை வலய ரீதியாகச் சந்தித்து அவர்களது பெயர், விவரங்களைத் தான் உறுதிப்படுத்தி வருவதாகத் தெரிவித்த அமைச்சர், நியமனங்கள் கிடைத்த பின்னர் 5 வருட காலத்திற்குள் டிப்ளோமா பட்டம் பெற்று உரிய முறையில் தங்களது திறமைகளைப் பூர்த்தி செய்து கொண்டு நிரந்தர நியமனங்களை நாடிச் செல்ல இயலும் என்றும் தெரிவித்தார். (1)

# யாழ்.திருமறைக் கலாமன்றம் நடத்தும் கிராமியக் கலைவிழா சனியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.29

அருகி வருகின்ற எமது மரபுவழிக் கலைகளுக்கு புத்துயிர் அளிக்கும் நோக்கோடு யாழ்.மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களிலும் அண்மைக் காலத்தில் திருமறைக் கலாமன்றத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த செயற்றிட்டத்தின் வெளிப்பாடாக நாளை மறுதினம் சனிக்கிழமை முதல் வார இறுதி நாள்களில் (சனி, ஞாயிறு) இரு வாரங்களுக்கு கிராமியக் கலை விழாவினை திருமறைக் கலாமன்றம் நடத்தவுள்ளது.

இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ள இக்கிராமியக் கலைவிழா, கிராமியக் கலைகளும், கிராமியப் பாடல்களும், கிராமிய நடனங்களும் ஒன்றாகச் சங்கமிக்கும் கலைத் திருவிழாவாக பல்வேறு சிறப்பு நிகழ்வுகளுடன் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ள முதல் நாள் நிகழ்வுகளின்போது யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பிரதேசக் கலைஞர்கள் வழங்கும் காவடி, உழவர் நடனம், புரவிநடனம், வேப்பிலை நடனம், அனுமான் நடனம், கும்மி, பொம்மலாட்டம், கோலாட்டம், கரகாட்டம் மற்றும் வில்லிசை போன்றவை இடம்பெறும்.

எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இரண்டாம் நாள் நிகழ்வுகளின் போது பிரதேச செயலகங்கள் மூலமாகத் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் திருமறைக் கலாமன்றத்தால் அண்மையில் நடத்தப்பட்ட கிராமியப் பாடல் போட்டிகளின் நிறைவுப் போட்டிகளும், பரிசளிப்பும் இடம்பெறும்.

தொடர்ந்து 7ஆம், 8ஆம் திகதிகளில் பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ள மூன்றாம், நான்காம் நாள் நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வுகளாக அவிசாவளை, பாணந்துறையைச் சேர்ந்த தென்னிலங்கைத் திருமறைக் கலாமன்றக் கலைஞர்களும், சாவகச்சேரி, நல்லூர், இளவாலை, இணுவில், குருநகர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த யாழ்.மாவட்டக் கலைஞர்களும் வழங்கும் கிராமிய நடனங்களும் இடம்பெறும்.

இதேவேளை, 7ஆம், 8ஆம் திகதிகளில் காலை 9 முதல் நண்பகல் 12 மணி வரை நடனத்துக்கான பயிற்சிப் பட்டறையும் நடைபெறவுள்ளது.

'கிராமியக் கலைவிழா' நிகழ்வுகளில் கலைமீது தாகம் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (50)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்


# இரத்ததான வாரம் 24 தொடக்கம் 30 வரை

**இரத்ததானம் - பயனுடையது**

குருதி வழங்குநரின்

- ★ உடலின் நிறை, குருதிச்செறிவு அறியப்படுகின்றது.
- ★ உடல்நிலை (நாடித்துடிப்பு, குருதி அமுக்கம்) சோதிக்கப்படுகின்றது.
- ★ குருதி வகை அறியப்படுகின்றது.
- ★ குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்களின் குருதித் தேவைக்கு உதவ முடிகின்றது.
- ★ வைத்தியசாலையுடனான உறவு நெருக்கமாகின்றது.
- ★ ஆத்ம திருப்தி ஏற்படுகின்றது.
- ★ குடும்ப, சமூகப் பொறுப்புணர்வு அதிகரிக்கின்றது.

இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை,

யாழ்ப்பாணம். 021 2223063




மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் மகாபாரதத்தின் (பாகம் -1) நூல் வெளியீட்டு விழா அண்மையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நூலின் வெளியீட்டுரையை வல்வையூர் அப்பாண்ணா நிகழ்த்துவதையும், மதிப்புரையை வல்வை.சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் நிகழ்த்துவதையும், நூலின் சிறப்புப் பிரதியை நூலாசிரியர் வ.குமாரசாமி ஐயரிடமிருந்து தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அதிபர் வ.கணேசமூர்த்தி பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம். விழாவிற்கு வந்தோரில் ஒரு தொகுதியினரை இறுதிப் படத்தில் காண்க. (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/ தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மாணவனும் தேவராசா நகுலன் - இந்திராணி தம்பதியினரின் செல்வப் புதல்வனுமாகிய

**செல்வன் தே. நிறோஜ்**

2009 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 149 புள்ளிகளைப் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

தாவடி வடக்கு, காளிகோவிலடி. (90407)

வாழ்த்துவோர்: ம. இராசலிங்கம் (மாமா).

## பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு.திருமதி தேவதாசன் வனிதராணி தம்பதிகளின் செல்வப் புதல்வனும் யா. நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவனுமாகிய செல்வன் **தே.சௌமியன்** தரம் 5, 2009 புலமைப்பரிசில் பரீட்சையில் 166 புள்ளிகளைப் பெற்று தீவகக் கல்வி வலயத்தில் முதலிடத்தையும் மாவட்ட மட்டத்தில் 75ஆம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கும் பெற்றோருக்கும் பெருமை தேடித்தந்தமையையிட்டு எம் பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு மென்மேலும் கல்வியில் மேன்மையடைந்து சிறப்புற வாழ பெருக்கடி சித்தி விநாயகரை வேண்டி வாழ்த்துகிறோம்

நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு. (90344)

திரு.திருமதி பரமலிங்கம் செந்தில்நாயகி.

## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட காரைநகர் குடும்பநல சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி த.தர்மாதேவி அவர்களின் அன்புத் தாய்

**திருமதி கந்தையா மீனாட்சியம்மா**

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு கவலை அடைவதுடன் அவர்களின் குடும்பத் துயரில் நாமும் பங்கெடுத்துக்கொள்கின்றோம்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், ஊர்காவற்றுறை. (90349)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சண்முகநாதன் திவ்வியகுமாரன் அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி சறோஜினிதேவி சண்முகநாதன்**

அவர்கள் 24.10.2009 சனிக்கிழமை கொழும்பில் இறைபதம் எய்திய செய்தி கேட்டு அத்துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், ஊர்காவற்றுறை. (90348)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தில் நீண்டகாலமாகப் பிரதம குருவாக இருந்த சதாசிவஐயரின் அன்பு மனைவியும் குருக்களாக இருந்த சண்முகநாதக் குருக்களின் தாயுமாகிய

**திருமதி சதாசிவ ஐயர் அன்னலட்சுமி** (வெள்ளையம்மா)

அவர்களின் மறைவினால் துயருறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மண்கும்பான் வெள்ளைப்புற்றடி சிறி வீரகத்தி விநாயகனைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை
வெள்ளைப்புற்றடி சிறி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம், மண்கும்பான். (90340)

## கண்ணீர் அஞ்சலி

வேலணை பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரான திரு... ஜெயகலாவின் அன்புக் கணவரும், எமது பிரதேச செயலக முகாமைத்துவ உதவியாளராகக் கடமைபுரிந்த

**அமரர் கந்தையா சுபாகரன்**

அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், வேலணை. (90403)

பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட மேற்பார்வைப் பொதுச் சுகாதார பரிசோதகர் ச.திவ்வியகுமார் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சறோஜினிதேவி சண்முகநாதன்**

அவர்கள் 24.10.2009 சனிக்கிழமை கொழும்பில் இறைபதம் எய்திய செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

(90404)

யாழ்.மாவட்டபொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.29

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமரத்தின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் கல்விகற்கும் மாணவிகளுக்கான 'வெற்றியின் ரகசியம்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி எஸ்.சிவநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சுவாமி சித்ரூபானந்தா கலந்து கொள்வார். (201)

## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.29

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினரின் ஏற்பாட்டில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.15 மணிக்கு பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாணவர்களுக்கான பரிசில்களை அதிபர் திருமதி சீதாதேவி சண்முகநாதன் வழங்குவார். (201)

## வணிகக் கல்விச் செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஒக்.29

வலிகாம வலயத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவிருந்த வணிககல்விச் செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும் என வலிகாமக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ந.துரைராசசிங்கம் அறிவித்துள்ளார்.

இராமநாதன் கல்லூரியின் விசேட கல்வி அலகில் இடம்பெறும் இந்தச் செயலமர்வுக்கு தரம்12,13 இல் கற்பிக்கும் ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

## நெல்லியடி ம.ம.வி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.29

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி கேட்போர் கூடத்தில் அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறைப் பேராசிரியர் எம்.சின்னத்தம்பி கலந்து கொள்வார்.

(50-201)

## அரையிறுதி ஆட்டங்கள் இன்றும் நாளையும்

வடமராட்சி,ஒக்.29

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் பிற்பகல் 4மணிக்கு மனோகரா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகமும், நாளை வெள்ளிக்கிழமை வதிரி டயமன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழகமும் அரை இறுதி ஆட்டத்தில் மோதுகின்றன.

(50- 236)

## அலுமாரிகள் விற்பனைக்கு

கடைகளுக்குப் பாவிக்கக்கூடிய பெறுமதி மிக்க மரத்தால் செய்யப்பட்ட பல அளவுகளில் அலுமாரிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0213216802, 0777 480825 (90314)

## காணி விற்பனைக்கு

ஆலடி, மானிப்பாய் றோட், உடுவிலில் (ஆலடிச் சந்தைக்கு அருகாமையில்) 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779519973
0115843282
0776855846

(90352)

## தவறிவிட்டது

R.சாரலளகனின் கிளினிக் காட், க.சந்திரமோகனின் திருமணப்பத்திரம், சு.விமலினியின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் அல்பம் என்பவை உள்ளடங்கிய கைப்பை ஒன்று இணுவில் கந்தசாமி கோயிலுக்கு அண்மையில் கடந்த 25.10.2009 அன்று தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் அல்லது தொலைபேசியுடன் தொடர்புகொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: S.R.இளஞ்செழியன், 67/5, 1ஆம் குறுக்கு ஒழுங்கை, குருநகர், யாழ்ப்பாணம். T.P: 0778313473 (90335)

## கண்ணீர் அஞ்சலி

தீவக கல்வி வலய நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகிய கனகசபாபதி பாலமுருகன் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி சாந்தாதேவி கனகசபாபதி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வலயக் கல்விப் பணிமனை, தீவகம், வேலணை. (90401)

வலயக் கல்விப் பணிப்பாளர் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாக்கியம் வரதலிங்கம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் புத்தூர் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வரதலிங்கம் பாக்கியம் 28.10.2009 புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா வரதலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் மகளும், கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: திருமதி இராஜலஷ்மி பத்மநாதன் (மகள்).

பத்திரகாளி கோவிலடி, அம்மன் வீதி, திருநெல்வேலி. (90346)

### ஜெகலட்சுமி அம்மா



சுழிபுரத்தைச் சேர்ந்த ஜெகலட்சுமி அம்மா 27.10.2009 செவ்வாய்க்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தீஸ்வரக் குருக்கள் - பட்டம்மா தம்பதியரின் அன்பு மகளும் சிவசுப்பிரக்குருக்களின் அன்பு மனைவியும் வைத்தீஸ்வரசர்மா (பவுண், அவுஸ்திரேலியா), சிவனேஸ்வரி (சிவா), ஜெகதீஸ்வரி (பாப்பா, சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் மாலினிதேவி, நடராஜக் குருக்கள், உதயகுமாரசர்மா ஆகியோரின் மாமியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (90345)

தகவல்: நடராஜக்குருக்கள் சிவனேஸ்வரி (மகள்).

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

### சங்கரப்பிள்ளை சபாபதி
(ஓய்வுபெற்ற புகையிரதத் திணைக்கள கணக்குப் பரிசோதகர்)



கரவெட்டி, வெல்லன் பகுதியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, நுணாவில் சத்தாப்படி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சபாபதி 26.10.2009 திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் (ஆசிரியர், நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை) அன்புக் கணவரும் பாலேந்திரன் (கட்டடப் பரிசோதகர், புகையிரதப்பகுதி, வவுனியா), சகுந்தலா (ஆசிரியை, சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை), இராசேந்திரன் (கனடா), றஞ்சனா (ஆசிரியை, றிபேக் கல்லூரி, சாவகச்சேரி), மஞ்சுளா (லண்டன்), இராஜேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் உமாகௌரி (ஆசிரியை, வவுனியா), மீரா (கனடா), தவராசா, செல்லகனபராசா (லண்டன்), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் அனுருத்தன், அருண்ஜன், அபிரஜன், சரண், சாய்ரண், ஆர்த்திஷா, ஆதுஷன், தரண், மகீரன், கௌரி, மூர்த்தி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2009) வியாழக்கிழமை மு.ப. 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சகுந்தலா (மகள்).

கந்தாப்படி வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (90405)

### கந்தையா சுபாகரன்
(முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், வேலணை - யாழ்ப்பாணம்)



நெடுந்தீவு மேற்கு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 96/1, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சுபாகரன் நேற்றுமுன்தினம் (27.10.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் இராசம்மா தம்பதியினரின் தவப்புதல்வரும், பரமநாதன் - காலஞ்சென்ற கமலாசனம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், ஜெயகலா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வேலணை) வின் அன்புக் கணவரும், கீர்த்தனா (தரம் - 11, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), தாமினா (தரம் - 9, யாழ்.இந்து மகளிர் கல்லூரி), அபிநாத் (சென்.ஜோன்ஸ் முன்பள்ளி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நவநீதனின் (கனடா), அருமைச் சகோதரனும், சிவகுமாரின் (வேலு) சகலனும், ஜெயபாமினி, கௌரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கரிகரன், ஜெயகரன், றஜிகரன் அசோக்குமார், விதுஷன், பிரகாஸ், துசாந் ஆகியோரின் பாசமிகு பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சிவகுமார் (வேலு - சகலன்) (முன்னாள் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்)

4 ஆம் வட்டாரம், நெடுந்தீவு. தொ.பே.0217912426 (90406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று பாடசாலைச் சமூகத்திற்குப் பெருமை தேடிய மாணவச் செல்வங்கள்

அண்மையில் வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் அந்தந்தப் பாடசாலை மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் தமது சொந்த ஊருக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாணவச் செல்வங்களின் கருத்துக்களைத் தொகுத்து 'உதயன்' வாசகர்களுக்காகத் தருகின்றோம். தொடர்ந்து படியுங்கள்.



## மனோகரன் வைஷ்ணவி
### வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்
### புள்ளிகள் - 165

எனது அப்பா கூலி வேலை செய்துதான் என்னையும் எனது இரு சகோதரர்களையும் கல்வி கற்பிக்கிறார். எனது குடும்பம் மிகவும் கஷ்டம். அந்த நிலையை உணர்ந்துதான் நான் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்ற குறிக்கோளோடு காலை 5 மணிக்கே எழுந்து பாடசாலை செல்லும் வரை படிப்பேன். அதே போல இரவும் 7 மணிமுதல் 9 மணிவரை படிப்பேன்.

வீட்டில் யாருமே பாடம் சொல்லித்தரமாட்டார்கள். தனியாக இருந்து படிப்பதுண்டு. நானும் ஆசையாகப் படிப்பேன். எதிர்காலத்தில் ஆசிரியையாக வரவேண்டும் என்பதே எனது இலட்சியம். அதற்காக முயற்சி எடுத்துப் படித்து அந்த இலக்கை அடைவேன்.

எனது இந்த பரீட்சை வெற்றிக்கு உறுதுணையாக அமைந்த அதிபர், வகுப்பாசிரியர், எனக்கு ரியூசன் சொல்லித்தந்த செல்லம் அன்ரி ஆகியோருக்கு இந்நேரத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



## சத்தியசீலன் நிறோஜா
### வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்
### புள்ளிகள் - 148

நான் மிகவும் கஷ்டப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். எனது தந்தையார் கூலி வேலை செய்து வருகிறார். அம்மா வீட்டுப் பணி. எனக்கு இரு சகோதரர்கள் உள்ளனர். நான் வீட்டில் மூன்றாவது பிள்ளை. நாங்கள் நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்று அப்பாவும், அம்மாவும் அடிக்கடி கூறுவதுண்டு.

வீட்டில் அம்மாவும், அக்காவும்தான் பாடம் சொல்லித்தருவார்கள். நானும் மிக மிக ஆசையாகப் படிப்பேன். எனது பெற்றோரின் அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றுவதற்காக இப்போதிருந்தே என்னை ஆயத்தப்படுத்துகிறேன்.

நான் பாடசாலைகளில் நடைபெறும் போட்டிகளிலும் பங்குகொள்வதுண்டு. நாடகப் போட்டியில் பங்கு பற்றி இரண்டாம் இடம் கிடைத்துள்ளது.

எதிர்காலத்தில் டாக்டராக வரவேண்டும் என்ற எண்ணத்தோடு என்னை இப்போதிருந்தே தயார்படுத்திக் கொண்டு, எனது இந்த வெற்றிக்கு துணை நின்ற ஆசிரியர்கள் மற்றும் அதிபர்.க. கனகராஜா ஆகியோருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

சந்திப்பு -பிறேமசீலன், சரவணன்



## மகேந்திரன் சுஜீவன்
### வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்
### புள்ளிகள் - 140

நான் மிகவும் கஷ்டப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவன். எனக்கு அப்பா இல்லை. முன்பள்ளி ஆசிரியராகக் கடமை புரியும் எனது அம்மாவை தலைமையாகக் கொண்ட எனது குடும்பத்தில் எனக்கு நான்கு சகோதரர்களும் உள்ளனர். நான்தான் கடைசிப் பிள்ளை.

எமது குடும்ப நிலையை உணர்ந்து படித்து முன்னுக்கு வந்து நல்லபடியாக வாழவேண்டும் என்ற எண்ணம் என் மனதில் தோன்றியது. எனது அம்மாவும் அதையே விரும்புகின்றார். அதற்காக எந்தக் கஷ்டத்தையும் எதிர்கொள்ள தான் தயாராகவே இருப்பதாக அம்மா அடிக்கடி சொல்வதுண்டு. எனக்கு விருப்பமான துறை விளையாட்டு (கிரிக்கெட்). அந்தத்துறையில் நான் சாதனை படைக்க வேண்டும். பாடசாலை மற்றும் கோட்ட/ வலய மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றியுள்ளேன். உயரம் பாய்தல் போட்டியில் முதலாம் இடத்தையும், நீளம் பாய்தல் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று பரிசில்களும், சான்றிதழ்களும் பெற்றுள்ளேன்.



## துஸ்யந்தன் நர்மிளா
### வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்
### புள்ளிகள் - 165

எனது தந்தை சாரதியாக வேலை செய்கிறார். நான்தான் வீட்டிலே மூத்த பிள்ளை. எனக்கு இரு சகோதரர்களும் உள்ளனர்.

அம்மா வீட்டுப் பணிகளை செய்து முடித்த பின்பே தனியாக பாடம் சொல்லித் தருவார். நான் அதிகாலை 4.30 மணிக்கு எழுந்து 6 மணிவரை படிப்பேன். இரவு 6 மணிமுதல் 7 மணிவரையும் பொறுமையுடன் உட்கார்ந்து படிப்பேன்.

எனக்கு வீட்டில் எவ்வித இடையூறும் விளைவிக்க மாட்டார்கள். பாடசாலையில் நடைபெறுகின்ற போட்டிகளில் பங்கு பற்றியிருக்கிறேன். திருக்குறள் போட்டியில் கோட்ட மட்டத்தில் இரண்டாமிடத்தையும் தமிழ்த்தினப் போட்டியில் கட்டுரை போட்டிக்காக மூன்றாம் இடத்தையும்,ஊரெழு காமாட்சி அம்மன் ஆலயம் நடத்திய சமய பாடப்பரீட்சையில் முதலாம் இடம் கிடைத்து வெள்ளிப் பதக்கமும் பெற்றுள்ளேன்.

எதிர்காலத்தில் ஆசிரியையாக வரவேண்டும் என்பதே எனது ஆசை. அதை நிறைவேற்றுவதற்காக இப்போதிருந்தே என்னை தயார்படுத்திக் கொண்டிருக்கின்றேன்.



## டயனிகா உதயச்சந்திரன்
### வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்
### புள்ளிகள் - 142

அப்பா கட்டட வேலை செய்து வருகிறார். அம்மா வீட்டுப் பணி. நான் வீட்டில் இரண்டாவது பிள்ளை. அப்பா எங்களைப் படிப்பிப்பதற்காக பத்திரிகைகளில் வெளிவரும் வினாத்தாள்களையும், ஏனைய பயிற்சிப் புத்தகங்களையும் கொண்டுவந்து தருவார்.

அம்மாவும், பக்கத்து வீட்டு அன்ரியும், எனது அண்ணாவும் பாடம் சொல்லித்தருவார்கள். பாடசாலை முடிந்து வந்ததும் கொஞ்ச நேரம் விளையாட அனுமதிப்பார்கள். பின்னர் அகிலா கல்வி நிலையம் சென்று படித்து விட்டு இரவிலும் 7 மணிமுதல் 9 மணி வரையும் படிப்பேன்.

எனக்கு ஆசிரியராக வரவேண்டும் என்பதே விருப்பம். எனது பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்ப்பதோடு, எதிர்கால சந்ததியினருக்கு நான் நல்ல வழிகாட்டியாக அமைய வேண்டும். அதற்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு எனது கல்விக்கு உறுதுணையாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் அனைவருக்கும் நான் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.



## தர்மராசா சஜீவன்
### மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை
### புள்ளிகள் - 156

அப்பா சைக்கிள்கடை வைத்திருப்பவர். நான் மிகவும் கஷ்டப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவன். எனக்கு மூன்று சகோதரர்கள். நான்தான் கடைசிப்பிள்ளை. பெற்றோர் என்னைப் படிப்பித்து நல்லநிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்று தமது கஷ்டத்திலும் படிப்பிக்கின்றார்கள். எனதுஅண்ணனையும் அப்படித்தான் படிப்பித்தார்கள். அவர் 2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தினர்.

எனக்கும் அண்ணன்போல சித்திபெற வேண்டும் என்று ஆசை. அதனால் கூடுதல் கவனமெடுத்துப் படித்தேன். பெற்றோர் அதற்கு உந்துசக்தியாக இருந்தார்கள். O/L படிக்கும் எனது சகோதரிதான் எனக்கு அதிக அக்கறை எடுத்துப் படிப்பிப்பார். நான் காலையில் 4-6 மணி வரை படிப்பேன். என்னுடன் அக்காவும் இணைந்து படித்து எனக்கும் சொல்லித் தருவார். இரவு 6.30-8.30 மணி வரையும் படிப்பேன். நான் வளர்ந்து ஒரு வைத்தியராக வந்து சேவையாற்றி எனது பெற்றோரின் கனவை நனவாக்குவேன். அதற்காக என்னாலான முயற்சிகளை எடுத்துப் படிக்கின்றேன். பாடசாலையிலும் வகுப்பாசிரியர் மாலை நேர வகுப்பு எடுப்பார். அதைவிட தனியார் கல்விநிலையம் செல்வதுமுண்டு. அத்தோடு உதயன் பத்திரிகையில் வெளிவரும் வினாத்தாள்களை எடுத்துப் படித்த நான் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒரு காரணம். எனது இந்த வெற்றிக்குப் பக்க பலமாக இருந்து கூடிய கவனம் எடுத்து கற்பித்த வகுப்பாசிரியர் கு.குகதாசன், எனக்கு 3ஆம், 4 ஆம் ஆண்டு கற்பித்த அ.சண்முககுமார் ஆசிரியர் மற்றும் அறிவுரைகூறி ஊக்கம் தந்த அதிபர், எனது சகோதரி ஆகியோருக்கு இதற்குத் துணைநின்ற இறைவனுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து நேற்று முன்தினம் இரவு அழைத்துவரப்பட்ட வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு வட்டுக்கோட்டைத் தொழில் நுட்பக் கல்லூரியில் பதிவுகள் இடம்பெறுவதையும், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மக்களுடன் உரையாடுவதையும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மக்களுக்கான மீள்குடியமர்வுக் கொடுப்பனவை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: விற்ரோறி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப் பட்டநெறி ஆரம்பநெறிப் பிரிவில் 98 பேருக்கு நேர்முகத் தேர்வு

தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப் பட்டநெறி நேர்முகப் பரீட்சைக்கு ஆரம்ப நெறிப் பிரிவில் 98 பேர் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 31ஆம் திகதியும் நவம்பர் முதலாம் திகதியும் யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அவர்களின் விவரம் வருமாறு:

தம்பிஐயா வாமதேவன் - சுன்னாகம், தனவந்தி நந்தீஸ்வரன்-அச்சுவேலி, கவிதா சுந்தரம்பிள்ளை - நல்லூர், பத்மநாதன் பத்மகாந்தன் - புலோலி, சிதம்பரநாதன் இராஜேஸ்வரன் - சுழிபுரம், சசிகலா கனகரத்தினம் - கொக்குவில், தாரணி அச்சுதன் - சங்கத்தானை, சூசைப்பிள்ளை மரியா அஞ்ஜலா - ஆனைக்கோட்டை, பொன்னுத்துரை மதிவண்ணன் - சுன்னாகம், இந்துமதி இராமநாதன் - பருத்தித்துறை, பத்மநாதன் சசிகுமார் - ஏழாலை, பொன்மதி இராஜேஸ்வரன் - அல்வாய், பிரேமவல்லி சற்குணராஜா - ஊர்காவற்றுறை, யோசெப் ஜஸ்ரின் பெனாட் மரியசெல்வம் - மானிப்பாய், ரஜனி சிவப்பிரகாசம்-ஓட்டுமடம், கௌசல்யா சிவசுதன் - மல்லாகம், வனிதா அருட்செல்வம் - யாழ்ப்பாணம், சண்முகநாதன் முகுந்தன் - சுன்னாகம், சத்தியமலர் நந்தகுமார் - கொக்குவில், குமாரசுவாமி நந்தகுமார் - வரணி, சிவானந்தன் நவகாந்தன் - திருநெல்வேலி, குமாரசுவாமி நிசாந்தன் - வட்டுக்கோட்டை, பாக்கியநாதன் சசிகுமார் - நீர்வேலி, தயாபரி சத்தியலிங்கம் - புத்தூர், சிவாஜினி சதீசன் - உரும்பிராய், திருநாவுக்கரசு சிவகாசன் - கொடிகாமம், சுபந்தினி சிவசுந்தரம் - யாழ்ப்பாணம், வாசுகி யோகானந்தம் - மானிப்பாய், கீதநாத பிள்ளை சுந்தரமோகன் - வல்வெட்டித்துறை, சங்கரப்பிள்ளை உமாமகேஸ்வரன் - சாவகச்சேரி, ஜீவந்தி பரஞ்சோதி - சாவகச்சேரி, சுபாஜினி சண்முகராஜா - யாழ்ப்பாணம், தியாகராசா ஜீவரட்ணம் - பருத்தித்துறை, செல்லத்துரை ஜெயகாந்தன் - யாழ்ப்பாணம், சிவபுண்ணியம் காயத்திரி - சாவகச்சேரி, திருநாவுக்கரசு முத்தரசன் - சுழிபுரம், வெண்ணிலா பெனாண்டோ - வல்வெட்டித்துறை, மைதிலி ஜெயபவன் - கைதடி, யோகலிங்கம் லிங்கேஸ்வரன் - கொடிகாமம், சுப்பிரமணியம் மகாதேவா - அல்வாய், பாக்கியநாதன் சத்தியநாதன் - நீர்வேலி, கோகிலவர்த்தனி செல்வலிங்கம் - வல்வெட்டித்துறை, கலைச்செல்வி சிவலிங்கம் - புலோலி, கருணாவதி தேவதாசன் - தெல்லிப்பழை, யோகலட்சுமி சுப்பிரமணியம் - சுன்னாகம், தேவராசா தேவமோகன் - இளவாலை, சின்னத்தம்பி திருச்செல்வம் - மீசாலை, துளசி வாசுதேவன்-அல்வாய், வசந்தமலர் வேலுப்பிள்ளை-மல்லாகம், ரேணுகா வேதவனம் - உடுப்பிட்டி, கிருஸ்ண பிள்ளை விஜயகுமார் - அல்வாய், குமுதா விக்னராஜா - கொக்குவில், கல்யாணி பாக்கியநாதன் - பருத்தித்துறை, சித்திராதேவி பரராஜசிங்கம் - வேலணை, கபாலினி ரமேஸ்குமார் - சுன்னாகம், ஜெயந்தி சசிதரன் - கரணவாய், மாலினி சிவநாதன்-யாழ்ப்பாணம், சசிகலா சூரியகுமாரன் - கரவெட்டி, சிவகலா குணசேகரன் - சுண்டுக்குழி, கந்தசாமி கம்சன் - ஆனைக்கோட்டை, உமாதேவி ஜெகவீரசிங்கம் - சாவகச்சேரி, சதாசிவம் கார்மேகவேணன் - பருத்தித்துறை, தனலட்சுமி அகிலன் - சுழிபுரம், வனஜா பாலசுப்பிரமணியம் - பண்டத்தரிப்பு, சின்னத்துரை கணேசராசா - கொக்குவில், கிருஸ்ண பிள்ளை ஜெகரமணன் - அச்சுவேலி, கிருபா காந்தகுமார் - கோப்பாய், சிவாஈஸ்வரி ஸ்ரீமுருகதாஸ்காந்தன் - நீர்வேலி, அண்ணாமலை கருணாகரன் - மானிப்பாய், ஜெயந்திமலர் மதியழகன் - நயினாதீவு, வரதராசா நிகிதன் - நல்லூர், கனகசபை பிரபாகரன் - அல்வாய், பரமானந்தர் ரவிக்குமார் - மீசாலை, சத்தியபாமினி சத்தியமூர்த்தி - கோண்டாவில், சுப்பிரமணியம் செல்வேந்திரன் - யாழ்ப்பாணம்,

கவிதா சிவகாந்தி - திருநெல்வேலி, தெய்வேந்திரன் ஸ்ரீதரன் - மானிப்பாய், பிரதீபன் தர்சினி - வல்வெட்டித்துறை, நடராஜா விஜயகுமார் - மானிப்பாய், ஜெயலக்சுமி சுரேஷ் - புத்தூர், சுதர்சினி சுத்தானந்தன் - ஏழாலை, விஜயகலா தர்மராஜா - மானிப்பாய், வரதராஜா திருப்பதிராஜன் - இணுவில், வக்சலா நிதாகரன் - கொக்குவில், கௌசல்யா ராகவன் - சுன்னாகம், வினோஷ்ரஞ்சி சக்திவேல் - வண்ணார் பண்ணை, சண்முகம் சசிலதா - வரணி, நாகநந்தினி செல்வன் - கைதடி, ஜோகினி சிவானந்தன் - பருத்தித்துறை, சிவசக்திவேல் சிவரதீஸ் - சுன்னாகம், பத்மினி ஸ்ரீஸ்கரன் - சாவகச்சேரி, துரைராஜா அருந்தவசீலன் - மீசாலை, உதயகலா சந்திரமோகன் - யாழ்ப்பாணம், சுமாலினி கஜபாலன்- ஆனைக்கோட்டை, ஜசிந்தா ஜெயக்குமார் - வண்ணார்பண்ணை, வாசுகி மனோரஞ்சிதன்-புத்தூர், இந்திராதேவி மதிசூடி - கோண்டாவில், சிவசாமி நல்லகுமார்- சுன்னாகம். (50)

## அரச கட்டட ஒப்பந்தகாரர், தளபாட உற்பத்தியாளர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்.மாவட்டத்தில் அரச அங்கீகாரம் பெற்ற கட்டட ஒப்பந்தகாரர்கள், தளபாடங்கள் உற்பத்தி செய்வோர் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை சட்டநாதர் கோயில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அரச மரக்கூட்டுத்தாபன அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.(201)

## மத்தியஸ்தர் சபையின் அங்குரார்ப்பண நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.29

தென்மராட்சி பிரதேச மத்தியஸ்தர் சபையின் அங்குரார்ப்பண நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்குப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர், தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பிரதேசத்தின் அனைத்து கிராம அலுவலர்களையும் பங்குபற்றுமாறு மத்தியஸ்தர் சபை தவிசாளர் அறிவித்துள்ளார்.

பிரதேச மத்தியஸ்தர் சபையின் செயலமர்வுகள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமெனவும் அவர் அறிவித்துள்ளார். (50-207)

## ஏகாதசி பூசை

வண்ணை,ஒக்.29

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை ஏகாதசி விரத பூசை சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிசேக ஆராதனைகளுடன் பூசை ஆரம்பமாகும். முற்பகல் 9 மணிக்குச் சிறப்பு சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடந்தேறி ஸ்ரீமத் நாராயண சுவாமி பூமாதேவி ஸ்ரீதேவி புடைசூழ வீதியுலா எழுந்தருள்வார். (1-160)

## அரியாலையில் நூலகக் கண்காட்சி

நல்லூர்,ஒக்.29

அரியாலை சனசமுக நிலையத்தில் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு புத்தகக் கண்காட்சி ஏற்பாடாகியுள்ளது.

இன்று வியாழக்கிழமை பி.ப. 3 மணி முதல் நாளை வெள்ளிக்கிழமை வரை இரண்டு தினங்களுக்குக் கண்காட்சி நடைபெறும். (1-111)

## பட்டதாரிகளை அமைச்சர் சந்தித்தார்

யாழ்.மாவட்ட பட்டதாரிகளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கடந்த 24ஆம் திகதி சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்.மாவட்ட பட்டதாரிகள் முகங்கொடுத்துள்ள வேலை வாய்ப்புத் தொடர்பான பிரச்சினைகள் குறித்து தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை எடுத்துவரும் அமைச்சர் அண்மையில் மேற்படி பட்டதாரிகளின் பிரதிநிதிகளை ஜனாதிபதியைச் சந்திப்பதற்காகக் கொழும்பிற்கு அழைத்துச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் மேற்படி பட்டதாரிகளைச் சந்தித்த அமைச்சர் அவர்களின் நியமனங்கள் தொடர்பில் தான் உரிய நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் கூடிய விரைவில் அவர்களுக்குரிய நியமனங்களை கட்டம் கட்டமாகப் பெற்றுத் தருவதாகவும் தெரிவித்தார். (50)


### யா/கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை, சாவகச்சேரி

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

2009ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்த

| | |
|---|---|
| 1) சோமசுந்தரம் மதுர்சன் | 168 |
| 2) இராதாகிருஸ்ணன் அஜித் | 161 |
| 3) கந்தசாமி மிதுர்சன் | 155 |
| 4) சிவபாலன் ஜெய்சன் | 151 |
| 5) சுதாகர் சாருப்பிரியன் | 148 |

ஆகியோருடன் எமது பாடசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றி 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

| | |
|---|---|
| 1) பாலசிங்கம் லோகன்ராஜ் | 151 |
| 2) கௌசிகா சிவனேஸ்வரன் | 128 |
| 3) தவபாலன் கோபிதன் | 127 |
| 4) சாரங்கா சிவபாதம் | 117 |
| 5) கீர்த்திகா செல்வரட்ணம் | 117 |
| 6) கேஜூஜா பாலசுப்பிரமணியம் | 105 |
| 7) ஜெதுசா ராஜேந்திரகுமார் | 101 |

ஆகியோரையும் மேற்படி மாணவர்களின் கற்றலுக்கு வழிகாட்டிய வகுப்பாசிரியை திருமதி ஜானகி தவீந்திரன் அவர்களையும் மற்றும் அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை சாவகச்சேரி. (90329) பாடசாலைச் சமூகம்.

### யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ.து

### கேள்விகோரல்

எமது சங்கத்தில் பாவித்த நல்ல நிலையிலுள்ள (900.20) லொறி ரயர் வகைகள் விற்பனைக்கு உள்ளது. மேற்படி பொருள்களை அலுவலக நேரத்தில் நேரில் பார்வையிடலாம்.

கேள்விக் கூறுகளை நேரிலோ/பதிவுத் தபால் மூலமோ 03.11.2009ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ.து.
127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

[illegible],
(சி/561882) யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ.து.

### 41 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
பிலேந்திரம் ஜோர்ச் தனபாலசிங்கம்

மண்ணில் 04-10-1959
விண்ணில் 19-09-2009

இவ்வுலகை விட்டு நீர் பிரிந்து
41 நாள் ஆனதைய்யா
ஆனாலும் எம் துயரம் தினம்
ஆறாகப் பெருகுதைய்யா
நித்தம் நித்தம் உமை நினைத்து
எம் மேனி உருகுதைய்யா
ஆண்டவனாய் வாழ்ந்திருந்து
என்றும் ஆறுதலைத் தாருமைய்யா!

எமது தந்தையின் மரணச்செய்தி கேட்டு வருகை தந்த அனைத்து உள்ளங்களுக்கும் மற்றும் வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபச்செய்தி தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

35/2, டேவிற் வீதி, குருநகர், யாழ்ப்பாணம். (90220)

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள், சகோதரிகள், மருமக்கள் மற்றும் உறவினர்கள்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 15 04 1929
உதிர்வு 29 09 2009

அமரர்
வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
[உரிமையாளர், சின்னக்கடை புகையிலை வர்த்தக நிலையம்]

அன்பாலும் பண்பாலும் எல்லோரையும்
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
மீளாத்துயில் கொண்டு முப்பத்தொரு நாள்கள்
சென்றாலும் அகலவில்லை உங்கள் நினைவுகள்.

இன்று (29.10.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

ஏழாலை கிழக்கு, ஏழாலை. (சி/561879)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'கேள்விக்கு என்ன பதில்' போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு

'உதயனி'ல் வாரந்தோறும் வெளிவரும் 'கேள்விக்கு என்ன பதில்' போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த மாதம் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசினை மூத்த பத்திரிகையாளர் எஸ்.பெருமாள் வழங்குவதை முதலாவது படத்திலும், உதயன் நூலகரும் ஆசிரியர்பீடப் பிரதிநிதியுமான வி.எஸ். தங்கராஜா வழங்குவதை ஏனைய படங்களிலும் காணலாம்.




துணவி பாடசாலை வீதி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ம.ஜனார்த்தனன் பரிசு பெறுகின்றார்.




வாரிவளவு, காரைநகரைச் சேர்ந்த ந.கஜந்தினி பரிசு பெறுகின்றார்.




2ஆம் வட்டாரம், நயினாதீவைச் சேர்ந்த வி.ஜெயதீபா பரிசு பெறுகின்றார்.




8ஆம் வட்டாரம், நயினாதீவைச் சேர்ந்த இ.ரஷிதா பரிசு பெறுகின்றார்.

## பொய்யாகிப் போனநட்பு

நொறுங்கிக் கிடந்தவென் இதயத்துக்கு
நட்பென்ற ஊற்றாகிப் பாய்ந்து
என் துயர்துடைத்து நீங்களெல்லாம்
இதம் தருவீரென நான் நினைக்க
ஏன் இன்னுமின்னும், அதிகமாய்
எனை வதைத்துச் செல்கின்றீர் ?
துரித கதிப் பயணமதாம் இந்த வாழ்வின்
இனிமையான தருணங்களாய் நீங்களெல்லாம்
இருப்பீர்களென நான் மகிழ்ந்திருக்க
என் மனதை இன்னுமின்னும் எதற்காக
வார்த்தைகளால் சுட்டுப் பொசுக்குகிறீர் ?
ரோஜாவாய் மாறி என் இதயமது
சிலிர்க்கச் செய்வீரென நான் நம்ப முட்களாய் மாறி ஏன்
என் மனதைக் கிழிக்கின்றீர் ?
முன்பெல்லாம் உங்கள் மேல்
விளையாட்டாய்க் கோபம் வரும்
தொடர்கதையாய் அக்கோபம் நீடித்ததேயில்லை
புரிதல் இன்றிப் பிரிகின்ற உங்களை நான் இனியும் தான்
எனைப் புரிந்து கொள்ளும்படி யாசிக்கப் போவதில்லை
மனங்களும் பொய்யாகி நட்பதுவும் பொய்த்ததன்பின்
மெய்யென்று சொல்லிக் கொள்ள ஏதுவொன்றும் இனி இல்லை.

அஞ்சலி, சங்கத்தானை.

## பணத்தால் பெறமுடியாதவை

படுக்கையை வாங்கலாம்
ஆனால் உறக்கத்தை வாங்கமுடியாது
புத்தகத்தை வாங்கலாம்
ஆனால் அறிவை வாங்கமுடியாது
உணவை வாங்கலாம்
ஆனால் பசியை வாங்கமுடியாது
பகட்டை வாங்கலாம்
ஆனால் பண்பாட்டை வாங்கமுடியாது
கேளிக்கையை வாங்கலாம்
ஆனால் மகிழ்ச்சியை வாங்கமுடியாது
ஆயுதங்களை வாங்கலாம்
ஆனால் வீரத்தை வாங்கமுடியாது
வேலைக்காரனை வாங்கலாம்
ஆனால் சேவை மனப்பான்மையை
வாங்கமுடியாது
அமைதியான சூழலை வாங்கலாம்
ஆனால் மன அமைதியை
வாங்கமுடியாது.

ஜெ.சஞ்சீவ், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

## எதிர்பார்ப்பு

என் வீட்டு ரோஜாச்செடி
மொட்டவிழ்த்த கணம் முதலாய்
பூத்துக் குலுங்கிப் புன்னகைக்கும்
வேளை வரை
எந்தவொரு முள்ளதுவும் இடரிழைக்கா
வண்ணம் நான்
எச்சரிக்கையுடனேயே காத்திருப்பேன்
காரணமோ
வனப்பு மிகு மலரதனில் உன் வதனம்
காண எண்ணி....

என்.ரஜினகுமார், ஆனைக்கோட்டை.

## கேள்விக்கு என்ன பதில்?-44இன் சரியான விடை

**ரேப்பிரி**

## கேள்விக்கு என்ன பதில்? -46

முதன் முதலாக கடலுக்குக் கீழ் அமைச்சரவைக் கூட்டத்தை நடத்திய நாடு எது ? அந்த நாட்டின் ஜனாதிபதி யார்? எதற்காக அந்த நிகழ்வு நடைபெற்றது?

(சரியான விடையை 05.11.2009 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்).

## சிந்திக்க சில துளிகள்

★ பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது பணம் இல்லை என்றால் உன்னை எவருக்கும் தெரியாது.

★ உன் நண்பனை வெளிப்படையாக புகழ்ந்துகொள் இரகசியமாகத் திருத்திக் கொள். , இதுவே நல்ல நண்பனை ஏற்படுத்த வழி.

★ குருடனைக் காட்டிலும் குருடன் யார் தெரியுமா? எதிலும் ஆசையுள்ளவன்தான்

★ நீ சொல்லப் போகும் வார்த்தை மௌனத்தை விடச் சிறந்தது என்று திடமாகத் தெரியும்வரை வாயைத் திறவாதே.



★ உன் நம்பிக்கையைப் பணத்தின் மேல் வையாதே. மாறாக பணத்தை உனக்கு நம்பிக்கையான இடத்தில் வை.

★ விடைபெறும் நேரங்களில் அன்பான வார்த்தை பேசு. ஏனெனில் வாழ்வில் மீண்டும் ஒருமுறை சந்திக்காமல் போக நேரிடும்.

★ வார்த்தை தவறிப்போனால் வாழ்க்கை தவறிப்போகும். நீ சொல்லும் வார்த்தையை நினைக்கும் போது சொல்லி விடு. இல்லாவிட்டால் அச்சந்தர்ப்பம் விலகிவிடும்.

சா. ஜிந்துஜா, குமரகோட்டம், கோண்டாவில்.

## இளவல்கள் வட்டம்

### கேள்விக்கு என்ன பதில் ? 44இல் பரிசு பெறுவோர்

01) சி.நிருபா, வரணி இயற்றாலை, வரணி.

02) சா.ஜிந்துஜா, குமரகோட்டம், கோண்டாவில், யாழ்ப்பாணம்.

03) ஜே.யூட் றொவின்சன், ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை.

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................................
முகவரி :-........................................
:-........................................
........................ ........................................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்', 'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## இந்த வாரம் வரலாற்றில்

**ஒக்ரோபர் 23**




ஐ.நாவின் பொதுச் சபையின் முதலாவது மாநாடு 1946ஆம் ஆண்டு ஒக்ரோபர் 23ஆம் திகதி நியூயோர்க் நகரில் நடத்தப்பட்டது.

**ஒக்ரோபர் 24**

உலகின் முதலாவது கால்பந்து கழகமான 'ஷெபீல்ட்', 1857ஆம் ஆண்டு ஒக்ரோபர் 24ஆம் திகதி கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பழைய மாணவர் குழுவால் ஆரம்பிக்கப் பட்டது.



**ஒக்ரோபர் 25**



ஐ.நா. சபையில் மக்கள் சீனக் குடியரசு நாட்டுக்கு இடமளிப்பதற்காக 1971ஆம் ஆண்டு ஒக்ரோபர் 25ஆம் திகதி ஐ.நாவில் இருந்து தாய்வான் வெளியேற்றப் பட்டது.

**ஒக்ரோபர் 26**

ரஷ்ய கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரான 'லியோன் ட்ரொஸ்கி' 1879ஆம் ஆண்டு ஒக்ரோபர் 26ஆம் திகதி பிறந்தார்.




**ஒக்ரோபர் 27**



1917ஆம் ஆண்டு, ஒக்ரோபர் 27ஆம் திகதி பிரான்ஸ் நாட்டுக்குள் அமெரிக்கப் படைகள் உள் நுழைந்தன.

**ஒக்ரோபர் 28**

அமெரிக்காவின் முதலாவது பல்கலைக் கழகமான 'ஹவாட்' பல்கலைக் கழகம் 1636ஆம் ஆண்டு ஒக்ரோபர் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.



**ஒக்ரோபர் 29**



சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஹென்றி டூனாண்ட் என்பவரால் 1863ஆம் ஆண்டு ஒக்ரோபர் 29 ஆம் திகதி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆரம்பிக் கப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




## மாவட்ட வலம் - வவுனியா

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

# English Language - I 31-T-I

### Answer all Questions

Test: 01

Complete the following announcement. Use a word from the box. The first one is done for you.

**in / under / with / on / for / of**

Ceylon pencil company together 1) .................. the little star Newspaper will sponser an art exiibition 2) ............. School children every week. Three winners will be selected.Send 3) ..........................your drawings 4)................... any topic 5) .................. your choice. The competition is open to all students 6) .................. ten years.

Littel Star Newspaper Ltd, Clombo- 06

Test: 02

Read the following conversations and fill in the blanks.

Eeetee: Oh! I hear a 1) ............... from 2)............... earth.
Veetee: From earth?
Eeetee: Look, what's that?
Veetee: There's some sort of 3) ...............going on.
Eeetee: It seems to me like big 4) ................
Veetee: Oh! a guest speaker.
Eeetee: What's he speaking about?
Veetee: M.m..m on the protection of the world cultural and natural 5).................
Eeetee: What is heritage?
Veetee: Now, listen the guest speaker is speaking.
Guest speaker: Let me explain what heritage is. It is our legacy from the past what we live with today and pass on to the future generation.

a) signal. b) planet.
c) heritage. d) conference.
e) organization.

Test: 03.

Correct the following sentences.

01) We are going to an hotel.
02) Rice is cereal.
03) Austria is an European country.
04) There are just few oranges left.
05) They have only little money.
06) One of my professors live next door.
07) All the books on the table needs rebinding.
08) Wheat and rice is cereals.
09) Ten rupees are a lot of money.
10) The woodlanders were written by Hardy.

Test: 04

Write five sentences about the picture given below.



Test :05

The diagram of a formal letter is given below. The different parts of it are given in jumbled order. Indicate the correct order of the different parts of the letter by matching the words with the numbers. Write the number in the box.

01. Yours Sincerely
02. Dear Sir/ Madam
03. No.10, Station road, Vavuniya.
04. T.Balan
05. I would like to apply for the post of Trainee Computer Programmer advertised in the Sunday Observer on the 13th August 2009
06. I look forward to hearing from
07. I am 23 years old got through the G.C.E A/L in the commerce stream
08. 20th August 2009.
09. Post of Trainee Computer programmer.
10. I enclose details of my previous work experience.
11. I have also followed a basic computer course at I.D.M, Vavuniya
12. The personal manager Suthan company Limited, 1st cross street, Vavuniya
13. Signature.

Test: 06

Write a paragraph on one of the following.

1) My hobby.
2) My class teacher.
3) My country.

Test: 07.

Read the following paragraph and answer the following questions.

Our days were spent in the servants' quarters in the southeast corner of the outer apartments. One of our servants was Shyam, a dark chubby boy with curly locks, hailing from the district of Khulana. He would put me into a selected spot and, tracing a chalk line all round, warn me with solemn face and uplifited finger, of the perils of transgressing this ring.

Whether the threatened danger was material or spiritual I never fully understood, but a great fear used to possess me and I had read in the Ramayana of the tribulations of Sita for having left the ring drawn by Lakshman. So it was not possible for me to be skeptical of its potency.

1) Where did the writer spend his day time?
2) Was Shyam the only servant?
3) Where did the servent come from?
4) Why was the author afraid of transgressing the cricle drawn by the servent?
5) What made Sita undergo the suffering?

Test: 08

It was agreed by the Interact club to invite a guest speaker, a lion member, td speak to the members. Write a notice convening a meeting.Use the following guidelines.

1) From -The secretary. Interact club.
2) To - All the members
3) Venue - The sports pavilion
4) Time 2.00pm
5) Date - You may write your own date
6) Guest speaker - Lion Dr.Ranjith Cooray.
7) Other present - The principal and members of the staff.

# English Language - II 31-T-II

Test: 09

Choose the correct word from the brackets and complete the following paragraph by filling in the blanks.

A man Damed Baxter studied plants for years using a galvanometer and he was most surprised at his results for a example, if he 1) ........... (has / had / have) two or more plants 2) ............ (in / of /at) a room and he 3) ................ (beginning/ begins/ began) to destroy one of 4) ............ (it / they / them) perhaps tearing its leaves 5).........(no / or/ are) pulling it out of 6) ........... (their / its / theirs) pot. Then the galvanometer 7) .............. (on / in / near) the leaves of the 8).........(another/ others/ other) plants showed a change 9)........... (at/ in/ with the elec tric field. they10)................ (seemed/seem/appearing) to befeeling of shock.

Test: 10

Change the followings into indirect speech. First one is done for you.

1) She said, "I make a doll today"
She said that she made a doll that day
2) He said, "My father starts a new job"
3) Sutha said, "I played cricket yesterday"
4) She said," My mother has cooked rice"
5) He said,"I will go to school tomorrow"
6) Sitha said,"My brother is coming to temple now"

Test:11

In this story the sentences are not all in the correct order. Put the numbers in the boxes from 1-10 and show the correct order of the events:

a) Gareth was afraid because he would not pass the end-of- year examination. ☐
b) Gareth was a student of the Gamini M.V. Kandy studying in year-10 ☐
c) Two days before the exam, he saw his teacher had left the cupboard unlocked where the exam paper was kept ☐
d) Next morning the teacher came to the class with a policeman to find that the pap had been returned to the cupbord. ☐
e) In the court though, Gareth's lawyer said he had not stolen the paper since he has returned it, and the charge of theft cannot he brought if the accused can show he did not intend to keep the article. ☐
f) His teacher however returned that evening for the paper and found it gone. ☐
g) Gareth was the only pupil to come early that day and was forced to admit he had taken it. ☐
h) He took the paper from the cupboard and took it home to study it. ☐
i) The boy was charged with theft of stealing the question paper. ☐
j) The school charged he had stolen the ideas in the paper but the judge ruled you cannot steal something which has no physical existece. ☐

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Continued on page (11)

**English Language II from page (10)**

Test:12

Read the following poem and answer the question given below

**I AM THE WIND**

I am the wind
Running a reckless race
Through the town and country side
over the hills, across the field
over the ocean, beside rivers
Blowing clouds across the sun's face
Buffeting birds flying home
I fight the trees, taking away.
Their covering of leaves,
Stealing boats and filling the sails
of a sailing yacht
I am the wind running a reckless race
Against my self.

1) Through what does the wind race?
2) What does the wind do to the sun?
3) How does the wind fight the trees?
4) What happens in the ocean when the wind runs it? Find the line and write it.
5) Underline the correct sentence.
   The wind is running with the birds.
   The wind is running against its own self.
   The Wind is running with myself.

Tet:13

Write on one of the following.
1) Uses of water
2) The importance of rain forest
3) Work helps to build a nation

Test:14

Write on one of the following. Use about 100 words
1) Write a letter to your friend congratulating him on his success in the examination with distinction.
2) Write a letter to the postmaster requesting him to redirect your letters to your new address.

Test:15

Read the text and answer the question given below.

I was boarded in the hostel during my school daysThe great midnight parties we used to have are one of my happiest memories of hostel life.Our hostel warden, Mr.Perera was a strict disciplinarian and these parties had to be organized very carefully and skillfully so each party of an adventure for us.

I remember one occasion pariculary well. The new term had begun and, of course a party was arranged. There was great excite ment during the day and our teachers must wondered what it was all about. There were no complaints over tea and boys accepted what was served.

Later that evening punctual as ever, Mr.Perera turned off lights at nine o' clock. We ccould be punished for talking after "lights out" but it was difficult for us to keep quiet. At about ten o'clock, Hasitha and Saman overcame their fears of Mr.Perera. They crept over to the window and drew out the curtains slightly to see if Mr.Perera's light had been turned off. It was still on and we waited eagerly for ages. We felt sorry to have given our hostel warden so, much marking to do.

When his lights went out at last, we all jumped out of bed. Hasitha produced a wax candle which he set in the middle of the floor. In no time the place was covered with cakes, biscuits,fruit,nuts and gallons of the soft drinks.

It must have been about one o'clock when some of us were falling asleep on the floor and only a few hardy ones were still eating when Sisra dropped his mother's cake tin. There was a loud crash and gathering up the remains of the party which we slipped under the bed-cloths, we retired to bed at once. It was a goodthing. We acted so rapidly, for a few minutes later the door opened and Mr.Perera appeared only to find little boys sleeping gently!

1) Why was it necessary to organize these parties very carefully and skillfully?
2) Underline the correct answer.
   The party was arranged ..................................
   a. in the middle of the term.
   b. at the beginning of the term.
   c. at the end of the term.
3) What were the boys not allowed to do after " lights out"?
4) Who watched whether Mr.Perera's light had been turned off?
5) What does "It" in paragraph 3 refer to?
6) Write the sentence, which say hostel warden corrected boy's home work?
7) Where did they hide the remains of the party?
8) How many boys were there in the hostel?
9) Find the similar words from the text to match the following words.
   a. on time ........................... b. fast ...........................

Test:16

Write about one of the following. Use about 250 words.
1) How can we make this world better place. Use the following guidelines.
   How family bonds help.
   School society and community play a major role
   Can people live without social links.
2) "A friend in need is a friend indeed"
   Why we need friends
   True friends and false friends
   How to identify good friends and keep friendship.
3) Complete the following story.
   We were watching the television. Sudddenly lights went out and my mother screamed ..................................
4) Write a report to be given to the Principal of your school on what you did on "National Environmental week"
   Include the following:
   How you organized your work.
   Who helped in your work.
   What special events you had.
   The experience you gained.

**ஆசிரியர்:**
Mr.K.Erambanathan
B.A(Eng) Dip.in.Edu,
V/Periyakomarasankulam,M.V,
Vavuniya.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

# முயற்சியாண்மைக் கல்வி T-I

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. "காவியா என்பவன் ஒரு வணிகக்கல்வி படித்த மிகவும் திறமையுடைய ஒரு மாணவன்" இக்கூற்றில் இருந்து பெறக்கூடியது,
   1) முயற்சியாண்மை பண்பு வெளிப்படுகிறது.
   2) பல்கலைக்கழகத் தெரிவு வெளிப்படுகிறது.
   3) பட்டதாரியாவதற்குரிய வாய்ப்பு வெளிப்படுகிறது.
   4) படிப்பில் கெட்டிக்காரன் என்பது வெளிப்படுகிறது.

02. ஜீவனா என்பவன் ஓர் ஆசிரியர் தொழிலில் நீண்டகாலம் ஈடுபட்டுள்ளான். இதன் மூலம் பெறப்படுவது,
   1) புரிந்துணர்வு. 2) விரக்தி.
   3) அனுபவமும் நிபுணத்துவமும். 4) ஓய்வு.

03. சகானா என்பவள் ஓர் ஆக்க சிந்தனையுடையவள். இவளால் செய்யக்கூடியது,
   1) புத்தாக்கம் செய்யலாம். 2) புரிந்துணர்வை ஏற்படுத்தலாம்.
   3) நேர்மையாக நடக்கலாம். 4) மேற்கூறிய எதுவுமல்ல.

04. அனுஷா என்பவள் ஒரு சிறந்த சமூக சேவகியாக உள்ளாள். இவள் பெறுவது,
   1) களவு. 2) மோசடி. 3) உளத்திருப்தி. 4) எதுவுமல்ல.

05. வித்தகி என்பவன் ஒரு கிராமத்தில் பற்பொடி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளான். இதனால் சமூகம் அடையும் நன்மைகளுள் ஒன்று,
   1) பிரதேச வளப்பயன்பாடு. 2) அன்னியச் செலாவணி.
   3) ஆணாதிக்கம். 4) வேலையில்லாப் பிரச்சினை.

*** இல. 06 - 10 வரையான வினாக்களுக்கு கணக்கீட்டு அறிவைப் பயன்படுத்துக.**

06. விற்பனைப் பெறுவனவுக்கான மூல ஆவணம்,
   1) கைச்சாத்து. 2) பற்றுச்சீட்டு. 3) வரவுத்தாள். 4) செலவுத்தாள்.

07. ஐந்தொகையின் நடப்புச்சொத்துக்கள் என்ற தொகுதியினுள் உள்ளடங்காதது,
   1) காசு. 2) வங்கி. 3) இருப்பு. 4) தளபாடம்.

08. ஒருவர் தமது சொந்தத் தேவைக்கு எடுப்பது,
   1) சேமிப்பு. 2) எடுப்பனவு. 3) இலாபம். 4) நட்டம்.

09. நிறுவனம் ஒன்றில் காணப்படும் பொருளாதார வளம்,
   1) பொறுப்பு. 2) செலவு. 3) சொத்து. 4) வருமானம்.

10. குறிப்பிட்ட ஒரு திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான என தலைப்பு இடுவது,
   1) ஐந்தொகை. 2) வருமானக்கூற்று.
   3) பேரேட்டுக்கணக்கு. 4) மேற்கூறிய எதுவுமல்ல.

11. ஆரம்பகாலத்தில் முயற்சியாளர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டோர்,
   1) போர் வீரர்கள். 2) மன்னர்கள்.
   3) வேடர்கள். 4) குடும்பத் தலைவர்கள்.

12. முயற்சியாண்மையின் பண்புகளில் ஒன்று அல்லாதது,
   1) நோக்கு. 2) நெகிழ்வு தன்மை.
   3) ஆரம்பம். 4) இலாப நோக்கம்.

13. முயற்சியாண்மையின் சவால்களுள் ஒன்றான சமயம் என்பதற்கு சிறந்த உதாரணம்,
   1) இந்துக்கள் வியாபாரம் செய்வதில்லை.
   2) இஸ்லாமியர்கள் வட்டிக்கு பணம் கொடுப்பதில்லை.
   3) கிறிஸ்தவர்கள் மத நம்பிக்கை உடையவர்கள்.
   4) பௌத்தர்கள் உயிர் கொலை செய்வதில்லை.

14. ஒருவர் சமூக முயற்சியாண்மையில் ஈடுபட பிரதான காரணம்,
   1) சட்ட வரையறை.
   2) வருமானம் அதிகம் பெறலாம் என்பது.
   3) புகழ்ச்சிக்காக.
   4) சமூகத்தை நல்வழிப்படுத்த.

15. முன்பள்ளி, பூக்கன்று வளர்த்தல், அலங்காரம் ஆகிய முயற்சிகளுக்கு பொருத்தமான உதாரணம்,
   1) முயற்சியாளர். 2) பெண் முயற்சியாளர்.
   3) ஆண்கள். 4) சமூக முயற்சியாண்மை.

16. குமார் என்பவர் மிகக்குறைந்த மூலதனத்தை வைத்துள்ளார். உதவியாளர் வசதி இல்லாத குமார், நகரத்தில் தனது தொழிலை ஆரம்பிக்க விரும்புகிறார். இவருக்கு பொருத்தமான வணிக முறை எது?
   1) சிறு வணிகம். 2) தனியுடமை.
   3) பெண் முயற்சியாண்மை. 4) கம்பனி.

17. குடும்பம், கல்வி, தொழில், அனுபவம், வயது, திருமணம் போன்ற காரணிகள்,
   1) எல்லோருக்கும் பொதுவானவை.
   2) கல்விமான்களும் பொருத்தமானவை.
   3) முயற்சியாளர்களுக்கு அடிப்படையானவை.
   4) ஒரே தொழில் செய்வோர்க்குரியவை.

18. முயற்சியாளனது பண்புகளில் பொருத்தமற்றதை தெரிவுசெய்க.
   1) தூர நோக்கு. 2) கடின உழைப்பு.
   3) சகிப்புத்தன்மை. 4) இலாபநோக்கு.

19. தேவை விருப்பம் என்பதற்கு பொருத்தமான சோடியை தெரிவுசெய்க.
   1) வீடு - மாடி வீடு. 2) பசி - உணவு.
   3) தாகம் - நீர். 4) ரயர் - சியூப்.

20. வணிக சூழல் என்பது,
   1) முயற்சியாண்மையில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள்.
   2) முயற்சியாளனுக்கு சாதகமான சூழல் காரணிகள்.
   3) முயற்சியாளனுக்கு பாதகமான காரணிகள்.
   4) இது விஞ்ஞானம் தொடர்பான ஒரு பதம்.

21. சுனாமி, சூறாவளி, மண்சரிவு என்பன,
   1) மழையுடன் தொடர்புடையவை. 2) இயற்கைச்சூழல் காரணிகள்.
   3) விஞ்ஞான சூழல். 4) அரசியல் சூழல்.

22. பதிலீட்டு பண்டத்திற்கு உதாரணம்,
   1) தேயிலை - சீனி. 2) தேயிலை - கோப்பி.
   3) கோப்பி - சீனி. 4) உரல் - உலக்கை.

23. சில்லறை வணிகம் என்றால்,
   1) மீள் விற்பனைக்கு விற்றல். 2) அதிகளவு பொருளை விற்றல்.
   3) நுகர்வுக்கு விற்றல். 4) சில பொருட்களை விற்றல்.

24. நுகர்வோரை தெரிவுசெய்ய பொருத்தமான முறை,
   1) விளம்பரம். 2) இலவச இணைப்பு வழங்கல்.
   3) போட்டிகளை நடத்துதல். 4) சந்தை ஆய்வு.

25. SWOT ஆய்வு முறைக்கு அடங்காதது,
   1) பலம். 2) வாய்ப்புகள். 3) சவால்கள். 4) சந்தை.

**ஆசிரியர்: M.மதி (B.A.F), விபுலானந்தா கல்லூரி, வவுனியா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்டிக் கடற்கரை புனரமைப்பு; ஆளுநர், அமைச்சர் நேரில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக்.29

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் சாட்டி கடற்கரைப் பகுதிக்கு நேற்று முன்தினம் சென்று அப்பகுதியின் புனரமைப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமாரை உடன் அழைத்து கலந்துரையாடியதுடன் சாட்டி கடற்கரைப் பகுதி புனரமைப்புப் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப் பட்டுள்ளது. (1)

## விஞ்ஞானக் கண்காட்சி

கோப்பாய், ஒக்.29

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் விஞ்ஞான புத்தாக்கக் கண்காட்சி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-72)

## தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

கோப்பாய், ஒக்.29

செவ்வாய் இரவு தொடக்கம் பெய்து வரும் மழையினால் கடந்த மாதம் நிலவி வந்த வெப்பம் தணிந்துள்ளதுடன் விவசாயிகளும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக மந்தமடைந்த நிலையில் விவசாயச் செயற்பாடுகள் காணப்பட்டதுடன் விவசாயிகளும் சலிப்புற்ற நிலையில் காணப்பட்டனர். விவசாயிகள் சாதாரண நீர்ப்பாசனத்திற்குக் கூட கிணறுகளில் நீர் வற்றியதால் அவதிப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல இடங்களில் நெற்பயிர்கள் முளைத்துக் கருகிவிட்டதாகவும் சில விவசாயிகள் இரண்டாம் முறை விதைத்து அதுவும் கருகிவிட்டதாகக் கவலையுடன் தெரிவிக்கின்றனர். மீள விதைத்தால் தொடர்மழை பெய்யத் தொடங்கினால் அதுவும் சேதமடைந்து நஷ்டத்தை ஏற்படுத்தலாம் என விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது. (1-72)

## யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்

பருத்தித்துறை

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை – 2009

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



| | | | |
|---|---|---|---|
| நாகேந்திரராஜா மதன்ராஜ்(165) | தங்கவேலாயுதம் வேல்கஜா (164) | ரவிக்குமார் நர்மிகா (162) | சிவகுமார் யதுஷா (151) |



| | | | |
|---|---|---|---|
| சிவராசா நிசாலினி(149) | தேவராசா கோபினங்கா (147) | சிவநேசன் காயத்திரி(143) | சிவதாசா கஸ்சியா (141) |

வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளை எடுத்தவர்களாகிய கே.உஷாந்தன் (139), ர. றஞ்சித் (138), த.அதிசயன் (137),சே.திருராஜ் (136), த.நிறோஜன் (133), கி.மதினா (133),வ.அன்பரசி(131) ,கு.நிதுசா(130) ஆகியோர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இவர்களைச் சிறப்பாக வழிகாட்டி கல்வி புகட்டிய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் வசதிகளை ஏற்படுத்தித் தந்த பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ,பெற்றோர்கள் போன்றோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்,
பருத்தித்துறை.

T.P: 0212264872
www.mpsvidyalayam.lk
(சி/561868)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.

PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:

ஸ்ரீ ஜெயா முருகானந்தம் ஸ்டோர்ஸ்

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## யா/வீரசிங்கம் மகா வித்தியாலயம்

தரம் - 5, 2009 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான

## பாராட்டு விழா

காலம்: 29/10/2009 (வியாழக்கிழமை) காலை 9 மணிக்கு

| | | |
|---|---|---|
| 01. | செல்வி கனகேஸ்வரன் கவிப்பிரியா | 178 |
| 02. | செல்வி சிவானந்தம் தேனுசா | 174 |
| 03. | செல்வன் கோடீஸ்வரன் வித்தகன் | 171 |
| 04. | செல்வன் அன்னலிங்கம் கௌசிகன் | 166 |
| 05. | செல்வன் விமலறஞ்சன் தனுசன் | 158 |
| 06. | செல்வன் யோகநந்தன் சஜீவன் | 156 |
| 07. | செல்வி தயாபரன் லதிசனா | 156 |
| 08. | செல்வன் கணேசலிங்கம் விதுரன் | 154 |
| 09. | செல்வி சிவனேசன் பியூலா | 153 |
| 10. | செல்வன் தர்மராஜா வேனுசன் | 151 |
| 11. | செல்வன் நித்தியானந்தன் துவாரகேசன் | 150 |
| 12. | செல்வன் பஞ்சாட்சரமூர்த்தி பரணிதன் | 150 |
| 13. | செல்வி கதிர்காமநாதன் கஸ்தூரிகா | 150 |
| 14. | செல்வி இரங்கநாதன் மோனிசா | 150 |
| 15. | செல்வி சண்முகரத்தினம் கஜலினி | 144 |

மேற்படி புலமைப் பரிசல் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 21 மாணவர்களையும் மற்றும் வழி நடத்திய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

யா/வீரசிங்கம் மகா வித்தியாலயம், மீசாலை.
(90322)
அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர், கல்வி சாரா ஊழியர்கள்.

யாழ் புத்தக கண்காட்சி 2009




Main Sponsor

எம்.டி.குணசேன புத்தக சாலை

Endorsed by

Ministry of Education

Northern Provincial Council

Official stall contractor

pico

அனுமதி இலவசம்

Organized by

pico Events

28 - 31 ஐப்பசி

(9 a.m - 5 p.m)

யாழ் மத்திய கல்லூரியில்

## 2 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 10 . 10 . 1934

மறைவு 22 . 10 . 2007

அமரர்

## சின்னப்பிள்ளை சுப்பிரமணியம் (J.P)

(தென்மராட்சி மேற்கு, கைதடி ப.நோ.கூ.சங்கத்தலைவரும், யாழ்.விவசாய நுகர்ச்சி கூ. ச.சமாசத் தலைவரும்)

திதி. 29.10.2009

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வம் ஆகிவிட்ட எம்
பெருமானே! எம் தலைவா!!
தரணியிலே எமைத் தவிக்கவிட்டு
விரும்பியா விண்ணுலகம் சென்றீர்
காலமெல்லாம் எமைக் கௌரவமாய்
காப்பாற்றுவீர் என்று கலங்காதிருந்தோம்.

கைதடி தெற்கு,
கைதடி.
(சி/561870)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் இசைப்பாடசாலை ஒன்றை அமைக்க அரசின் அனுமதியைப் பெறவுள்ளேன்

## இசையமைப்பாளர் விஜய் அன்ரனி இணையத்தளத்துக்குச் செவ்வி



யாழ்ப்பாணத்தில் விஜய் அன்ரனி இசைப் பாடசாலை ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளேன். இது தொடர்பாக அரசாங்கத்துடன் கலந்து பேசி அனுமதி பெற இருக்கின்றேன். கர்நாடக இசை மட்டுமன்றி, இசையில் தொழில்நுட்பத்தையும் சேர்த்து பயிற்சி அளிப்பதே எனது நோக்கம் என்று கூறினார் பரபல இந்தியத் திரைப்படப் பின்னணி இசையமைப்பாளர் விஜய் அன்ரனி.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில், விஜய் அன்ரனியின் இன்னிசை நிகழ்வு நடைபெற்றது. நாமல் ராஜபக்ஷவின் 'இளைஞர்களுக்கான நாளை' திட்டத்தின் ஓர் அம்சமாக இந்த இன்னிசை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இன்னிசை நிகழ்வை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பிய விஜய் அன்ரனி, தாயகம் திரும்புமுன் இணையத்தளம் ஒன்றுக்குப் பிரத்தியேக நேர்காணல் ஒன்றை வழங்கிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அவர், கூறுகையில்:

யாழ்ப்பாணத் தமிழ் வித்தியாசமானது. நாம் பேசும் தமிழைவிடத் தெளிவானது. நாம் சற்று நீளமாக, ஆங்கிலம் கலந்த தமிழைப் பேசுகின்றோம். ஆனால் யாழ்ப்பாணத் தமிழ் அப்படியல்ல. அவர்கள் பேசும் தமிழ் சிறப்பாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இன்னிசை நிகழ்வைக் காண சுமார் 2 லட்சம் பேர் அந்த அரங்கத்தில் கூடியிருந்தனர். அங்கு அமர்வதற்கு நாற்காலிகள் கூட இருக்கவில்லை. நின்றபடியே அவர்கள் இசையை ரசித்தார்கள். இது மனதில் நெகிழ்வை ஏற்படுத்தியது.

அங்கு மேடையில் வைத்து ஒரு விடயத்தைக் கூற இருந்தேன். ஆனால் கூற சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதாவது யாழ்ப்பாணத்தில் விரைவில் விஜய் அன்ரனி இசைப் பாடசாலை ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளேன். இது தொடர்பாக அரசாங்கத்துடன் கலந்து பேசி அனுமதி பெற இருக்கின்றேன். கர்நாடக இசை மட்டுமன்றி, இசையில் தொழில்நுட்பத்தையும் சேர்த்து பயிற்சி அளிப்பதே என் நோக்கம்.

நான் யாழ்ப்பாணம் பயணித்த பாதையில் பல கோயில்கள் இருக்கக் கண்டேன். அந்த வகையில் யாழ்ப்பாணம் தெய்வீகமான ஓரிடமாகவே எனக்கு எண்ணத் தோன்றுகின்றது.

யாழ்ப்பாணம் அபிவிருத்தியடைந்து நல்லதொரு சூழ்நிலை விரைவில் ஏற்பட வேண்டும்; ஏற்படும் என்று நம்புகின்றேன் - என்றார்.

## கல்வி நிர்வாக சேவை அலுவலர்கள் தற்காலிக இணைப்பு

தீவக வலயத்திற்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை அலுவலர்கள் மூவர் தற்காலிக இணைப்புப் பெற்று வந்துள்ளனர். திருமதி அ.கிறிஸ்ரி வொலன்ரைன் (கணிதம் - துணுக்காய் வலயம்), திருமதி வே. பாலேந்திரா (விஞ்ஞானம் - மடு வலயம்), செல்வி கிறேஸ் தேவதயாளினி தேவராசா (பொது - மடுவலயம்) ஆகிய மூன்று அலுவலர்களும் மாகாணக் கல்விச் செயலரின் கடிதத்தின் படி 26.10.2009 முதல் அலுவலகத்தில் கடமையேற்றுள்ளனர் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (50-267)

## பொதுக் கூட்டமைப்பில் இணைவது குறித்து

# அரசில் உள்ள கட்சிகளுடனும் பேச்சு நடத்துகிறது ஐ.தே.க.

கொழும்பு,ஒக்.29

ஐக்கிய தேசியக் கட்சியால் உருவாக்கப்படவுள்ள பொதுக்கூட்டமைப்பில் சேர்த்துக்கொள்வதற்காகத் தற்போது அரசுடன் இணைந்துள்ள கட்சிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி பேச்சு நடத்தி வருகின்றது என்று அக்கட்சியின் எம்.பி. தயாசிறி ஜயசேகர கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறக் கூடிய ஒரு வேட்பாளரை நாம் நிறுத்துவோம். எமது கட்சியின் செயற்குழு இது தொடர்பாகக் கலந்தாலோசித்து நல்லதொரு வேட்பாளரைத் தெரிவுசெய்யும்.

நாம் இப்போது பொதுக் கூட்டமைப்பு அமைக்கும் விடயத்தில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். பல கட்சிகளுடன் பேச்சுகளை நடத்தி வருகிறோம்; குறிப்பாக அரசுடன் இணைந்துள்ள கட்சிகளுடன் நாம் பேச்சு நடத்தி வருகிறோம்.

தேர்தல் அறிவிக்கப்பட்டதும் அரசில் உள்ள பலர் எம்முடன் இணைவர். அவர்கள் யார் என்பது அப்போதுதான் தெரியவரும்.

இந்த அரசைத் தோற்கடிப்பதற்காக நாம் பெரும் சக்தியாகத் திரண்டு தேர்தலில் போட்டியிடுவோம். ஊழல், மோசடிகள் மற்றும் ஜனாதிபதி முறைமையை ஒழித்தல், ஜனநாயகத்தை நிலைநாட்டுதல் போன்ற கொள்கைகளை முன்வைத்தே நாம் எதிர்வரும் தேர்தல்களில் குதிப்போம் - என்றார். (அ-சி)

# கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர்சபை அங்குரார்ப்பண நிகழ்வு இன்று

நல்லூர், ஒக்.29

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் மத்தியஸ்தர்சபை அங்குரார்ப்பணமும் உறுப்பினர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று வியாழக்கிழமை கோப்பாய் பிரதேச செயலர் சி. மோகன்றாஸ் தலைமையில் நடைபெறும்.

கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக 511ஆவது படையணி தளபதி கேணல் டபிள்யூ. டி.சி.ஜே.கொஸ்தா, அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி.சிறிநிசங்க யசரட்ண, கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி அசோககுமார, மத்தியஸ்தர்சபை நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் ப.சனதனன் ஆகியோர் கலந்துகொள்வர். ஏற்புரையை கோப்பாய் மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் இ.மயில்வாகனம் நிகழ்த்துவார். (1-111)

# துகள்கள் நிறைந்த மருந்துக் குப்பிகள் இரத்தினபுரி வைத்தியசாலையில் மீட்பு!

கொழும்பு ஒக்.29

துகள்கள் நிறைந்த மருந்துக் குப்பிகள் சில இரத்தினபுரி வைத்தியசாலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மருந்துக் குப்பிகளைப் பரிசோதிப்பதற்காக அவை சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என மேற்படி வைத்தியசாலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வாமை நோயைத் தடுப்பதற்கு வழங்கப்படும் 'ட்ரோ மெக்சிடிசன்' எனப்படும் மருந்துக் குப்பிகளிலேயே கண்ணாடித் துகள்கள் அடங்கிய சில குப்பிகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று மேற்படி மாவட்டத்திலுள்ள எஹலியகொட வைத்தியசாலையிலும் இவ்வாறான துகள்கள் அடங்கிய குப்பிகள் முன்னர் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

# கல்விமாணிப் பட்டநெறி நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.29

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் கல்விமாணிப் பட்டநெறிக்கு 2009/2010 கல்வி ஆண்டுக்குப் புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினமும் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற வுள்ளது.

தெரிவுப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெற்ற 183 ஆசிரியர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையின்போது அழைப்புக் கடிதம், தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் பெறுபேற்றுச் சான்றிதழின் முதல் பிரதி, முதல் நியமனக் கடிதம், ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ், தமது விலாசத்துடன் கூடிய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை, இலக்கம் 2 தொடக்கம் 5 வரையான சான்றிதழ்களின் போட்டோப் பிரதி ஆகிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப்பட்ட நெறியின் யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (201)

# பயங்கர வாதத்துக்கும் பாதாள உலகத்துக்கும் அடிபணிந்த யுகத்துக்கு முற்றுப்புள்ளி

## களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் ஜனாதிபதி

கொழும்பு,ஒக்.29

பயங்கரவாதத்திற்கும் பாதாள உலகத்திற்கும் அரசாங்கங்கள் அடிபணிந்த யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இன்று நாட்டில் சட்டம், ஒழுங்கை எம்மால் நிலைநாட்ட முடிந்துள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைக்க பயங்கரவாதிகள் முனைந்த போது அதற்கெதிராகப் போராடிய தமிழ் பொலிஸ் அதிகாரியான திருநாவுக்கரசு போன்றவர்கள் பொலிஸ் வரலாற்றில் மறக்க முடியாதவர்கள் . அவர்கள் நாட்டின் ஐக்கியத்துக்காக உயிர்த்தியாகம் செய்தவர்கள் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பயிற்சியை முடித்துக்கொண்டு சேவைக்குத் திரும்பும் 370 புதிய பொலிஸ் அதிகாரிகளைத் கௌரவிக்கும் நிகழ்வொன்று கடந்த 25 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றது.

அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க, ரோஹித அபேகுணவர்த்ன, நிர்மல கொத்தலாவல. நந்தன குணதிலக்க உட்பட அமைச்சர்கள், முக்கியஸ்தர்கள், பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ்துறை உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு, கிழக்கில் பொலிஸார் பயங்கரவாதிகளுக்கு அடிபணிந்து செயற்பட்டதுடன், தெற்கில் பொலிஸார் பாதாள உலக குழுக்களுக்கு அடிபணிந்து செயற்பட்ட காலம் ஒன்று இருந்தது. எமது அரசாங்கம் அந்நிலையை மாற்றியுள்ளது.

பொலிஸ்சேவை இன்று சிறப்பானதாக உள்ளது இன்றைக்கு நான்குவருடங்களுக்கு முன்பிருந்தது போலன்றி அத்துறை பாரிய முன்னேற்றம் அடைந்துள்ளது. பொலிஸ் நிலையத்தின் செயற்பாடுகளிலும் மக்கள் சேவையிலும் பொலிஸார் திருப்தியுறாத பிரச்சினைகள் நிறைந்த காலங்கள் இருந்துள்ளன. சகல பிரச்சினைகளும் தற்போது தீர்க்கப்பட்டு பதவி உயர்வு உட்பட சகல சலுகைகளும் பொலிஸாருக்கு உரிமையாகியுள்ளன.



இப்போது நாட்டின் சகல பகுதிகளிலும் பொலிஸார் அதிகாரத்துடனும் சுயாதீனமாக செயற்பட வாய்ப்புக் கிடைத் துள்ளது. தற்போது யாழ்ப்பாணத்தில் தமிழ் இளைஞர்கள் பொலிஸ் சேவைக்காக இணைக்கப்பட்டு வருகின்றனர். எதிர் காலத்தில் அவர்கள் ஐக்கிய இலங்கையைப் பாது காக்கும் பொலிஸ் ஸாராகத் திகழ்வர்.

மக்கள் பாதுகாப்பு மட்டுமன்றி நாட்டின் முக்கிய தலைவர்கள், பிரபுக்களின் பாதுகாப்பும் பொலிஸாரின் கைகளிலேயுள்ளது. சில பொலிஸ் அதிகாரிகளினால் பொலிஸ் துறைக்கே களங்கம் ஏற்பட்டுள்ளது நாட்டைக் காட்டிக்கொடுத்து வாழ்க்கையில் திருப்திகாண முடியாது.

பயங்கரவாதத்தை ஒழிப்பதில் இராணுவத்தினர் அர்ப்பணிப்புடன் உழைத்தது போல் நாட்டில் சட்ட ஒழுங்கைப் பாதுகாக்கப் பொலிஸார் அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டியுள்ளது. அப்போதுதான் மக்கள் கௌரவம் என்னும் வெற்றியை பொலிஸார் பெறமுடியும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (சி)





அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்தறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட விருந்தினர்களை கல்லூரி மாணவத் தலைவி செல்வி ஆன்றிசா கெமில்டன் கைலாகு கொடுத்து வரவேற்பதையும், கல்லூரியில் இருந்து பல்கலைக்கழக அனுமதிபெற்ற செல்வி தம்பிராசா செரின் கலீஸ்ராவுக்கு அமைச்சர் பரிசில் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ, பிரதி அதிபர் காசிப்பிள்ளை யோகேஸ்வரி, கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி வி.எஸ். சித்திர வடிவேல், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சில்வெஸ்திரி அலன்ரின், அச்சுவேலி அமைப்பாளர் எம்.தர்மராசா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (படங்கள்: அச்சுவேலிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரலாறு கொடுத்த வாய்ப்பு பயன்படுத்துவார்களா தமிழர்கள்?

அரசியல் விமர்சகர்
- மகரிஷி -

நீண்டகால மௌனத்தின் பின்னர் சர்வதேச சமூகம் மஹிந்தா அரசிற்கு நடைமுறை அழுத்தத்தினைக் கொடுக்க தொடங்கிவிட்டது. இலங்கையில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய சர்வதேச சக்திகள் என்பவை அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான், இந்தியா என்பவைதான். இவையனைத்தும் தனித்தும் கூட்டாகவும் அழுத்தத்தைக் கொடுக்கத் தொடங்கியுள்ளன. கூட்டு அழுத்தம் பொதுவாக ஐக்கிய நாடுகள் சபை மூலம்தான் கொடுக்கப்படுகின்றது.

அமெரிக்கா, இலங்கை விவகாரம் தொடர்பான அறிக்கையை செனற்சபையில் சமர்ப்பித்துள்ளது. அமெரிக்காவின் தென்ஆசியாவிற்கான இராஜாங்கச் செயலாளர் பிளேக் இது தொடர்பாகக் கடுமையான அறிக்கைகளை விடுத்துவருகின்றார். ஐரோப்பிய யூனியன் 'ஜி.எஸ்.பி. பிளஸ்' சலுகையை நிறுத்தும்படி தனது உறுப்பு நாடுகளுக்கு சிபாரிசு செய்துள்ளது. இதற்கு அப்பால் பிரிட்டன் இலங்கைத் தலைவர்கள் பலரின் பிரிட்டனுக்கான விசா விண்ணப்பங்களை நிராகரித்துள்ளது.


இரா.சம்பந்தன்

ஜனாதிபதியுடன் ஜப்பான் பயணம் செய்யவிருந்த பலருடைய விசா விண்ணப்பங்களை ஜப்பான் நிராகரித்ததுடன் ஜப்பான் சென்ற பிரதமரையும், அரை மணி நேரத்திற்கு மேலாக விமான நிலையத்தில் தாமதப்படுத்தி கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்து அவமானப்படுத்தியுள்ளது.

## இந்திய அழுத்தம்

இந்தியா இவற்றுடன் இணைந்து செயற்படாவிட்டாலும் மீள்குடியேற்றம், அரசியல் தீர்வு ஆகியன தொடர்பாகக் கடுமையான அழுத்தத்தினைக் கொடுத்துள்ளது. இது தொடர்பாக இந்தியப் பிரதமரின் கடிதம் நேரடியாகவே ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வழுத்தங்கள் காரணமாக ஜனாதிபதி தனது ஐ.நா. பயணத்தைக் கைவிட்டு பிரதமரை ஐ.நாவிற்கு அனுப்பியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையில் பல தலைவர்களின் விமர்சனங்களுக்கு முகங்கொடுக்க வேண்டும் என அவர் அஞ்சியிருக்கலாம். இதற்கு அப்பால் சர்வதேச சக்திகளின் கூட்டு அழுத்தம் என்ற வகையில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ச்சியாக அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றது. அடுத்தடுத்து இலங்கை வருகின்ற ஐ.நாவின் பிரதிநிதிகள் முன்னரைப்போன்று அல்லாமல் காட்டமான அறிக்கைகளை விடுத்து வருகின்றனர்.

## சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்குள் இலங்கை செயற்படாமை

சர்வதேச சமூகம் அழுத்தங்களைக் கொடுப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

அதில் முதலாவது, சர்வதேச சக்திகளின் நிகழ்ச்சி நிரலுக்குள் வந்து செயற்பட இலங்கை மறுக்கின்றமையாகும். சர்வதேச சக்திகளிடம் - குறிப்பாக மேற்குலக சக்திகளிடம் - தமது ஆதிக்கத்தை உலகில் மேலோங்கச் செய்வதற்கு அரசியல், பொருளாதார ரீதியாக சில பொறிமுறைகள் உண்டு.


ராகுல் காந்தி

ஜனநாயகம், மனித உரிமைகள், சட்டவாட்சி, ஊடகச் சுதந்திரம், திறந்த பொருளாதாரம், உதவி வழங்குதல் என்பவையே அப் பொறிமுறைகளாகும். இப் பொறிமுறைகள் உயர்ந்தபட்சம் செயற்படும்போதுதான் தமது ஆதிக்கத்தை அவர்களால் தக்க வைத்துக்கொள்ள முடியும்.

இப்பொறிமுறைகளைப் பின்பற்ற இலங்கை அரசு மறுப்பதுடன், இவ்வழுத்தங்களுக்கு முகங்கொடுப்பதற்காக மேற்குலகத்தினதும், பிராந்திய சக்தியினதும் எதிர் சக்திகளோடு உறவு கொள்ளவும் அது முயற்சிக்கின்றது. போர்க்காலத்திலும் இந்த உறவினைப் பயன்படுத்தியே மேற்குலக, பிராந்திய சக்திகளின் எதிர்ப்பினை அது தடுத்து வந்தது. தற்போதும் அதன் தொடர்ச்சியையே அது பேண முயற்சிக்கின்றது.

மேற்குலகத்தைப் பொறுத்தவரையில் ஆசிய மட்டத்தில் எதிர்நிலையில் உள்ளவை என கருதப்படுபவை, சீனா, ஈரான், மியன்மார் என்பவைதான். இச்சக்திகளின் ஆதிக்கம் இலங்கைத் தீவில் வளரக் கூடாது என்பதற்காகத்தான் போர்க் காலத்தின்போது அரசு பக்கத்தில் மேற்குலகச் சக்திகள் நின்றன.

இலங்கைத்தீவு தென்னாசியாவின் கேந்திர மையத்தில் இருப்பதனால் எதிர்நிலை சக்திகளின் ஆதிக்கம் இலங்கையில் அதிகரிக்கும்போது முழு தென்னாசியாவில் மட்டுமல்லாமல் கிழக்காசியா, மேற்காசியா என்பவற்றிலும் மேற்குலகின் ஆதிக்கத்திற்கு அது பாதிப்பைச் செலுத்தும் என்பது அவற்றிற்கு நன்றாகவே தெரியும்.

இத்தகைய கேந்திர அரசியல் நோக்கு காரணமாக முழு இலங்கைத் தீவும் தமக்குத் தேவை என்பதாலேயே தமிழ் மக்களின் தமிழீழ கோரிக்கையை ஆதரிக்க இவை முன்வரவில்லை. எனினும் போரின் இறுதிக் கட்டத்தில் புலிகள் இல்லாவிட்டால் அரசினைக் கட்டுப்படுத்துவது கடினமாக இருக்கும் என்பதாலும், மனித உரிமைகள் மோசமாக பாதிக்கப்பட்டதாலுமே போரை நிறுத்த அவை முனைந்தன. ஆனால் இந்திய ஆதரவு கிடைக்காததினால் அது இயலவில்லை.

## சர்வதேசக் கூட்டுப் பொறிமுறையின் ஆதிக்கத்தைத் தக்க வைக்கும் முயற்சி

இரண்டாவது காரணம் - ஐக்கிய நாடுகள் சபையின் நம்பகத்தன்மை சரிந்து சென்றுவிடும் என்ற அச்சமாகும். சர்வதேச சக்திகள் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு கூட்டு பொறிமுறைக் கருவியாக ஐக்கிய நாடுகள் சபையினையே பயன்படுத்துகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப இங்கை செயற்படாதபோது அதனைத் தடுக்காவிட்டால், ஐக்கிய நாடுகள் சபையின் நம்பகத்தன்மை சரிந்து போவது தவிர்க்க முடியாததே. போர்க் காலத்தில் சட்ட திட்டங்களை மறுப்பதற்கு நியாயம் கூறினாலும், போர் இல்லாக் காலத்தில் அதனை தொடர்ச்சியாக அனுமதிப்பது நம்பகத்தன்மையை வெகுவாகவே பாதிக்கும். அதுவும் வேறு, வேறு நாடுகளில் வேறு, வேறு அணுகுமுறைகளைப் பின்பற்றும்போது கண்டனங்களும், எதிர்ப்புகளும் வருவதற்கு அதிகமாகவே வாய்ப்புக்கள் இருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபை அரசியல் காரணங்களுக்காக சூடான், மியன்மார் விடயங்களில் தீவிரமான போக்கினையும், இலங்கை விடயத்தில் மென்மையான போக்கினையும் கடைப்பிடித்து வந்தது. இதற்கு பிரதான காரணம் இந்தியாவே. இதனால் பலத்த கண்டனங்களை அது எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இன்று ஐக்கிய நாடுகள் சபையுடன் அதன் செயலாளரினதும் நம்பகத்தன்மையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அவர் கையாலாகாதவர் என்ற விமர்சனமும் எழுந்துள்ளது. ஐ.நா. செயலாளருடன் இணைந்து தான் முன்னர் வெளியிட்ட கூட்டறிக்கையை இலங்கையரசு பின்னர் சிறிது கூட கணக்கில் எடுக்காததினால் அவரின் நம்பகத்தன்மை அதல பாதாளத்திற்குச் சென்றுள்ளது.

சர்வதேச சக்திகள் தமது கூட்டு ஆதிக்கத்தை முன்னர் கூறியமை போல ஐக்கிய நாடுகள் சபையினூடாகவே செயற்படுத்துவதினால், ஐ.நாவின் நம்பகத்தன்மை ஒரு மட்டத்திற்கு மேல் சரிந்து செல்வதை அவற்றால் அனுமதிக்க முடியாது. இதனாலேயே அவசர அவசரமாக பல முனைகளுக்கு ஊடாக அழுத்தங்கள் பீறிட்டுப் பாய்கின்றன.

உண்மைகளைப் படுக்கை விரிப்புக்குள் மறைத்தல், வாக்குறுதிகளை வழங்கிவிட்டு நடைமுறையில் அவற்றுக்கு எதிராக செயற்படுதல் என்பவைதான் சர்வதேச சக்திகளை அதிக கோபத்திற்குள்ளாக்கியிருக்கின்றன. ஐ.நா. ஊழியர்கள் கைது செய்யப்பட்டமை யுனிசெவ் அதிகாரியின் விசா இரத்து செய்யப்பட்டமை, பத்திரிகையாளர் திஸாநாயகத்திற்கு 20 வருட தீர்ப்பு வழங்கப்பட்டமை போன்ற அண்மைக்கால நிகழ்வுகள் சர்வதேச சக்திகளை உசுப்பேற்றி விட்டுள்ளன.

## புலிகளின் மீள் எழுச்சிக்கான வாய்ப்புப் பற்றிய அச்சம்

மூன்றாவது - தமிழ் மக்களுக்குச் சார்பான நடவடிக்கைகள் சிறிதளவாவது முன்னேறாவிட்டால் புலிகள் மீள் எழுச்சி பெறுவர் என்ற அச்சமாகும். புலிகள் திரும்ப மீள எழுவார்களேயானால் நியாயம் அவர்களின் பக்கமே இருக்கும். இது எதிர் நடவடிக்கைகள் எவற்றையும் அவர்கள் மீது எடுக்க முடியாத நிலையை ஏற்படுத்தும். அதற்கான தார்மீக உரிமையும் அற்றுப் போயிருக்கும்.

தமிழ் மக்கள் தற்போது புலிகள் இல்லாத வெற்றிட நிலையினை அனுபவ ரீதியாகவே உணர்ந்து வேதனைப்படுகின்றனர். அவர்கள் மீள எழும்புவார்களாக இருந்தால் முன்னரைவிட மிகப்பெரிய ஆதரவு அவர்களுக்குக் கிடைக்கும். புலிகள் தனித்துப் போராடுவதற்குப் பதிலாக உலகத் தமிழர்கள் அனைவரும் இணைந்து போராடக் கூடிய சூழல் ஏற்படும். உலகின் முற்போக்கு ஜனநாயக சக்திகளும் போராட்டத்திற்குத் துணையாக நிற்கும். வெறுமனே தேசிய இனத்தின் போராட்டமாக இல்லாமல் மனித தர்மத்திற்கான போராட்டமாக அது வளர்ச்சியடையும். இவ்வாறான நிலை வருமாக இருந்தால், அமெரிக்கா, இந்தியா மட்டுமல்ல எவராலுமே இப்போராட்டத்தை தடுக்க முடியாது போகலாம். இவ் எழுச்சி தமிழீழம் நோக்கி நகர்வதையும் தடுக்க முடியாது. இந்தச் சூழல் வருவதை மேற்குலகோ, இந்தியாவோ விரும்பவில்லை.

## ஒருபுறம் சீன, பாக். ஆதிக்கம் மறுபுறம் மேற்குலக ஆதிக்கம்

இந்தியாவைப் பொறுத்தவரை இரண்டு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. முதலாவது சீனாவினதும், பாகிஸ்தானினதும் ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்து வருவதை எவ்வாறு தடுப்பதென்பதாகும். சிங்கள சமூகமும், இந்தியாவை விட சீனா, பாகிஸ்தான் சார்பு நிலையை இலங்கை எடுப்பதையே விரும்புகின்றது. சிங்கள சமூகம் என்றைக்குமே இந்தியாவிற்கு ஆதரவாக இருந்ததில்லை. இதனால் தனது நிகழ்ச்சி நிரலுக்குள் இலங்கையைக் கொண்டு வருவதில் இந்தியா தோல்வியையே தழுவி வருகின்றது.

இத்தோல்வி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆட்சியிலிருக்கின்ற எல்லாக் காலங்களிலும், இந்தியாவிற்கு ஏற்படுவது வழமைதான். ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக் காலத்தில் இங்கு மேற்கின் ஊடுருவலுக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் இங்கு சீனாவின் ஊடுருவலுக்கும் இந்தியா முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

மேற்குலகத்தின் ஊடுருவலின் போது இந்தியா, இலங்கை அரசிற்கு எதிராக கடுமையான நிலையினையே எடுப்பதுண்டு. இலங்கையிலுள்ள எதிர்க்கட்சியையும் அதற்காக உச்ச வகையில் பயன்படுத்துவதற்கு இந்தியா தவறுவதில்லை. சிங்கள சமூகத்திடமும் மேற்குலக எதிர்ப்பு நிலை தீவிரமாக இருப்பதினால் சிங்கள இனவாத சக்திகள் அதற்கு வலிமையான ஆதரவினை வழங்கி நிற்கும். இதனால் இந்தியாவின் செயற்பாடும் இலகுவாகவிடும்.

## சலுகைகள் மூலம் சமாளிப்பு

ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆட்சிக் காலத்தில் அதன் சீன, பாகிஸ்தான் சார்பு நிலைக்கு எதிராக இவ்வாறான எதிர்ப்பு நிலையினை எடுக்க முடியாது. சீனா, பாகிஸ்தான் சார்பு நிலையை சிங்கள இனவாதிகள் ஆதரிப்பதாலும், ஐக்கிய தேசிய கட்சி சீனா, பாகிஸ்தானை வெளிப்படையாக எதிர்க்க தயாரில்லாமல் இருப்பதனாலும் கடுமையான எதிர்ப்பு நிலையை எடுக்க இந்தியவால் முடிவதில்லை.

இதனால் பல சலுகைகளைக் கொடுத்து இலங்கை ஆட்சியாளர்களை வளைத்துப் போட இந்தியா முயற்சிப்பதுண்டு. இவ்வளைப்பின் மூலம் தனக்கெதிராக செல்லவிடாது அது இலங்கையைத் தடுப்பதுண்டு. ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் (1964), ஸ்ரீமா - இந்திரா ஒப்பந்தம் (1974), கச்சத்தீவு ஒப்பந்தம் (1974) என்பவற்றை இந்த வகையிலேயே அதிக விட்டுக் கொடுப்புகளைக் கொடுத்து அது கைச்சாத்திட்டிருந்தது.


மஹிந்த

இதற்காக மலையக மக்களின் நலன்களையும், தமிழக மீனவர்களின் நலன்களையும் விலையாகக் கொடுக்கவும் அது தயங்கவில்லை.

இவ்வாறான வரலாற்று நிலையே தற்போதும் இந்தியாவிற்கு ஏற்பட்டுள்ளது. வன்னிப் போரின் போது தமிழ் மக்களின் நலன்களையும், தமிழக மீனவர்களின் நல்ன்களையும் விலையாகக் கொடுத்து இலங்கை அரசுடன் இணைந்து போரை அது நடத்தியது. எனினும் சீன ஊடுருவலையோ, தென்னிலங்கை அதிகளவில் சீனா நோக்கிச் சரிவதையோ இந்தியாவால் தடுத்து நிறுத்த முடியவில்லை. அந்த ஊடுருவல் இந்தியாவின் கைகளுக்கு அப்பால் சென்றுவிட்டது. மியன்மார் போன்ற நிலைக்கு அது இன்னமும் வராவிட்டாலும் அதனை நோக்கி வேகமாகச் சரிந்து கொண்டிருக்கின்றது.



## இந்தியாவை முடக்கும் முயற்சி

இலங்கை அரசு தென்னிலங்கைக்குள் இந்தியாவைக் கால் பதிக்க விடாமல் வடக்கு - கிழக்கில் மட்டுப்படுத்த முயற்சிக்கின்றது. ஆனால் இந்தியாவிற்கு வடக்கு-கிழக்கு மட்டும் போதுமானதாக இல்லை. அதற்கு முழு இலங்கையுமே தேவை. வடக்கு - கிழக்கு மட்டும் தேவையாக இருந்திருந்தால், தமிழ் மக்களின் போராட்டத்தை அது ஆதரித்திருக்கும்.

வட - கிழக்கில் வலிமையாக கால்பதிப்பதற்கும் தமிழ் மக்களின் ஆதரவும் அதற்கு இல்லை. சம்பூர் பிரதேசத்தை அணு மின் நிலையத்தைச் சாட்டாக வைத்து இந்தியா ஆக்கிரமித்தமை தமிழ் மக்களிடம் கோபத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்தியாவின் நலன்களுக்காக போரின் போது தமிழ் மக்களின் நலன்களை அது விலையாக கொடுத்தமையையிட்டும், தமிழ் மக்கள் அதிருப்தியுற்றுள்ளனர்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஏழாலை கண்ணகி விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டப் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் சம்பியனானது. வீரர்கள் போட்டியில் ஈடுபட்டிருப்பதை முதலாவது படத்திலும், வெற்றிக்கேடயங்களை வலி.தெற்குப் பிரதேச சபையின் செயலாளர் திருமதி சுலோச்சனா முருகேசன், யாழ்.உதைபந்தாட்ட லீக் தலைவர் எஸ்.அன்ரனிப்பிள்ளை ஆகியோர் வழங்குவதை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும், வெற்றிபெற்ற பாடும்மீன் அணியை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: நேசன்)

# குமாரசுவாமி ஞாபகார்த்த அரையிறுதி ஆட்டங்களில் கே.சி.சி.சி., ஜொலிஸ்ரார் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.29

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினால் அமரர். பி.எஸ். குமாரசுவாமி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் 'ருவென்ரி - 20' கிரிக்கெட் போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அரை இறுதியாட்டங்களில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி, ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணிகள் வெற்றிபெற்றன.

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடந்த இந்த அரை இறுதியாட்டங்களில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெயராஜ் 65 ஓட்டங்களையும், சுதகரன் 63 ஓட்டங்களையும் உமாதரன் ஆட்டம் இழக்காமல் 48 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் காமாட்சி விளையாட்டுக் கழக வீரர்களான திலீபன் 42 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும், ஜெயறூபன் 23 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் நிஷான் 30 ஓட்டங்களை கொடுத்து ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினார்கள்.

201 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக்களம் இறங்கிய காமாட்சி விளையாட்டுக்கழக அணி 17.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

நிரோசன் 25 ஓட்டங்களையும், அரவிந்தன், 27 ஓட்டங்களையும், மோகன்குமார் 31 ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரர்களான நாதன் 21 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் உமாதரன் 30 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், பிரதீபன் 30 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டுவிக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள். இதில் ஜொலிஸ்ரார் வி.க. வெற்றிபெற்றது.

மதியம் இடம்பெற்ற இரண்டாவது அரை இறுதியாட்டத்தில், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி 20 ஓவர்களில் ஏழு விக்கெட்டினை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் வல்லவகுமரன் 44 ஓட்டங்களையும், கேதீஸ் 20 ஓட்டங்களையும், ஐங்கரன் 18 ஓட்டங்களையும், பிரதீபன் 21 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக வீரர்கள் வென்ஜோய், தசிகன், கிருஸ்ணச்சந்திரன், சதீஸ்கண்ணா, நிரேன், சுலக்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினை வீழ்த்தினார்கள்.

182 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியெனக்களம் இறங்கிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 14.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 59ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பந்து வீச்சில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி வீரர்கள் நதீசன் 13 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் பிரதீபன் ஏழு ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ஐங்கரன் ஓட்டம் எதனையும் கொடுக்காமல் மூன்று பந்து வீசி இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

இதில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (50- 23)

# உதயன் அனுசரணையுடன் றோட்டறக்ட் கழகம் நடத்திய சதுரங்கச் சுற்றுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.29

**15 வயதின்கீழ் ஆண்கள்**

எஸ்.ஆனந்தசயன்-யாழ்.ஹாட்லிக் கல்லூரி, எஸ்.சஞ்சயன்-யாழ்.ஹாட்லிக் கல்லூரி, ஆர்.மதுஷன்-யாழ்.ஹாட்லிக் கல்லூரி, ஆர்.ஜனார்த்தனன் - மகாஜனக் கல்லூரி, கே. கஸ்மன்-அச்சுவேலி மத்தியகல்லூரி, எஸ்.ஜெயராஜ்-மகாஜனக் கல்லூரி, பி. அருண்ராஜ- அச்சுவேலி மத்தியகல்லூரி, எஸ்.சதீஸ்கரன்-நீர்வேலி மெ.மி.வித்தி., ஆர். மகிந்தன்- மகாஜனக் கல்லூரி, எஸ். றொஷான்-அச்சுவேலி மத்தியகல்லூரி.

**15 வயதின் கீழ் பெண்கள்**

எஸ்.தரண்யா-மகாஜனக்கல்லூரி, ஐ.அனோசா-வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, என்.பிரிந்தா- மகாஜனக் கல்லூரி, ரி.மிதுஷா-மகாஜனக் கல்லூரி, எஸ். பிரியதரியனி-மீசாலை விக்னேஸ்வரா வித்தி., பி.மாதங்கி-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, கே.டயானி-சுதுமலை வடக்கு தமிழ் ம.வி., எஸ்.பிரணவி-வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை, எம்.சஜிலா-வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, கே.சஞ்சிகா-மகாஜனக் கல்லூரி.

**17 வயதின் கீழ் ஆண்கள்**

ஏ.பிரதாபன்-பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, ரி.சுதாகரன்-பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, எஸ்.நிர்மலராஜா- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, எஸ். டினேஷ்-பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, எஸ். மேகலதன்- யாழ்.இந்துக் கல்லூரி, என்.லவலோயன்-யாழ்.இந்துக் கல்லூரி, எஸ். கஜலக்சன்-யாழ்.இந்துக்கல்லூரி, பி.லஜிதரன்-மகாஜனக் கல்லூரி, பி.பிரகாந்- யூனியன் கல்லூரி, எஸ்.பிரசாந்-பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

**17 வயதின்கீழ் பெண்கள்**

எஸ்.மாதுளா-வட இந்து மகளிர் கல்லூரி, வி.கஸ்.தூரி-சுதுமலை வடக்கு தமிழ் ம.வி., பி.ஜோய்லினி-வட இந்துமகளிர் கல்லூரி, ஜி.திவ்யா-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., ஆர்.ரேணுகா-வடஇந்து மகளிர் கல்லூரி, பி.சரோதினி-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., எஸ்.நிரோசினி-வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, எஸ். சௌமியா-வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, எஸ். நிவேதிகா- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, வி. திலக்சி-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., கே.அபிராமி- சுதுமலை வடக்கு தமிழ் ம.வி.

**19 வயதின்கீழ் ஆண்கள்**

ஆர்.டிலக்ஷன்-கொக்குவில் இந்துக் கல்லூரி, பி.பாவலன்-பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, பி.நர்த்தனன்-யாழ். இந்துக் கல்லூரி, ஆர்.நிரோஜன்-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., கே.மாலவன்- யாழ். இந்துக் கல்லூரி.

**19 வயதின்கீழ் பெண்கள்**

என்.கௌசிகா-வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, பி.லக்சிதா-மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை, கே.திவ்யா- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., பி.ஜெனித்தா-மகாஜனக் கல்லூரி, எஸ்.மயூரா- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

**திறந்தபோட்டி ஆண்கள்**

எஸ்.நிர்மலராஜா-பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, பி.பாவ லன்-பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, ஜே.திரோஜன்-யாழ்.இந்துக்கல்லூரி.

**திறந்தபோட்டி பெண்கள்**

எஸ்.வித்தியாராணி-யாழ்.பல்கலைக் கழகம், எஸ்.ரதிகா-யாழ்.பல்கலைக்கழகம், எஸ்.சிவப்பிரியா-யாழ்.பல்கலைக்கழகம். (50)

### அமலசீலன் ஞாபகார்த்தமாக—

# சென். ஜோன்ஸ் கல்லூரி நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.29

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் உபஅதிபர் ஜே. அமலசீலன் ஞாபகார்த்தமாக சென். ஜோன்ஸ் கல்லூரி இரண்டாவது வருடமாக நடத்தும் 13 வயது உட்பட அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி, சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயம், சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை, மணற்காடு றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம், குருநகர் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம், வட்டுக்கோட்டை யாழ்ப்பணக் கல்லூரி ஆகிய 10 பாடசாலைகள் பங்குபற்றுகின்றன. (50- 23)

### குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# சென்றல்- சென்ஜோன்ஸ் சிநேகபூர்வ ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.29

யாழ். மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ், கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை மதியம் ஒரு மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில 14,16,18 வயதுப் பிரிவு அணிகள் மோதுகின்றன. (50- 23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.29

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களின் ஆண், பெண் அணிகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ள ஆண்களுக்கான ஆட்டத்தில் கோப்பாய் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (50-23)

# சிவசக்தி வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட்; சாவகச்சேரி ஸ்ரீமுருகன் அணி சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக்.29

சாவகச்சேரி சிவசக்தி சைக்கிள் சென்ரரின் அனுசரணையுடன் சங்கத்தானை முருகன் விளையாட்டுக் கழகத்தினர் நடத்திய சிவசக்தி வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் வி.க சம்பியன் கிண்ணத்தைத் தட்டிச் சென்றது.

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 34 கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான இப் போட்டிகள் கடந்த ஏழாம் திகதி தொடக்கம் சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவந்தன.

இறுதிப் போட்டியில் சாவகச்சேரி ஸ்ரீ முருகன் வி.க. கிரிக்கெட் அணியும் சாவகச்சேரி விண்டோஸ் வி.க. கிரிக்கெட் அணியும் மோதின.

ஸ்ரீமுருகன் அணி வீரர்களின் துல்லியமான பந்து வீச்சுகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 36 ஓட்டங்களுக்கு விண்டோஸ் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

37 என்ற இலகுவான வெற்றி இலக்குடன் களமிறங்கிய ஸ்ரீமுருகன் அணியினர் ஒன்பது பந்துப் பரிமாற்றங்களில் 4 விக்கட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இறுதி ஆட்டத்தில் சிறந்த ஆட்டநாயகனாக ஸ்ரீமுருகன் அணியைச் சேர்ந்த செ. லத்தீபனும், சிறந்த பந்து வீச்சாளராக அதே அணியைச் சேர்ந்த சி. சிவசங்கரும் தொடர் ஆட்ட நாயகனாக விண்டோஸ் அணியைச் சேர்ந்த ஸ்ராலினும் தெரிவு செய்யப்பட்டனர். (50- 207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல குணமும் தீய குணமும் பாபா தரும் விளக்கம்

பொறாமை என்பது 'அசூயை'. 'அசூயை' என்றால் குணங்கள் உள்ளவள் எனப் பொருள். 'அனசூயை' என்றால் குணங்களற்றவள் எனப்பொருள். அதனால் தான் அத்ரி மகரிஷியின் மனைவியான 'அனசூயா' மூன்று தேவர்களையும் (பிரம்மா, விஷ்ணு, சிவன்) தனது குழந்தையாக மாற்ற முடிந்தது. அக்குழந்தையே தத்தாத்ரேயர். பொறாமை என்பது மனிதனுடைய இயல்புக்கு நேர்மாறானது. செயற்கையானது. இதயத்தைச் சாராதது. இதயத்தின் குணங்கள் இயற்கையானவை.

நல்ல குணமும், தீய குணமும், உன்னுடைய நல்ல, தீய எண்ணங்களின் பிரதிபலிப்பே! பௌதிகமான இதயம் இடது பக்கம் இருக்கிறது. ஆன்மீக இதயம் வலது பக்கம் இருக்கிறது. இந்த இதயம் உன்னை சரியான பாதையில் செலுத்தும். அது கருணையும், தயையும் நிரம்பியது. ஆனால் மனிதன் தன் ஆசைகளை வளர்த்துக்கொண்டு, இதயத்தைக் களங்கப்படுத்திக் கொள்கிறான். அவன் ஆசைகளைக், கட்டுக்குள் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைக்க வேண்டும். உடலும், புலன்களும், எல்லாம் அவற்றுக்கான ஒரு எல்லைவரைதான் செயல்பட முடியும். உதாரணமாக, உடலின் உஷ்ணம், ரத்த அழுத்தம், பார்க்கும் சக்தி, கேட்கும் சக்தி இவையெல்லாம் ஓர் அளவுக்கு மீறிச்செல்ல முடியாது.



சாயி சிந்தனை

# பலாலி ஆசிரிய கலாசாலை நடத்திய ஆங்கில சொல்வதெழுதுதல் போட்டி முடிவு

யாழ்ப்பாணம்,ஒக்.29

பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஆங்கிலமன்றம் யாழ்.மாவட்ட றோட்டறிக் கழகம், யாழ்.நகர்மைய றோட்டறிக் கழகம் ஆகியவற்றுடன் இணைந்து வலிகாமம் வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய சொல்வதெழுதுதல் போட்டியில் வெற்றியீட்டியோர் விவரம் வருமாறு:.

*பிரிவு -1*

ச.திவ்யா - யாழ்ப்பாணக் கல்லூரி, சி.தனன்சிகா- மானிப்பாய் மகளிர்கல்லூரி, ஜெ.மனோஜ்- யாழ்ப்பாணக் கல்லூரி.

ஆறுதல் பரிசு பெறுவோர்

உ.உஷாலினி- மானிப்பாய் மகளிர் கல்லூரி, கு.கம்சத்வனி- மானிப்பாய் மகளிர் கல்லூரி, ம.தரண்யா- மகாஜனக் கல்லூரி, த.நிஷ்யா- மானிப்பாய் மகளிர் கல்லூரி, தி.தாரணி- விக்ரோறியாக் கல்லூரி, க.தனுசியா- மானிப்பாய் மகளிர் கல்லூரி, சி.ஆரபி- மானிப்பாய் மகளிர் கல்லூரி.

*பிரிவு11*

சி.ரமணன்- பண்ணாகம் மெய்கண்டான் ம.வி, ப.சதுர்வேதன்- யாழ்ப்பாணக் கல்லூரி, ந.சரண்யா- யாழ்ப்பாணக் கல்லூரி.

ஆறுதல் பரிசு பெறுவோர்

ம.டெனிஸ்டா- இளவாலை கன்னியர் மட ம.வி., சி.பிரணவன்- யாழ்ப்பாணக் கல்லூரி, ம.ஜூலியற்கொன்சி- இளவாலை கன்னியர்மட ம.வி., வி.பிரேமினி- மகாஜனக் கல்லூரி, ச.சஜீவன்- யாழ்ப்பாணக் கல்லூரி, தே.ஸ்ரீபன் றெஜினோல்ட்- யாழ்ப்பாணக் கல்லூரி, தே.காயத்திரி- விக்ரோறியாக் கல்லூரி.

(203)

# தென்மராட்சியில் 17 பயனாளிகளுக்கு காணி உறுதிகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,ஒக்.29

தென்மராட்சிப் பிரதேசத்தில் காணி அளிப்புத் திட்டத்தின்கீழ் பின்வரும் பயனாளிகளுக்கான காணி உறுதிகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றைப் பிரதேச செயலக காணிக்கிளையில் சமர்ப்பித்து எதிர்வரும் நவம்பர் நான்காம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

இராசு துரைராஜா (ஐந்து வீட்டுத்திட்டம் நாவற்குளி), சுப்பையா ஆச்சாரி நாராயணன் (ஐந்து வீட்டுத்திட்டம் நாவற்குளி), கதிரேசு சிவநேசன் (கெற்பேலி மத்தி), நாகமுத்து கந்தையா (கைதடி மேற்கு), ஐயங்கன் வள்ளி (கட்டைக்காடு - கைதடி), சின்னவன் வேலன் (கைதடி - எருதிடல் கலட்டி), சின்னத்தம்பி பொன்னன் (கைதடி - எருதிடல் கலட்டி), வேலன் பூதன் (கைதடி - எருதிடல் கலட்டி), தம்பன் பொன்னன் (மந்துவில் மேற்கு), சரவணை வள்ளிப்பிள்ளை (காரைப்பள்ளம் - கைதடி), கதிர்காமு சரவணை (காரைப்பள்ளம் - கைதடி), வாரித்தம்பி வினாசித்தம்பி (கைதடி மேற்கு - வேரவத்தை), முருகன் வள்ளிப்பிள்ளை (கண்டைக்காடு - கைதடி), முத்தர் சின்னப்பு (கேரவத்தை - கைதடி), இராமலிங்கம் சுப்பையா (கெட்டியன் கலட்டி - கைதடி), பொன்னுத்துரை தங்கரத்தினம் (செம்பாடு - எழுதுமட்டுவாழ்), ஸ்ரீஸ்கந்தராசா மனோகரி (மிருசுவில் படித்தமகளிர் குடியேற்றத்திட்டம்).

(50-207)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1134 நீலம்

வெற்றி இலக்கங்கள்

விருச்சிகம் 05 24 31 39

27-10-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 4,985,550/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 228,329 | 20/- | 4,566,580/- |
| 2 இலக்கங்கள் | 21,005 | 40/- | 840,200/- |
| 1 இல. + லக்கினம் | 20,825 | 60/- | 1,249,500/- |
| 2 இல. + லக்கினம் | 1,889 | 200/- | 377,800/- |
| 3 இலக்கங்கள் | 561 | 1000/- | 561,000/- |
| 3 இல. + லக்கினம் | 50 | 10,000/- | 500,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 4,985,550/- | 4,985,550/- |
| மொத்தம் | | | 13,480,630/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 272,667 | | 13,980,630/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

ஆலிந்தயே வாசனாவ

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

| | |
|---|---|
| கொழும்பு | 400650411-5-22 |
| மட்டக்களப்பு | 400642782-5-20 |
| இரத்தினபுரி | 400639643-9-31 |
| அனுராதபுரம் | 400634198-6-38 |
| கண்டி | 400644061-9-22 |



டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

K.K.S. வீதி, யாழ். தொ.பே: 0212228680


## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் வசந்தராசா



கரவெட்டி, வதிரி, கதிர்காம கோயிலடியைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் வசந்தராசா கடந்த (26.10.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அதிபர் இராசரத்தினம் - ஆசிரியை தருமநாயகி தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் லீலாவதி தம்பதியரின் அன்பு மருமகனும் தயாளகௌரியின் அன்புக் கணவரும் சௌமியா, யஸ்மியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரதீஸ்வரன் (பிரதேச செயலர், பருத்தித்துறை), றஞ்சன், ராதிகா (பட்டதாரி ஆசிரியை), தேவிகா (சுவிஸ்), உதயகுமார் (சமுர்த்தி முகாமையாளர்) ஆகியோரின் சகோதரரும் உமா(இலங்கை வங்கி, பருத்தித்துறை), கீதா, சிவானந்தன் (தலைமைக் காரியாலயம் இலங்கை வங்கி, கொழும்பு), இராசரத்தினம் (சுவிஸ்), மலர் தயாகரன் (கனடா), தயாமதி (ஆசிரியை, திருக்குடும்பக் கன்னியர் மடம், யாழ்ப்பாணம்), தயாநாதன் (ஜேர்மனி), தயாகுமாரன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் நகரசபை, சாவகச்சேரி), தயாளன் (மலேசியா), தயாநிதி (ஆசிரியை, நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை), தயாறஞ்சினி (ஆசிரியை, முழங்காவில் மகா வித்தியாலயம், கிளிநொச்சி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் டென்மார்க்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டென்மார்க். (90341) மனைவி, பிள்ளைகள்.

## ஓராண்டு நினைவலைகள்

கூடியிருக்க வந்தது 02 * 03 * 1964



வாடியிருக்க சென்றது 08 * 11 * 2008

### அமரர் சந்தனம் கலேந்திரன்

ஒற்றை வயிற்றில் வந்துதித்த உடன்பிறப்பே
ஒற்றையாய் நீ அமைந்து உதித்தால் ஒன்றானாயே!
உற்றவரை உன்னவரை உன்நினைப்பாய் ஆக்கிவிட்டு
இற்றைவரை இல்லாது இறைவனடி சேர்ந்தனையோ!

நெல்லியோடை, ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

ஓராண்டு நினைவோடு: அக்கா, அத்தான், மாமா, மருமக்கள். (90336)

## ஓராண்டு நீங்காத நினைவில்...!

தோற்றம்: 02.03.1964 அமரர் சந்தனம் கலேந்திரன் மறைவு: 08.11.2008



திதி: ஏகாதசி (29.10.2009)

பூக்கள் உதிர்ந்த போதும் வேர்கள் சாய்வதில்லை...
மழை ஓய்ந்தபோதும் மழைச்சாரல் தூறல் போடும்...
உங்கள் உயிர் பிரிந்தபோதும்
நீங்கள் எங்களின் உயிரில் துளிர்விட தேரும்...!

கண்ணில் போனது தூக்கம்
மனதில் எப்போதும் ஒரு ஏக்கம்
தண்ணீர் இல்லையெனில் உண்டாகும் தாகம்
போகவே போகவில்லை உங்களை இழந்த சோகம்...!

கடைசிக் காலத்தில் உங்களை எங்கள் கைகளில்
தாங்கவில்லையே; உயிரில் அல்லவா ஏந்தி வந்தோம்...!
எங்களைத் தனிமையில் விட்டதன்
தாக்கம் உங்களுக்குத் தெரிகிறதா.....?

தில்லையம்பதி, கோண்டாவில். (90337) உறவினர், நண்பர்கள்.

## 15 ஆவது பிறந்த நாளும் 65 ஆம் நாள் நினைவலைகளும்



### கருணாகரன் மாதுளன்

மாதுளா இத்தினத்தில் தானே எம் மடியில்
எம் உறவுகளை மகிழ வைத்தாய்
சிந்தாது குளிர எம்முடன் சிட்டாகச் சிறகடித்து
சின்னச்சிரிப்புடன் வலம் வந்தாய்
இன்று அறுபத்தைந்து நாள்கள் ஐயா!
உன் சிரித்த முகம் காணாது ஏங்கித் தவிக்கின்றோம்
உன் இனிய குரலைக் கேட்காது உன் உறவுகள்
புலம்புகின்றனர் மீண்டும் எம் உறவிற்குள்
மலர்வாய் எம் இனிய மகனே மாதுளா.....

உன் பிரிவால் ஏங்கி நிற்கும்:
அம்மா, அப்பா, சகோதரர், உறவுகள்.

54/12, கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹிலாரி கிளின்ரன் இஸ்லாமாபாத் வந்த வேளையில்

# பாகிஸ்தானில் நேற்று பயங்கரக் குண்டுத்தாக்குதல்: 80 பேர் பலி; 150 பேர் காயம்; எங்கும் மரண ஓலம்!



இஸ்லாமாபாத், ஒக். 29

பாகிஸ்தானின் பெஷாவர் சந்தைப் பகுதியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற பயங்கரக் குண்டுத்தாக்குதலில் 80 பேர் கொல்லப்பட்டனர். 150 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். கட்டடங்கள் தீப்பற்றி எரிந்தன. புகை மண்டலங்கள் எழும்பி, வடமேற்கு நகரையும் மறைத்தன என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரன், உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமாபாத்தை வந் தடைந்துள்ள இத்தருணத்தில் இப்பாரிய குண்டுத்தாக்குதல் சம்பவம் சம்பவித்துள்ளது.

பெஷாவர் நகரின் பீபால் மண்டி என்னும் பகுதியில் இப்பாரிய குண்டு வெடித்தது. இக்குண்டுவெடிப்பில் பல கட்டடங்கள் சரிந்து விழுந்துள்ளன. பல கடைகள் தீப்பற்றி எரிந்தன. கட்டட இடிபாடுகளுக்குள் சிக்குண்டோரை மீட்பதில் மக்கள் மும்முரமாக ஈடுபட்டார்கள். மரணித்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என பொலிஸ் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

சந்தைப் பகுதியில் பெண்களுக்குத் தேவையான விற்பனைப் பொருட்களைக் கொண்ட கடைத்தொகுதி யில் இப்பாரிய குண்டு வெடித்துள்ளது. அதனால மரணித்தோரில் பெரும்பாலா னோர் பெண்களும், பிள்ளைகளுமாவர். ஆங்காங்கே மனித அவயவங்கள், இரத்த வெள்ளத்தில் சிதறிக் கிடந்தன என நேரில் கண்டவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்கள்.

''இடி இடிப்பதைப் போல குண்டு வெடித்தது. அயலிலுள்ள கட்டடங்கள் குலுங்கின. புகைமண்டலமும், தூசுப் படலமும் அப்பகுதியை மறைத்தன. மனிதர்கள் மரணித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். காயமடைந்து கிடந்த பலர் அபயக்குரலும், அவலக் குரலும் எழுப்பிக்கொண்டிருந்தனர்'' என நேரில் கண்ட மொஹம்மத் சித்திக் என்பவர் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

''படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டோரில் சொற்ப நேரத்துக்குள் பலர் உயிர் நீத்துள்ளனர். அநேகர் ஆபத்தான கட்டத்தில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர். உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்'' என வைத்தியசாலை அவசர காலச் சேவைப் பிரிவு அதிகாரி பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

''இந்தப் பாரிய குண்டுவெடிப்பில் 50 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்களாவர். குழந்தைகளுமடங்குவர். வைத்தியசாலையிலேயே அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது'' என நகர லேடிஸ் ரீடிங் வைத்தியசாலை அதிகாரி ஜபார் இக்பால், ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

''மக்கள் நடமாட்ட மிகுந்த வேளையில் இக்குண்டு வெடித்துள்ளது. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காருக்குளிருந்து இது வெடித்துள்ளது. இக்குண்டுவெடிப் போசை நகர் முழுவதும் கேட்டுள்ளது. அநேக கட்டடங்களும், மசூதியொன்றும் பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளன'' என பொலிஸ் அதிகாரி அன்வர் ஷா, ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

''ஒரு கட்டடத்தில் பரவிய தீ, துரிதமாக ஏனைய கட்டடங்களுக்கும் பரவியது. அப்பகுதி அகோர யுத்தக் களம் போலிருந்தது. ஓலங்களும், அவலக் குரல்களும் அப்பகுதியில் ஒலித்தன. எங்கும் பதற்றம் நிலவியது'' என நேரில் கண்ட மற்றுமொரு நபரான அக்குயில் உர் ரஹ்மான் தெரிவித்தார்.

''இடிபாடுகளுக்குள் அநேகர் சிக்குண்டுள்ளனர். மீட்புக் குழுக்கள் மீட்புப் பணிகளை முழுவீச்சில் மேற்கொண்டுள்ளன. அதேவேளை, மேலதிக மீட்புப் குழுக்களும் வந்தவண்ணமுள்ளன'' என குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் சேவைப் பிரிவு அதிகாரி சப்காத் மாலிக் குறிப்பிட்டார்.

தலிபான் தீவிரவாதிகளே இக் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளார்கள் என பாதுகாப்பு வட்டாரம் தெரிவிக்கின்றது. இம்மாத ஆரம்பம் முதல் பாகிஸ்தான் நகரங்களில் இவர்கள் தொடர் குண்டுத் தாக்குதல்களை நடத்தி வருகின்றார்கள் என்றும் மேற்படி வட்டாரம் தெரிவிக்கின்றது என இஸ்லாமாபாத்திலுள்ள பி.பி.ஸி. நிருபர் மார்க் டம்மெட் தெரிவிக்கின்றார்.

# இஸ்லாமாபாத்தில் பட்டப்பகலில் தாக்குதல் இராணுவத் தளபதியைக் கொல்ல முயற்சி!

இஸ்லாமாபாத், ஒக். 29

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் பட்டப்பகலில் இராணுவத் தளபதியின் கார் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் உயிர் தப்பினார்.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதியில் வசித்து வந்த தலிபான்கள், இப்போது பாகிஸ்தான் தலைநகரத்துக்கே வந்துவிட்டனர். பழங்குடியின மக்கள் பகுதியில் மட்டுமே தாக்குதலில் ஈடுபட்டு வந்த இவர்கள் சமீபகாலமாக தலைநகரிலும் தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

ராவல்பிண்டி இராணுவத் தலைமையகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 200 பேர் பலியாகியுள்ளனர். 5 நாள்களுக்கு முன்னர், மோட்டார் சைக்கிளில் வந்த தீவிரவாதிகள் ஓர் இராணுவத் தளபதி (பிரிகேடியர்) மொய்னுதீன் அகமதுவை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர்.

அதன் பின்னர் அவர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடிவிட்டனர். இந்தச் சம்பவம் போல செவ்வாய்க்கிழமை காலை ஒரு சம்பவம் நடந்தது. இஸ்லாமாபாத்தில் இராணுவத் தளபதி (பிரிகேடியர்) வாக்கர் அகமதுவின் வீட்டுக்கு எதிரே 2 பேர் காத்திருந்தனர். காலை 9 மணியளவில் இராணுவத் தளபதி தன் தாயாருடன் காரில் புறப்பட்டார். வெளியே காத்திருந்த தீவிரவாதிகள் அந்தக் காரை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர்.

இந்தத் தாக்குதலில் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். அவர் தாயாரும் காயமின்றி மயிரிழையில் உயிர் தப்பினார். துப்பாக்கியால் சுட்ட 2 தீவிரவாதிகளும் மோட்டார்சைக்கிளில் தப்பி ஓடிவிட்டனர்.

இந்தச் சம்பவம் பற்றி அவரது பக்கத்து வீட்டுக்காரர் அப்துல் கபூர் குறிப்பிடுகையில், ''வங்கிக்கு போவதற்காக பிரிகேடியர் காரில் புறப்பட்டார். அவர் தன் தாயாருடன் பின் இருக்கையில் உட்கார்ந்திருந்தார். தீவிரவாதிகள் காரின் முன்பகுதியை நோக்கி தான் சுட்டனர். இதனால் அவர்கள் உயிர் தப்பினர்'' என்றார்.

இந்தத் தாக்குதலில் காரின் முன்பக்கக் கண்ணாடிகள் உடைந்து சிதறின. தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளைப் பொலிஸார் தேடிவருகின்றனர். இந்தச் சம்பவத்துக்கு எந்த ஒரு அமைப்பும் இது வரை பொறுப்பு ஏற்கவில்லை. இருந்த போதிலும் தலிபான்கள்தான் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டு இருக்கவேண்டும் என அதிகாரிகள் நம்புகிறார்கள்.

## உலக அரங்கில்

# ஆப்கான் ஐ.நா. விடுதிக்குள் தாக்குதல்; 3 ஐ.நா. அதிகாரிகள் உட்பட 7 பேர் பலி!

காபூல், ஒக். 29

ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபூலிலுள்ள ஐ.நா. விருந்தினர் விடுதிக்குள் புகுந்து தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில், 3 ஐ.நா. அதிகாரிகள் உட்பட 7 பேர் கொல்லப்பட்டனர் என ஐ.நா. தெரிவித்தது.

இக்கட்டடத்துக்குள் தீவிரவாதிகள் புகுந்ததும், துப்பாக்கி வேட்டுகள் ஒலித்தன. குண்டுவெடிப்பும் இடம்பெற்றது. விடுதிக்கு மேல் புகைமண்டலம் எழுந்தது என நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்த விடுதி மத்திய காபூலின் ஷா-ஈ-நவ் மாவட்டத்தில் அமைந்துள்ளது. உள்ளே புகுந்த தீவிரவாதிகள், பலரை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளார்கள். தகவலறிந்து விரைந்து வந்த அமெரிக்கப் படைகளும், ஆப்கான் படைகளும் விடுதியைச் சூழ்ந்துள்ளன என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இத்தாக்குதலுக்குத் தலிபான்களின் அமைப்பு உரிமை கோரியுள்ளது. அத்துடன் இரண்டாம் கட்ட ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இன்னும் 10 நாள்களே உள்ளன. இத்தேர்தலைக் குழப்பியடிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட முதலாம் கட்டத் தாக்குதல் இதுவாகும் என்றும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

விருந்தினர் விடுதிக்குள் ஐந்து அல்லது ஆறு தீவிரவாதிகள் நிலைகொண்டிருக்கலாம். அடுத்தடுத்து துப்பாக்கிவேட்டுகள் ஒலித்தவண்ணமுள்ளன. அதேவேளை, பல வீதிகள் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன. தீவிரவாதிகள் தப்பிச் செல்லாதவாறு தடுக்க விடுதி முற்றுகையிடப்பட்டுள்ளது என ஆப்கான் பொலிஸ் பேச்சாளர் [illegible] தெரிவித்தார்.

## கடத்தப்பட்ட சிறுவர் 2,000 பேர் மீட்பு

பீஜிங், ஒக். 29

சீனாவில் கடத்தப்பட்ட 2 ஆயிரம் சிறுவர்கள் கடந்த ஆறுமாத கால தேடுதல் வேட்டையின்போது மீட்கப்பட்டுள்ளார்கள். சீனாவில் ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கான - சிலவேளைகளில் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் கடத்தப்பட்டு விடுகிறார்கள் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்துள்ளது.

சிறுவர் கடத்தலை முறியடிப்பதற்கான நடவடிக்கைகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல பாகங்களிலும் கடந்த ஆறுமாத காலமாக முழுவீச்சில் தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டது. இதில் 2 ஆயிரத்து 8 சிறுவர்கள் மீட்கப்பட்டார்கள். பெரும்பாலானோர் தம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் அது விவரித்துள்ளது.

# அமெ. - பாகிஸ்தான் உறவு பலப்படுத்தப்பட வேண்டும்

## ஹிலாரி கிளின்ரன்

இஸ்லாமாபாத், ஒக். 29

''அமெரிக்காவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே நல்லுறவு உண்டு. எனினும், இவ்வுறவை நாம் பலப்படுத்தவேண்டும்'' என அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரன், பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்தில் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டார்.

உத்தியோகபூர்வ மூன்று நாள்கள் விஜயத்தை மேற்கொண்டு ஹிலாரி கிளின்ரன் பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமாபாத்தை வந்தடைந்தார். இதையடுத் து, அவர் பத்திரிகையாளர்களிடம் பேசினார்.

இவரது வருகை, அமெரிக்காவிற்கும், பாகிஸ்தானுக்குமிடையிலான உறவில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

செய்தியாளர்கள் மத்தியில் ஹிலாரி கிளின்ரன் தொடர்ந்து பேசுகையில், ''எனது இந்த விஜயத்தின்போது, சிவிலியன்கள் தொடர்பான அநேக திட்டங்கள் குறித்து ஆராயப்படும். அத்துடன் அவற்றிற்கான முதலீடுகள் சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகளும் கைச்சாத்தாகும்'' என்றார்.

''அமெரிக்காவின் நோக்கங்கள் குறித்து, பலவாறான கேள்விகள் எழுந்துள்ளன. இரு நாடுகளுக்குமிடையிலான நீண்டகால உறவில் தற்போது சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. இது ஒரு துரதிஷ்டவசமான சந்தேகம். இதனை நான் நீக்குவேன்'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

பாகிஸ்தானில் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. அதிகாரிகளையும், அரச உடைமைகளையும் இலக்கு வைத்து தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இந்நிலைப்பாட்டை அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. அத்துடன் பாகிஸ்தானின் அணு ஆயுதங்களுக்கான பாதுகாப்பு குறித்தும் அது கவலை கொண்டுள்ளது. இந்நிலையில், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திடீரென பாகிஸ்தான் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

# ஆப்கானுக்கு கூடுதல் இராணுவத்தை அனுப்புவதில் அவசரப்படமாட்டேன்

## இராணுவச் சிப்பாய்கள் மத்தியில் ஒபாமா பேச்சு

வாஷிங்டன், ஒக். 29

''ஆப்கானிஸ்தானுக்கு கூடுதல் இராணுவத்தை அனுப்புவதில் நான் அவசரப்பட்டு முடிவு எடுக்க மாட்டேன். தேவையில்லாமல் நான் உங்கள் வாழ்க்கையை ஆபத்துக்குரியதாக்க மாட்டேன்'' என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, அமெரிக்க புளோரிடா மாநில ஜாக்சன்வில்லா என்னுமிடத்திலுள்ள கடற்படை விமான நிலையத்தில் இராணுவச் சிப்பாய்கள், பெண் சிப்பாய்கள் ஆகியோரின் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

''தேவை இருக்குமானால் மட்டுமே, உங்களை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்புவேன். ஏனெனில் உங்களால்தான் அது முடியும். உங்களுக்குத் தேவையான சாதனங்களையும், ஆதரவையும் வழங்குவோம்'' என் றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

''ஆப்கானிஸ்தானுக்கு மேலும் கூடுதலாக 40 ஆயிரம் இராணுவச் சிப்பாய்களை அனுப்ப வேண்டும்'' என இராணுவத் தளபதி மெக்கிறிஸ்டல் கோரியிருக்கிறார். கூடுதல் இராணுவத்தை அனுப்பாவிட்டால் அமெரிக்காவுக்குத் தோல்வி ஏற்படும் என்றும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுக்காட்டில் ராஜ்தானி ரயில் சிறைப்பிடிப்பு
# மேற்கு வங்கத்தில் நக்ஸல்கள் கைவரிசை



மிதுனபுரி, ஒக். 29

ஒரிசாவுக்குச் சென்று கொண்டிருந்த புதுடில்லி - புவனேஸ்வரம் 'ராஜ்தானி எக்ஸ்பிரஸ்' ரயிலை நக்ஸல் ஆதரவாளர்கள் மேற்கு வங்க மாநிலத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மறித்து தடுத்து நிறுத்தினர்.

ரயிலை ஓட்டிச் சென்ற சாரதி கே.அனந்தராவ், துணைச் சாரதி கே.ஜே.ராவ் ஆகிய இருவரையும் ரயிலிலிருந்து இறக்கி எங்கோ அழைத்துச் சென்றனர்.

அவ்விருவரும் விடுவிக்கப்பட்டனர் எனவும், அந்த ரயிலில் சென்ற பயணிகளை மீட்டுவர மற்றொரு ரயில் சம்பவ இடத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது எனவும் டில்லியில் ரயில்வே வட்டாரங்கள் செவ்வாய்க்கிழமை இரவு தெரிவித்தன.

நக்ஸல்களுக்கு எதிராக மேற்கு வங்க அரசும் பிற மாநில அரசுகளும் எடுத்துவரும் நடவடிக்கைகளை உடனே நிறுத்த வேண்டும், காட்டுப் பகுதிகளிலிருந்து பாதுகாப்புப் படைகளை உடனே வாபஸ் பெற வேண்டும், சிறையிலும், பொலிஸ் காவ லிலும் இருக்கும் நக்ஸல்களையும் நக்ஸல் ஆதரவாளர்களையும் உடனே விடுதலை செய்ய வேண்டும் என்ற 22 கோரிக் கைகளை வலியுறுத்தி செவ்வாய்க்கிழமை முழு அடைப்புக்கு, 'பொலிஸ் அக்கிரமங்களுக்கு எதிரான மக்கள் குழு'' (பி.சி.பி.ஏ) என்ற அமைப்பு அழைப்பு விடுத்திருந்தது. இது நக்ஸல் ஆதரவு அமைப்பு என்று சந்தேகிக்கப்படுகிறது.

இந்நிலையில் மேற்கு மிதுனபுரி மாவட்டத்தின் வனஸ் தலா என்ற இடத்தை நோக்கி புதுடில்லி - புவனேஸ் வரம் ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயில் சென்று கொண்டிருந் தது. ஜார்கிராம் என்ற இடத்தில் ரயில் பாதையின் குறுக்கே பெரிய மரம் வெட்டி சாய்க்கப்பட்டிருந்தது.

மரத்தில் மோதினால் பெரிய விபத்து ஏற்படும் என்பதால் ரயில் சாரதி ரயிலை அதன் அருகில் கொண்டுபோய் நிறுத்தினார். அப்போது காடுகளில் மறைந்திருந்த நக்ஸல்களும் அவர்களுடைய ஆதரவாளர்களும் வெளிப்பட்டு எஞ்சினிலிருந்த சாரதியையும் அவருடைய உதவியாளரையும் துப்பாக்கி முனையில் கீழே இறக்கி தங்களுடன் காட்டுக்குள் அழைத்துச் சென்றனர்.

தங்களுடைய கோரிக்கைகள் குறித்துப் பேசவும், தங்களுக்கு வாக்குறுதி தரவும் மத்திய ரயில்வே அமைச்சரும் மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்தவருமான மம்தா பானர்ஜியோ அல்லது மாநில உயர் அதிகாரிகளோ உடனே அங்கு வர வேண்டும் என்று நக்ஸல்கள் கோரிக்கை விடுத்தனர்.

நக்ஸல்கள் கோரியபடி பேச்சு நடத்தத் தயார் என்று மம்தா பானர்ஜியும் அறிவித்தார். ஆனால் அவருக்கு முன்னதாகவே மேற்கு வங்க தலைமைச் செயலர் அசோக் மோகன் சக்கரவர்த்தி, உள்துறைச் செயலர் அர்தேந்து சென், காவல்துறைத் தலைவர் பூபிந்தர் சிங் ஆகியோர் மேற்கு மிதுனபுரி மாவட்டத் தலைநகருக்குச் சென்றுவிட்டனர். அவர்கள் நக்ஸல் தலைவர்களுடனும் அவர்களுடைய ஆதரவாளர்களுடனும் பேசிவருகின்றனர்.

ரயில் மறித்து நிறுத்தப்பட்டாலும் அதில் உள்ள பயணிகள் பத்திரமாக உள்ளனர் என்று ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன.

சாரதிகளை நாங்கள் கடத்தவில்லை, பயணிகளை நாங்கள் துன்புறுத்தவில்லை, விரைவில் அனைவரையும் விடுதலை செய்துவிடுவோம் என்று பி.சி.பி.ஏ. அமைப்பின் தலைவர் சந்தோஷ் பாத்ர தெரிவித்தார்.

ரயிலையும் பயணிகளையும் மீட்க கூட்டுப் பாதுகாப்புப் படையினர் சென்றனர். மாணிக்கப் பாறை, ஜார்கிராம் கிராமங்களுக்கு இடையில் பலத்த துப்பாக்கிச் சண்டை நடக்கும் ஓசை கேட்டது என்று ஜார்கிராம் எஸ்.டி.ஓ.வான பி. உலகநாதன் என்பவர் தெரிவித்தார்.

## தலிபான்களுக்கு இந்தியா நிதியுதவியா? பாகிஸ்தான் பிதற்றுகிறது – அந்தோனி

தலிபான்களுக்கு இந்தியா நிதியுதவி அளித்து ஊக்கப்படுத்துகிறது என்ற பாகிஸ்தானின் குற்றச்சாட்டை பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

பாகிஸ்தானின் குற்றச்சாட்டு வெறும் பிதற்றல், அடிப்படை ஆதாரமற்றது. அர்த்தமற்றது என்று அவர் கூறினார்.

தலிபான் தீவிரவாதிகள் உலக அமைதிக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர். அவர்களுக்கு உதவியளிப்பதாகக் கூறுவது அபத்தமானது என்றும் அவர் கூறினார்.

டில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பாதுகாப்புத்துறை நிகழ்ச்சியில், பங்கேற்ற அவர், செய்தியாளர்களிடம் பேசியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு-

பாகிஸ்தானின் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில், தலிபான்களுக்கு இந்தியா நிதியுதவி அளித்து வருகிறது என முறைப்பாடு கூறினார். பாகிஸ்தான் வடமேற்கு மாகாண எல்லையில் உள்ள தலிபான்களுக்கு நிதி உதவியளித்து அவர்களை பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா தூண்டிவிடுகிறது. பாகிஸ்தானில் எப்போதும் அமைதியற்ற சூழ்நிலை நிலவ வேண்டும் என்பதற்காகவே இந்தியா இத்தகைய செயல்களில் ஈடுபடுகிறது என்றும் அவர் கூறினார். இந்தக் குற்றச்சாட்டை இந்திய வெளி விவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா ஏற்கனவே மறுத்துவிட்டார். தலிபான்களும் தலிபானின் கொள்கைகளும் வேரோடு அறுக்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலை - என்றார்.

**இந்தியச் செய்திகள்**

# முகாமிலுள்ளோரை விடுவிக்க இந்தியா உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்
## இந்தியக் கம்யூனிஸ்ட் வலியுறுத்து

கன்னியாகுமரி, ஒக். 29

முள்வேலி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களை உடனடியாக மீட்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - இந்தியக் கம்யூனிஸ்ட் மத்திய கட்டுப்பாட்டுக்குழு தலைவர் நல்லகண்ணு வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் முகாம்களில் தவிக்கும் தமிழர்களை மீட்க வலியுறுத்தி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் தமிழகத்தில் நேற்று 4 இடங்களில் பிரசாரப் பயணம் தொடங்கியது.

கன்னியாகுமரியில் பிரசாரப் பயணத்தை தொடக்கி வைத்த அவர், செய்தியாளர்களிடம் பேசியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் மின்சாரம் செலுத்தப்பட்ட முள்வேலி முகாம்களில் மூன்றரை லட்சம் தமிழர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் குடிக்க தண்ணீர், உணவு இன்றி 6 மாதமாக அவதிப்படுகிறார்கள்.

இந்தக் கொடூரத்தை ஐ.நா. சபை கண்டித்துள்ளது. மத்திய அரசு இதுவரை வாய் திறக்கவில்லை. சமீபத்தில் தமிழகத்தில் இருந்து இலங்கை சென்று திரும்பிய எம்.பி.க்கள் குழு, அங்கு முகாம்களில் தமிழர்கள் அவதிப்படுவதை நேரடியாக பார்த்துள்ளனர்.

வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதால் முகாம்களில் உள்ளவர்கள் பெரும் துயரத்திற்கு உள்ளாவார்கள். எனவே, அவர்களை உடனடியாக மீட்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

# தமிழக மீனவர் - ஈழத் தமிழரைக் காக்க இலங்கையில் மீண்டும் போர் மூளும்
## ஆணித்தரமாகக் கூறுகிறார் வைகோ

கொழும்பு, ஒக. 29

இலங்கைத் தமிழர்களையும், தமிழக மீனவர்களையும் காப்பதற்காக இலங்கையில் மீண்டும் போர் மூளும் என்றும், அதை பிரபாகரன் தலைமையேற்று நடத்துவார் என்றும் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் விழிப்புணர்வுப் பிரசாரப் பயணம் இராமேஸ்வரத்தில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

1983 இல் இருந்து தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்தி வருகிறது. இலங்கையில் உரிமைக்காகப் போராடிய லட்சக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். இந்த அத்துமீறல்களை நடத்திய இலங்கையை நமது மத்திய அரசு எச்சரிக்கவில்லை.

இந்தச் சூழலில் நாதியற்று கிடக்கும் தமிழக மீனவர்களையும் ஈழத் தமிழர்களையும் பாதுகாக்க இலங்கையில் மீண்டும் போர் மூளும். அதைப் பிரபாகரன் தலைமையேற்று நடத்துவார்.

கடந்த ஆண்டு பாகிஸ்தான் பயங்கரவாதிகள் மும்பையில் தாக்குதல் நடத்திய போது, பாகிஸ்தானுக்கு மத்திய அரசு கடும் எச்சரிக்கை விடுத்தது. அதே நேரத்தில் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தும் இலங்கை விடயத்தில் மௌனம் காக்கிறது.

இலங்கைக் கடற்படையில் சீனர்களும் இருக்கிறார்கள். நமது மீனவர்களை சிங்களவர்களுடன் சேர்ந்து சீனர்களும் தாக்குகிறார்கள்.

ஏற்கனவே, வடக்கிலும் கிழக்கிலும் இந்தியாவுக்கு எதிராக அத்துமீறித் தாக்குதல் நடத்திவரும் சீனா, தற்போது இராமேஸ்வரத்திலும் தாக்குதல் நடத்தி பெரும் நெருக்கடி தரத் தயாராகிவிட்டதையே இது காட்டுகிறது - என்றார்.

# தமிழ் ஈழம் அமையும்வரை ஈழ விடுதலைப்போர் ஓயாது
## பிரசார பயணக் கூட்டத்தில் டாக்டர் ராமதாஸ்

சென்னை, ஒக். 29

தமிழ் ஈழம் அமையும்வரை இலங்கை விடுதலைப் போராட்டம் ஓயாது - என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் பேசினார்.

இலங்கையில் முள்வேலி முகாம்களில் வதைபடும் தமிழர்களை விடுவிக்கக் கோரி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் ராமதாஸ் தலைமையிலான பிரசாரப் பயணத் தொடக்கக் கூட்டம் சென்னை மெமோரியல் ஹோல் அருகில் நடந்தது.

இந்தக் கூட்டத்தில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் பேசியவை வருமாறு -

ஈழ மண்ணில் சிறைபிடிக்கப்பட்டு முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள 3 லட்சம் தமிழர்களை விடுவிக்கக் கோரியும், அதேசமயம், தமிழ் ஈழம் மலர்ந்தே தீரும் என்ற அடிப்படையிலும் இந்தப் பிரசாரப் பயணம் 4 திசைகளில் இருந்து தொடங்குகிறது.

இலங்கை அரசைப் பொறுத்தவரை ஈழத் தமிழர்களை தங்கள் குடிமக்களாக என்றுமே கூறியதில்லை.

மற்ற விடுதலை போராட்டங்களை ஆதரித்த இந்தியா, இலங்கைப் போரை அங்கீகரிக்கவில்லை என்றால் என்ன காரணம். டில்லியில் இருக்கின்ற தமிழர்களுக்கெதிரான ஆதிக்க சக்திகள் தமிழனுக்கு தனி நாடு இருந்துவிடக் கூடாது என்ற அவர்களின் சூழ்ச்சியால் இது முற்றுப்பெறவில்லை. அதுமட்டுமின்றி தமிழ் இனத்தையே அழிக்கின்ற செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஈழத் தமிழர்கள் வேறு நாட்டவர் என்ற எண்ணம் தான் சிங்களவர்களிடம் மேலோங்கி இருக்கிறது. இனியும் அப்படிதான் இருப்பார்கள். உலக நாடுகள் இது விடுதலைப்போர் என்று இப்போதுதான் நினைக்கத் தொடங்கியிருக்கிறது. அதனால்தான் பொன்சேகாவுக்கு அமெரிக்கா போகத் தடை விதித்திருக்கிறது.

மஹிந்த ராஜபக்ஷ மீதுள்ள தமிழர்களின் ரத்தக்கறை காயும் முன்னர் தமிழக எம்.பிக்கள் அவருடன் கைகுலுக்கியுள்ளனர். பரிசு கொடுத்துள்ளனர், பரிசு பெற்றுள்ளனர். எப்படி இவர்களுக்கு மனம் வந்தது. எங்கள் குழுவைச் சேர்ந்த யாராவது சென்றிருந்தால் அப்படி கைகுலுக்கியிருப்பார்களா? அப்படி கைகுலுக்கினால், தமிழ்நாட்டு விமான நிலையத்தில் எங்கள் தொண்டர்கள் இறங்க அனுமதிப்பார்களா?

அவர்கள் அறிக்கையை முதல்வரிடம், பிரதமரிடம் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையை வெளியிடுங்கள், அந்த அறிக்கையில் அப்படி என்னதான் இருக்கிறது என்று பார்க்கிறோம்.

போர் முடிந்துவிட்டது என நாங்களோ, உலகத் தமிழர்களோ சொல்லவில்லை. இலங்கையும், இந்தியாவும்தான் சொல்கிறது. 5 ஆவது கட்ட இறுதிப் போராட்டத்தை நோக்கி எங்கள் பயணம் தொடங்குகிறது. முள்வேலி முகாமிலுள்ள தமிழர்களை விடுவிக்க வேண்டும். அவர்களின் பகுதிகளில் சிங்களவர்கள் அத்துமீறி நுழைந்திருக்கிறார்கள். அவர்கள் வெளியேறி அங்கு தமிழர்கள் மீண்டும் குடியேற வேண்டும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் ஜீவன், இந்திய கம்யூனிஸ்டு சார்பில் வீரபாண்டியன், சோழநம்பியார் உட்பட பலர் பேசினார்கள்.

பின்னர் டாக்டர் ராமதாஸ் தனது பிரசார பயணத்தைத் தொடங்கினார். அவர் கார் மூலம் அம்பத்தூர், தாம்பரம், செங்கல்பட்டு, மதுராந்தகம் வழியாக திண்டிவனத்தை அடைந்தார்.

# மீனவர் மீதான தாக்குதல் விவகாரம்; மத்திய அரசுக்கு விரிவான அறிக்கை
## டி.ஜி.பி. ஜெயின் தெரிவிப்பு

மண்டபம், ஒக். 29

தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையால் தாக்கப்படும் பிரச்சினை குறித்து மத்திய அரசுக்கு விரிவான அறிக்கை அனுப்பப்படும் - என்று டி.ஜி.பி. ஜெயின் தெரிவித்தார்.

கச்சதீவு அருகே தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், மீனவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் இராமேஸ்வரம் பகுதியில் அன்னியர் ஊடுருவும் வாய்ப்பு குறித்து ஆய்வு செய்வதற்கு டி.ஜி.பி. ஜெயின் நேற்று முன்தினம் மண்டபம் வந்தார்.

அவர் இந்தியக் கடலோரக் காவல் படை கொமாண்டிங் அதிகாரி ஷைனியுடன், ஹோவர்கிராப்ட் கப்பலில் சென்று, இந்திய சர்வதேச கடல் எல்லைப் பகுதி, தீவுப்பகுதிகள், இலங்கை அகதிகள் வந்திறங்கும் மணல் திட்டுகள் ஆகியவற்றை பார்வையிட்டார். அதன்பின்னர் மண்டபம் மெரைன் காவல்நிலைய அதிகாரிகளுடன் தீவுப்பகுதிகளில் பாதுகாப்பை அதிகரிப்பது குறித்து விவாதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண மாநகரசபையின் முதலாவது அமர்வு நடைபெறுவதற்கு முன்னதாக இடம்பெற்ற ஆரம்ப வரவேற்பு நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. முதல்வரும் ஏனையோரும் நல்லூர் முருகன் ஆலயத்தில் இருந்து அழைத்துவரப்படுவதையும், கொடிகள் ஏற்றப்படுவதையும், மதகுருமார், விசேட விருந்தினர்கள், அமைச்சர், முதல்வர் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: லக்ஸ்மன், உமா)

# யாழ்.நகரத்தை மீளவும் கட்டி எழுப்பும் குறிக்கோளுடன் ஒன்றிணைந்து செயற்படுவோம்

## முதல்வர் யோகேஸ்வரி தமது முதலாவது உரையில் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.29

எங்கள் மத்தியில் எத்தகைய கருத்து வேறுபாடுகளும் இல்லாது அனைவரும் யாழ்.நகரத்தை மீளவும் கட்டியெழுப்ப வேண்டும் என்னும் குறிக்கோளுடன் செயலாற்ற எல்லோரினது ஆதரவையும் மாநகராட்சி மன்றம் வேண்டிநிற்கிறது.

இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா நேற்று மாநகரசபையில் நிகழ்த்திய முதலாவது உரையில் கேட்டுக்கொண்டார்.

இரண்டாவது உலகமகா யுத்தத்தின் பின்னர் சாம்பல் மேட்டில் இருந்து வியக்கத்தக்க முறையில் யப்பான் அபிவிருத்தி கண்டுள்ளதைப் போன்று எமது யாழ்ப்பாணமும் ஒரு யப்பானாக மாறும் என்னும் நம்பிக்கை எமக்குண்டு - என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபை முதல்வர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் தேசிய ஐக்கியத்திற்கும் அச்சுறுத்தலாக இருந்துவந்த முப்பதுவருட கால யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், ஜனநாயக ரீதியான செயற்பாடுகள் நடைமுறைக்கு வந்தமையால் யாழ்.மாநகரசபைக்கான தேர்தல் நடைபெற்று மாநகர மக்களால் தெரிவுசெய்யப்பட்ட 23 ஆவது மாநகர மேயராக கடந்த 12.10.2009 இல் பதவியேற்றதன் பின்னர் முதலாவது மாதாந்த பொதுக் கூட்டத்திற்கு வருகைதந்துள்ள உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமைப்படும் அதே நேரம் எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாம் கடந்து வந்த பாதை மிகவும் கரடுமுரடானது என்பதுடன், நாம் பட்ட வேதனைகள், துன்ப துயரங்கள் எண்ணிலடங்காதவை என்பதை இச் சந்தர்ப்பத்தில் நினைவுகூர்வதுடன், எதிர்ப்பு அரசியல் நடத்தி, மக்களுக்கு எதனையும் பெற்றுக்கொடுக்கவில்லை என்பதை இச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டுகிறேன். இதன் விளைவாக காலாகாலமாக இந்த மண்ணில் வாழ்ந்தவர்கள் தற்போது புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் வாழ்ந்து வருகின்றார்கள். அத்தகையவர்கள் தமது சொந்த வாழ்விடங்களுக்கு மீண்டும் திரும்பிவருவதற்கு வழி சமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதுடன், நடந்து முடிந்துள்ள போரினால் நாம் எதனையும் சாதித்துவிடவில்லை என்பதையும் மாறாக எமது மக்களுக்கு மீள முடியாத உயிரிழப்பு, சொத்து இழப்பு என்பவற்றையே பெற்றுத்தந்துள்ளதை இச் சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

சமகால இருப்பை நியாயப்படுத்துவதற்காக எமது கடந்த கால வரலாற்றை நான் கொச்சைப்படுத்த விரும்பவில்லை. ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் அனைவரும் ஐக்கியப்பட்ட ஒரு நீதியான போராட்டம் நடந்துவந்ததும் பின்னர் தாங்கள் மட்டும் ஆளவேண்டும் என்னும் மேலாதிக்க சிந்தனை தோன்றியதால், தாங்கள் மட்டுமே போராடத் தகுதிபெற்றவர்கள் என்ற ஏக பிரதிநி தித்துவ சிந்தனை இன்று எமது சமுதாயத்தை முள்ளின் மேல் விழுந்த சேலைபோன்ற நிலைமைக்கு தள்ளியுள்ளது. நாங்கள் தோற்றுப்போனதொரு சமூகம் அல்ல என்பதை நிரூபிக்கும் பொருட்டு, இங்கு கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை சரியான வழிமுறையில் நாம் பயன்படுத்த வேண்டும். கடந்த காலங்களில் கிடைத்த வாய்ப்பான சந்தர்ப்பங்களை நாம் பயன்படுத்த தவறிப் புறந்தள்ளியமை துரதிஷ்டவசமாகும்.

### ஓரணியில் திரள முன்வரவேண்டும்

1987 ஆம் ஆண்டு ஏற்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஒரு பொன்னான சந்தர்ப்பம் ஆகும். அந்த சந்தர்ப்பத்தையும் நாம் வலிந்துகட்டிப்புறந்தள்ளியமை தமிழ்பேசும் மக்களின் அரசியல் வரலாற்றில் நீங்காத வடுவாக காணப்படுகின்றது. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். எதிர்காலத்திலாவது நாம் சரியான திசைவழியில் வழிநடப்பதுடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையை இதய சுத்தியுடன் ஏற்று தமிழ் பேசும் மக்கள் ஓர் அணியில் திரள முன்வர வேண்டும் என்பதைக் கடந்து வந்த பாதைகள் எமக்கு உணர்த்துகின்றன.

இந்த நிலையில் யதார்த்த அரசியல் எத்திசை நோக்கி செல்ல வேண்டும் என்பதை நாம் அவதானமாக நோக்க வேண்டும் என்பதுடன், கடந்தகால அனுபவங்களில் இருந்து படிப்பினைகளைப் பெற்று சிறந்த சமுதாயத்தை அமைப்பதினை நோக்கி எமது சிந்தனையைச் செலுத்த வேண்டும்.

### தேர்தல் ஆண்டு வருகின்றது

இன்றைய நாளாந்த செய்திகளை நோக்குவோமாயின், எதிர்வரும் ஆண்டு தேர்தல் ஆண்டாக அமையப்போகின்றது என்பதை எம்மால் ஊகிக்க முடிகின்றது. இந் நிலையில் எமது அரசியல் உரிமைகளைப் பெற்றுத்தருவதற்காக, எமது அமைச்சருக்கு பேரம்பேசும் சக்தியைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும்.

தமிழ், முஸ்லிம் இனத்தவர்களது வாக்குப் பலம் ஜனாதிபதித் தேர்தலில் தீர்க்கமான பங்கை வகிக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. எனவே, தமிழ், முஸ்லிம் மக்கள் ஐக்கியப் படுவதன் மூலம் 13 ஆவது அரசியல் சீர்திருத்தமும் அதற்கு மேலதிகம் என்ற கருத்தினை நடைமுறைச் சாத்தியமாக்கி நாம் உரிமைகளைப்பெற்று சுதந்திரமாக வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்கக் கூடிய சக்தியாக நாம் மாறவேண்டும் என்பதை இச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இதேவேளை, அரசுடன் இணக்கப்பாடான நடைமுறையை கடைப்பிடிப்பதன் மூலம், எமது மாநகராட்சிக்கு உட்பட்ட மக்களின் சமூக, பொருளாதார, அபிவிருத்திக்குத் தேவையான உதவிகளைப் பெற்று மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவோம். எமது பிரதேசம் கடல்வளத்தால் சூழ்ந்துள்ளதால் அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மூலம் கரையோர மக்களின் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சிகள் மக்களுக்கு சுபீட்சமான எதிர்காலத்தை ஏற்படுத்தியுள்ள துடன், அங்கு ஒரு புதிய சுமுகமான சூழ் நிலை தோன்றியுள்ளதையும் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். மக்கள் எத் தகைய கெடுபிடிகளுமின்றி வரி, அறவீடுகள் இல்லாது தமது கடற்றொழிலை நின்மதியாக மேற்கொண்டு வருகின்றனர். அப் பகுதி மக்களுக்கு வசிப்பிட வசதிகள் போதாத காரணத்தால் அடர்த்தியாக வாழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளநிலையைக் கருத்தில் கொண்டு மாநகர சபை மாடிக் கட்டடங்களை அமைத்துக் கொடுப்பதற்கான திட்ட வரைவினை மேற்கொண்டுள்ளது.

### மாநகரசபையை எதிர்நோக்கும் முக்கிய சவால்

அபிவிருத்தி நோக்கிய எமது பயணத்தில் வருமானத்தைத் திரட்டுதல் மாநகரசபை எதிர்நோக்கும் முக்கிய சவாலாகும். ஏறக்குறைய கடந்த 30 வருடங்களாக எமது மாநகரத்திற்கு வருமானம் பெறும் வழிகள் மற்றும் துறைகள் மீளாய்வு செய்யப்படவில்லை என்பதுடன் மிகவிரைவில் அவற்றினை மீளாய்வு செய்து சபையின் வரு மானத்தை அதிகரிப்பதன் மூலம் அபிவிருத் தித் திட்டங்களுக்கு பணத்தினை முதலீடு செய்ய முடியும். இதன் மூலம் அதிகாரம் மிக்க மாநகரசபையை நாம் எமது பிரதேசத்தில் நிலை நிறுத்த முடியும். இத்தகைய இலக்கை அடைவதற்கு யாவரினதும் ஒத்துழைப்பை நாடி நிற்கிறேன்.

எமது மாநகரப் பெண்களின் வாழ்வாதாரத்திற்கான பயிற்சிநெறிகளை வழங்குவதற்காகவும் பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதற்காகவும் எமது அமைச்சர் டக்களஸ் தேவானந்தா அவர்களது அயராத முயற்சியினால் தமிழ்நாட்டின் தொழில் வல்லுனர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திப் பயிற்சியளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத் திட்டம் எதிர்வரும் காலங்களில் பெண்களுக்கான சுயதொழில் வாய்ப்பிற்கான சந்தர்பங்களை ஏற்படுத்தும் என்பது நிச்சயம்.

### கலாசார பிரிவு அமைத்தல்

எமது மாநகர சபையில் இதுவரைகாலமும் ஒரு கலாசாரப் பிரிவு இல்லாமை துரதிஷ்டவசமாகும். எமது மரபுவழி வந்த கலாசாரவிழுமியங்களை, பண்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் கலாசாரப் பிரிவினையை உருவாக்குவதற்கான முன்மொழிவுகள் வடமாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இதற்கான அளனி பற்றிய பட்டியலும் கையளித்துள்ளதால் இதற்கான அனுமதி மிக விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

சட்டவிரோத மாநகர சபை எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் தொடர்பான எமது சபையின் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு சகலரினதும் ஒத்துழைப்பினை நாடிநிற்கிறேன். இச் சபையில் எத்தகைய நீதியற்ற, நியாயமற்ற நடவடிக்கைகளுக்கு நாம் அனுமதி வழங்கப் போவதில்லை மக்கள் இதில் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஊழல் இல்லாத, லஞ்சம் இல்லாத நிர்வாகத்தினை நடத்துவதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பினை எதிர்பார்த்து நிற்கிறேன். எமது மக்களின் கருத்துக்களை எந்த நேரத்திலும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதை இச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

நவீன சந்தை கட்டடத் தொகுதியினை அமைத்தல், தற்போது காணப்படும் மரக்கறிச்சந்தையினை நவீன சந்தைக் கட்டடத் தொகுதியாக மாற்றுதல் என்பன எமது அமைச்சரின் சிந்தனையில் உருவான எண்ணக்கருவாகும். இதனை அமைச்சரின் ஊடாகப் பெறப்படும் நிதியைக் கொண்டு நிறைவேற்றுவோம் என இச் சபையில் உறுதியளிக்க விரும்புகின்றேன்.

ஒளிமயமான மாநகரம் என்ற கருப்பொருள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருவதினை நீங்கள் அனைவரும் நேரடியாகக் காண்கிறீர்கள். வாகனத்தரிப்பிடம் என்பது யாழ்.மாநகரம் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளில் ஒன்றாகும். இப் பிரச்சினையினை இனம்கண்டு வாகன தரிப்பிடத்திற்கான திட்டவரைபு சமர்ப்பிக்கப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதிக்காக காத்திருக்கின்றோம்.

### பாதுகாப்பு அரண்களை நீக்குதல்

கடந்தகால போர் வடுக்களில் இருந்து நாம் படிப்படியாக மீளவேண்டும் என்பதால், பாதுகாப்பு அரண்களும் படிப்படியாக அகற்றப்பட வேண்டும். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கிணங்க, நகரத்தின் பல்வேறு பகுதிகளில் பாதுகாப்பு அரண்கள் நீக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சியுள்ளவற்றையும் நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேபோன்று இடிபாடுகளை அகற்றி போர் வடுவற்ற சூழலைப் பேணி, நிம்மதியான வாழ்க்கையை உறுதிசெய்வதற்கும், சுதந்திரமான போக்குவரத்திற்கு வழியேற்றப்படுவதற்கும் கட்சிபேதமற்ற முறையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து, அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடனும், உரிமையுடனும் உழைக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இரண்டாவது உலக மகா யுத்ததின் பின்னர் சாம்பல் மேட்டில் இருந்து வியக்கத்தக்க முறையில் யப்பான் அபிவிருத்தி கண்டுள்ளதினைப் போன்று, எமது யாழ்ப்பாணம் ஒரு யப்பானாக மாறும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

எங்கள் மத்தியில் எத்தகைய கருத்து வேறுபாடுகளும் இல்லாது அனைவரும் யாழ்.மாநகரத்தை மீளவும் கட்டியெழுப்ப வேண்டும் என்னும் ஒரே குறிக்கோளுடன் செயலாற்றுவதற்கு எல்லோரினதும் ஆதரவினை மாநகராட்சி மன்றம் வேண்டி நிற்கிறது - என்றார்.

(அ-111-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறை படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்



# இலங்கை அகதிகளின் மீள்குடியேற்றத்தை அமெரிக்கா தொடர்ந்தும் அவதானிக்கும்

## கொழும்பிலுள்ள தூதரகம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 29

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்து அரசின் நலன்புரி முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அகதிகளின் மீள்குடியேற்றம் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளையும் அமெரிக்கா தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானிக்கும் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

அரசின் நலன்புரி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படும் பட்சத்தில் மாத்திரமே இலங்கையில் அரசியல் ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும் என்று ஆணித்தரமாக தான் நம்புவதாகவும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

இதுதொடர்பில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

முகாம் அகதிகள் 2 இலட்சத்து 50 ஆயிரம் பேரில் சுமார் 40 ஆயிரம் பேர் இன்னும் ஓரிரு வாரங்களுக்கு இடையில் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படுவர் என்று இலங்கை அரசு தற்போது அறிவித்துள்ளது. இலங்கை அரசின் இந்த அறிவிப்பால் நாம் உற்சாகம் அடைந்துள்ளோம்.

ஆயிரக்கணக்கான அகதிகள் இதற்கு முன்னரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் அறிகிறோம். எனினும், அரசின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை நாம் தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானிப்போம் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த அகதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படும் பட்சத்தில் மாத்திரமே இலங்கையில் அரசியல் ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும் என்று அமெரிக்கா உறுதியாக நம்புகின்றது.

இலங்கையில் சர்வதேச மனிதாபிமான அமைப்புகள் மேற்கொள்ளும் நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளுக்கு 66லட்சம் அமெரிக்க டொலர்களை அமெரிக்கா அன்பளிப்பாக வழங்கியுள்ளது. அதேநேரம் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரகத்தால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகதிகளுக்கான மனிதாபிமான உதவிகளுக்கும் 40லட்சம் அமெரிக்க உதவிகளை வழங்கியும் உலக உணவுத் திட்டத்தால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு காத்திரமான பங்களிப்புகளை வழங்கியும் அமெரிக்கா இலங்கைக்கு உதவி ஒத்தாசை செய்து வருகிறது. இலங்கை அரசுக்கு தொடர்ந்தும் தனது ஆதரவை வெளிப்படுத்தக்கூடிய வழிவகைகள் குறித்து ஆராய்ந்து வருகிறது.

கடந்த இரு வருடங்களில் அமெரிக்கா மனிதாபிமான பணிகளுக்காக ஒட்டுமொத்தமாக 8கோடியே 70 லட்சம் அமெரிக்க டொலர்கள் வரை செலவு செய்துள்ளது. அதில் இலங்கை அகதிகளின் உணவுத் தேவைக்காக மாத்திரம 70 லட்சம் டொலர் வரை செலவு செய்யப்பட்டுள்ளன.

## மருத்துவபீட மாணவன் அகால மரணம்

### துக்கதினம் அனுஷ்டிக்க அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.29

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் விக்னராஜா கௌரிபாலன் நேற்று அகாலமரணமானார்.

இவர் கிளிநொச்சி மாவட்டம் திருவையாறுப் பகுதியைச் சொந்த இடமாகக் கொண்டவர்.

அவரது மரணத்தை ஒட்டி, பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களையும் இன்றைய நாளை துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (அ)

## இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம்

இலங்கை மின்சராசபை ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி நேற்று சுமார் ஒரு மணி நேரம் கவனயீர்ப்புப் போராட்டமொன் றில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

வழமைபோல் தமது கடமைக்குச் சென்ற மின்சார சபை ஊழியர்கள், மதிய போசன இடைவேளையின் பின்னர் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த கவனயீர்ப்புப் போராட்டம் கொழும்பு லேக்கவுஸ் சுற்றுவட்டத்திற்கு அருகில் அமைந்துள்ள மின்சார சபையின் தலைமைக் காரியலயத்திற்கு முன்னால் நடைபெற்றது.

இலங்கை மின்சார சபையின் இணைந்த தொழிற்சங்க முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கவனயீர்ப்புப் பேராட்டத்தில் மின்சார சபையைச் சேர்ந்த பல ஊழியர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தக் கவனயீர்ப்புப் பேராட்டத்தின் மூலம் மக்களினதும், அரசினதும் கவனத்தை ஈர்த்துள்ளோம் எனத் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், இதற்கு அரசு தகுந்த நீடவடிக்கை ஏதனையும் எடுக்காத பட்சத்தில் நாடு தழுவிய பாரிய ஆர்ப்பாட்டங்களை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் எச்சரிக்கை விடுத்தனர். (சி)

## யாழ்.மாநகர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ்.மாந கர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, பிரதி முதல்வர் எஸ்.இளங்கோ, மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் நல்லூர் கந்தன் ஆலயத்தில் வழிபாட்டின் பின்னர் அங்கிருந்து மங்கள வாத்தியங்களுடன் முதல்வரின் அலுவலகம் வரை அழைத்து வரப்பட்டனர்.

முதல்வரின் அலுவலக வாயிலில் வைத்து அமைச்சர், முதல்வர் ஆகியோர் மலர் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து தேசிய கீதம் இசைக்க தேசியக் கொடியினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்றிவைத்தார். மாநகர சபையின் கொடியினை மாநகர முதல்வர் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். மறைமாவட்ட ஆயரின் பிரதிநிதி வண. பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் மாநகரசபை உறுப்பினர் ஜனாப் சுபியான், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, அரச அதிபர் கே.கணேஷ் உட்பட பலர் ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர்.

அதன் பின்னர் மாநகரசபை உறுப்பினர்களுக்கான பதவியேற்பு படிவம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. சமூக சேவைகள் அமைச்சர் படிவங்களை வழங்கினார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் ஒன்பதுபேரும் பதவியேற்பு படிவங்களை பெறுவதற்குச் சமுகமளிக்கவில்லை.

தொடர்ந்து யாழ்.அரச அதிபர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிறப்புரை ஆற்றியமையைத் தொடர்ந்து முதல்வரும் சிறப்புரை வழங்கினார். இந் நிகழ்வைத் தொடர்ந்து யாழ்.மாநகரசபை 23 ஆவது முதல்வர் தலைமையிலான வைபவரீதியான முதலாவது அமர்வு மாலை புதிய அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த அமர்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள் சமுகமளித்திருந்தனர்.

(அ-14-111-236)

## இலங்கையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய குழுக்களையும் நியமித்துள்ளது. எனினும், இவற்றில் எதுவும் உரிய பலன்களை அளிக்கவில்லை என்றும் மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகளுடனான மோதலின் போது இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் குறித்து ஆராய்வதற்காக இலங்கை அரசு நிபுணர்கள் குழுவொன்றை அமைக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை சர்வதேச விசாரணைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியாகும்.

அமெரிக்கா ஒக்டோபர் 22 ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுகள் பற்றிய தெளிவான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

துஷ்பிரயோகங்கள் குறித்து பதில் சொல்வதைத் தவிர்ப்பதற்காக அரசு மீண்டுமொரு முறை போலியான விசாரணையொன்றை நடத்த முயல்கின்றது என சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

கொடூரமான யுத்தம் குறித்த உண்மைகளை வெளிப்படுத்த சர்வதேச விசாரணைகளால் மாத்திரமே முடியும். இதன் மூலம் மாத்திரமே பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசு தான் சொந்த விசாரணையை மேற்கொள்ளப்போவதாகக் கூறி ஏமாற்றுவதை ஐக்கிய நாடுகள் சபையும், அமெரிக்காவும் நம்பக்கூடாது என்றும் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்தக் குற்றங்கள் குறித்து சுயாதீன சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தை வலியுறுத்துகிறோம்.

அரசின் உத்தேசக் குழு சுயாதீனமற்றது என்பதாலும் கடந்தகால ஆணைக்குழுக்களின் தவறுகள் காரணமாகவும் சுயாதீன சுதந்திர விசாரணைக்கு பதில் அரச விசாரணை இடம்பெறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை ஐரோப்பிய ஒன்றியமும், ஏனைய சர்வதேச செயற்பாட்டாளர்களும் இலங்கை அரசுக்கு வலியுறுத்தவேண்டும்.

அரசு தன்னை விமர்சிப்பவர்களை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என முத்திரை குத்தும் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் நம்பகத்தன்மை மிக்க - பக்கச்சார்பற்ற உள்ளூர் விசாரணைகள் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

யுத்தம் முடிவடைந்த பின்னர் மே 23 ஆம் திகதி நம்பகத்தன்மை மிக்க தேசிய விசாரணைகள் இடம்பெறும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், பான் கீ-மூனும் கூட்டாகத் தெரிவித்தனர்.

எனினும், அமெரிக்க அறிக்கை வெளியாகும் வரை அரசு இதற்கான முயற்சிகள் எவற்றையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## 2,088 பேர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் நேற்று இரவிரவாக அவர்களின் சொந்தஇடங்களுக்குகூட்டிச்செல்லப்பட்டனர்.

அதற்கு முன்னதாக குடும்பம் ஒன்றுக்கு 5,000 ரூபாவும் இரவு உணவும் வழங்கப்பட்டன. அதன்போது சமூகசேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், அரசாங்க அதிபர் கே.கணேஷும் பிரசன்னமாக இருந்தனர். (அ)

## இந்திய இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர் என கொழும்பிலுள்ள இந்திய தூதரக வட்டாரங்கள் கூறுகின்றன.

கொழும்பில் உள்ள பாதுகாப்பு அமைச்சில் நேற்று புதன்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது என தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

இதேவேளை இந்தச் சந்திப்பில் தற்போதைய இராணுவக் கட்டமைப்பு நிலைமைகள் குறித்தும் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் நிலைமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன என இலங்கை பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இந்தச் சந்திப்பு தொடர்பாக கொழும்பிலுள்ள இந்திய தூதரகமும் இலங்கை பாதுகாப்பு அமைச்சும் ஊடகங்களுக்கு எதுவும் தெரிவிக்கவில்லை.

அதேவேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடனான சந்திப்பில் இராணுவ ரீதியான தொழில் நுட்ப உதவிகளை பரிமாறிக்காள்வது மற்றும் கடல் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையடப்பட்டன என்று ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

## தமிழ் தேசியக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நிகழ்வு நடைபெறும் வரை மாநகர சபை வளாகத்தில் உள்ள தீயணைப்புப் பிரிவு முன்றிலில் அமர்ந்திருந்தனர்.

வரவேற்பு நிகழ்வை புறக்கணித்தது குறித்து தமிழரசுக் கட்சியின் தலைமை உறுப்பினர் மு.றெமிடியஸிடம் கேட்ட போது அவர் சொன்னதாவது:-

எமது மக்கள் முகாம்களிலும் அதற்கு வெளியிலும் சொல்லொணாத்துன்பங்களை தொடர்ச்சியாக அனுபவித்து வரும் நிலைமையில் நாம் ஆடம்பர நிகழ்வு ளை முற்றாகத் தவிர்த்து வருகிறோம்.

மேலும் அவர் குறிப்பிடும் போது இன்று மக்களின் துன்பங்களை நாம் புரிந்து கொண்டு ஆடம்பரமான - பகட்டான நிகழ்வுகள் எதிலும் நாம் பங்கேற்றுக் கொள்வதில்லை. ஏன் எமது மாநகரசபை உறுப்பினர் பதவியேற்பு நிகழ்வினையே மிக எளிய முறையிலேயே நடத்தினோம்.

ஜனநாயக நாட்டில் நல்லாட்சி நடக்க வேண்டும் எனில் அவரவர் தனகுரிய பணிகளை திறம்பட மேற்கொள்ளவேண்டும். நல்லாட்சி கோட்பாட்டிற்குக் முறணாக நடத்து கொள்ளும் நிகழ்வு இது. இங்கு நடப்பது ஓர் அரசியல் பிரசாரமே. அரசியல் பிரசாரக் கூட்டத்திற்கு நாம் செல்ல வேண்டிய அவசியமில்லை. அது மட்டுமின்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் எவரும் இந்த வரவேற்பு நிகழ்வுக்கு அழைக்கப்படவும் இல்லை பத்மினி சிதம்பரநாதன், சொலமன் சிறில் ஆகியோர் மாநகரசபை பிரதேசத்தை பூர்வீகமாகக் கொண்டவர்கள். அவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை.

இந்த நிகழ்வுக்கு சம்பந்தமற்றவர்கள் இந் நிகழ்வினை அரசியல் பிரசார யுத்திக்கான மேடையாக பயன்படுத்தி வருகின்றனர் - என்றார். (அ-14)

## மிருசுவிலில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த மக்களில் ஒரு தொகுதியினரையும் தெல்லிப்பழையைச் சேர்ந்த மக்களில் ஒரு தொகுதியினரையும் நேற்று மாலையில் அனுப்புவதற்கான ஏற்பாடுகளை செய்துவருவதாக நேற்றிரவு பிரதித்திட்டப் பணிப்பாளர் எஸ்.சுதர்சன் கூறினார்.

இதேவேளை கர்ப்பிணிப் பெண்களில் ஒரு சாராரையும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு அனுமதி பெற்ற மாணவர்கள் சுமார் நூறு பேரையும் வவுனியாவில் இருந்து அழைத்து வருவதற்கும் முன்னேற்பாடுகள் நடைபெறுவதாக அறியவந்தது. (அ)

## படகில் வந்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ஹெவின் ரூட் தெரிவித்துள்ளார்.

கப்பலில் உள்ளவர்கள் பலவந்தமாக இறக்கப்படுவார்களா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு, இந்த விடயத்தில் தாங்கள் மிகவும் சவாலான, கடினமான, குழப்பமான சூழ்நிலையை எதிர்கொள்கின்றனர் எனப் பிரதமர் ஹெவின் ரூட் பதிலளித் துள்ளார்.

கப்பலில் உள்ளவர்களை ஒழுங்கான முறையில், பலத்தைப் பயன்படுத்தாமல் இறக்க முடியும் என்பதே தனது எதிர்பார்ப்பு என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அகதி அந்தஸ்துக் கோரிக்கையை எந்த நாட்டிடம் விடுப்பது என்பதைத் தீர்மானிக்கும் உரிமை கப்பலில் உள்ள இலங்கையர்களுக்கு இல்லை என்றும் ஹெவின் ரூட் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

## தேவை - பக்க வடிவமைப்பாளர்கள்

★ பக்க வடிவமைப்பில் ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவம் உள்ளவர்கள் தேவை.
★ யாழ். மாநகர சபை பிரதேசத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
★ பத்திரிகைப் பக்கங்களை வடிவமைப்பதில் அனுபவம் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
★ முன் அனுபவம் மற்றும் சுய விவரங்களுடன் 31.10.2009இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.10.2009இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org